# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 30
பக்கங்கள்: 28

சுடர் 33 | கதிர் 254 | ஆடி 22ஆம் நாள் | செவ்வாய்க்கிழமை | 07 ஓகஸ்ட் 2018 | வள்ளுவர் ஆண்டு 2049


## நல்லூரில் பாதுகாப்புக்கு 500 பொலிஸார்

யாழ்ப்பாணம், ஓக.7
நல்லூர் ஆலயத் திருவிழாவில் இந்த ஆண்டு 500 பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப் >> 06



## நுண்நிதி நிறுவனங்களுக்கு தடை போட்டது சாந்தசோலைக் கிராமம்

வவுனியா, ஓக.7
நுண் நிதி நிறுவனங்கள் தமது கிராமத்துக்குள் நுழையக்கூடாது என்று தடை போட்டுள்ளது வவுனியாவில் உள்ள சாந்தசோலைக் கிராமம். தேடித் தேடி வந்து கடன் கொடுத்துக் கடனாளியாக்கி மக்களைத் துன்புறுத்துகின்றன இந்த நிறுவனங்கள் என்று தெரிவிக்கும் மக்கள், அதனால் கடன் கொடுப்பதற்காகவோ தவணைக் கட்டணத்தை வசூலிப்பதற்கா >> 23

## வீதியோரம் நின்ற ஹன்ரரில் மோதிச் சிதைந்தது ஹைஏஸ்

### வெளிநாட்டிலிருந்து வந்த பெண்ணும் தாயும் உயிரிழப்பு; மேலும் 6 பேர் காயம்

கிளிநொச்சி, ஓக.7
இயக்கச்சியில் நேற்று அதிகாலை நடந்த பயங்கர விபத்தில் வெளிநாட்டில் இருந்து வந்த மகளும் அவரை அழைத்து வரச் சென்றிருந்த தாயும் பரிதாபகரமாக உயிரிழந்தனர். மேலும் 6 பேர் காயமடைந்தனர். இவர்கள் அனைவரும் பருத்தித்துறையைச் சேர்ந்தவர்கள்.
வீதியில் நிறுத்தப்பட்டிருந்த ஹன்ரர் ரக வாகனத்துடன் இவர்கள் பயணித்த ஹைஏஸ் வாகனம் மோதியதில் விபத்து நிகழ்ந்தது. கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பய >> 06

# வடக்கு முதலமைச்சரின் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு

### தாக்கல் செய்தார் டெனீஸ்வரன்





யாழ்ப்பாணம், ஓக. 7
வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி விக்னேஸ்வரன் உள்ளிட்ட அமைச்சர்கள் மூவருக்கு எதிராக முன்னாள் அமைச்சர் டெனீஸ்வரன் மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார். அந்த வழக்கை விசாரணைக்கு ஏற்றுக் கொள்வது என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று >> 23

## பவுஸர் சில்லுக்குள் சிக்கி குடும்பஸ்தர் கோரச் சாவு

### கோப்பாயில் நேற்றுத் துயரம்



சாவகச்சேரி, ஓக.7
கைதடி கோப்பாய் வீதியில் நேற்று நடந்த விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். அவரது 12 வயது மகன் காயமடைந்தார்.
சாவகச்சேரி, சங்கத் >> 06

## வாள் வெட்டுச் சம்பவங்கள்; இதுவரை 22 பேர் கைது

யாழ்ப்பாணம், ஓக.7
யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலமாக நடந்த சமூக விரோதச் செயல்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் இதுவரை 22 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் நேற்று >> 06

## மகள் மீது வன்புணர்வு தாய் முறையீடு; தந்தை கைது

யாழ்ப்பாணம், ஓக. 7
சொந்த மகளை வன்புணர்வுக்கு உட்படுத்தினார் என்று தாய் கொடுத்த முறைப்பாட்டின் அடிப்படையில் தந்தை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். நேற்றுமுன்தினம் தெல்லிப்பளைப் பொலிஸ் பிரிவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.
சிறுமியின் தாய் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் இந்தக் கைது இடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர். முறைப்பாட்டைத் தொடர்ந்து சிறுமியின் தந்தை தலைமறைவாகி இருந்தார் >> 06

## இந்தியப் படகுகளை விடுவிக்கக் கூடாது

### வடக்கு முதலமைச்சர் வலியுறுத்து

மன்னார், ஓக.7
வடக்குக் கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களின் படகுகள், மீன்பிடி உபகரணங்களை மீள ஒப்படைக்கக் கூடாது என்று தெரிவித்தார் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன். >> 06

## புதிய அரசமைப்பு நாட்டுக்கு ஆபத்து

### அச்சப்படுகிறார் பீரிஸ்

கொழும்பு, ஓக.7
சட்டவிரோதமாகத் தயாரிக்கப்படும் புதிய அரசமைப்பால் நாட்டுக்குப் பெரும் ஆபத்து' என்று கூறியுள்ளார் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவரும் >> 23

## அரசை மாற்றியது அவர்களிடம் யாசகம் எடுப்பதற்கு அல்ல

### சிவமோகன் எம்.பி தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஓக.7
கடந்தகால ஆட்சியை மாற்றி புதிய அரசைக் கொண்டு வந்தது அவர்களிடம் பிச்சை எடுப்பதற்கு அல்ல. எமது உரிமைகளை வென்றெடுப்பதற்கு. இவ்வாறு வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் சி. சிவமோகன் தெரிவித்தார்.
முல்லைத்தீவு, ஒட்டுசுட் >> 23

## 'ரெலோ' விலிருந்து விலகுவதாக கணேஸ் வேலாயுதம் அறிவிப்பு

விரிவு - பக். 11

## சிறப்பு மருத்துவ நிபுணர்களுக்கு வரி குறைப்பு

கொழும்பு, ஓக.7
சிறப்பு மருத்துவ நிபுணர்களுக்கு விதிக்கப்பட்ட 24 சதவீத வருமான வரி 15 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது என்று கொழும்பு சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார். >> 06

## சட்டம் சமம் என்றாலே நாட்டில் பற்று ஏற்படும்

### இரா.சம்பந்தன் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஓக.7
சட்டம் அனைத்து இனத்தவர்கள் மீதும் சமமாகப் பிரயோகிக்கப்பட வேண்டும். இந்த விடயத்தில் ஒரு தலைப்பட்சமாக நடந்து கொண்டால் பெரும்பான்மையானாலும் சிறுபான்மையானாலும் நாட்டின் மீது அதிருப்தியே ஏற்படும்.
இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் >> 23

## அரசியல்வாதிகளின் சந்தர்ப்பவாத கருத்துக்களால் பாதிப்பு ஏற்படுகிறது

### மதத் தலைவர்கள் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஓக.7
அரசியல்வாதிகளின் சந்தர்ப்பவாதக் கருத்துகளால்தான் நல்லிணக்கத்துக்குப் பாதிப்பு ஏற்படுகின்றது. மிகவும் உணர்ச்சிபூர்வமான கருத்துக்களும் இன நல்லிணக்கதைப் பாதிக்கும் முதன்மை காரணியாகும்.
இவ்வாறு அஸ்கிரிய மற்றும் மல்வத்து பீடத்தின் தேரர்கள் உட்பட மதத் தலைவர்கள் தெரிவித்தனர்.
இன, மத சகவாழ்வின் ஊடாக நிலையான நாடு என்ற தொனிப்பொருளின் கீழ் சிறப்பு மாநாடொன்று நேற்றுக் காலை கண்டியில் சயாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே மதத் தலைவர்கள் இவ்வாறு தெரிவித்தனர். >> 06

## ஆட்சியைக் கைப்பற்றுவதற்கான கருவியாக புதிய அரசமைப்பை பயன்படுத்தவேண்டாம்

### இரா.சம்பந்தன் மகிந்த அணிக்கு இடித்துரைப்பு

யாழ்ப்பாணம், ஓக. 7
சிங்கள மக்கள் மத்தியில் பெரும் செல்வாக்கைக் கொண்ட முக்கியமான அரசியல் தலைவர் மகிந்த ராஜபக்ச மீண்டும் ஆட்சி அதிகாரத்தைப் பிடிப்பதற்காக 'புதிய அரசமைப்பைப் பயன்படுத்தவேண்டாம்' என்று அவரிடம் நான் நேரில் கூறியுள்ளேன். இந்த வேண்டு >> 06

# மீனவர்களது போராட்டத்துக்கு உரிய தீர்வு வழங்க வேண்டும்

## வவுனியா அந்தணர் ஒன்றியம் தெரிவிப்பு

**முல்லைத்தீவு,ஓக.7**

**முல்லைத்தீவுமாவட்டமீனவர்போராட்டத்துக்குவவுனியா மாவட்டஅந்தணர்ஒன்றியம்முழுஆதரவுதெரிவித்துள்ளது. இது தொடர்பாக வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியச் செயலாளர் ஜெ.மயூ ரசர்மா வழங்கியுள்ள செய்திகுறிப்பில் தெரிவிகப்பட்டுள்ளதாவது;**

இலங்கையில் குறிப்பாக வடபகுதி மிகவும் போரால் பாதிக்கப்பட்டு மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றது. மக்கள் மனங்கள் மாற்றப்பட்டுள்ளதே தவிர அவர்களின் வாழ்க்கை இன்னும் மாற்றமடையவில்லை.

கடலையே நம்பிக் கடல்வேளான்மை செய்யும் மக்களின் வாழ்வு பெரும் பரிதாப நிலையில் உள்ளது.

தமிழ் மீனவர்கள் தடைசெய்யப்பட்ட வலைகளைப்பயண்படுத்தித்தொழில் செய்யக்கூடாதுஎன்றுகூறிஅவர்களின் வாழ்வாதாரங்களைப் பறிக்கின்றனர். ஆனால்கரைவலையைப்பயன்படுத்தி முல்லைத்தீவு கடல்பரப்பில் பெரும்பான்மை இன மீனவர்கள் எங்கிருந்தோ வந்து தொழிலில் ஈடுபடுகின்றனர். இதனைத் தடுப்பவர்கள் எவரும் இல்லை. அதே தவறுகளை தமிழ் மீனவர்கள்செய்தால்குற்றம்கூறப்பட்டு சிறைத்தண்டனைகளை அனுபவிக்கின்றனர். இதே தவறை பெரும்பான்மையினர் செய்கின்றபோது அது ஏன் தவறு ஆகுவதில்லை.

மொத்தத்தில் தமிழர்களின் கலாசாரம் வாழ்வாதாரம் திட்டமிட்டு அழிக்கப்பட்டுவருகின்றது.

முல்லைத்தீவு மாவட்ட மீனவர்களின் போராட்டம் நியாயமானது. அவர்களுக்கு உரிய தீர்வு வழங்கப்படவேண்டும்.

அவர்களின் வாழ்வாதாரம் அவர்களிடம் கையளிக்கப்பட வேண்டும் அவர்கள் போராட்டம் வெற்றி பெறவேண்டும்.

அவர்கள் போராட்டமானது செயல் வடிவம்பெறவவுனியாமாவட்டஅந்தணர் ஒன்றியம் முழு ஆதரவைத் தெரிவிப்பதுடன் அவர்கள் இப்போராட்டம்வெற்றி பெறஇறைவனைப்பிரார்த்தனைசெய்கின்றோம் என்றுள்ளது.

(ரி4.110)

## தொடருந்தில் மோதி மாணவி உயிரிழப்பு

கொழும்பு,ஓக. 7

அம்பலாங்கொடையில்தொடருந்தில்மோதிப்பாடசாலை மாணவி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

அம்பலாங்கொடை நகரில்உள்ளதனியார்வகுப்பொன்றில் இருந்து இடைவேளை வழங்கப்பட்டபோது உணவருந்துவதற்காக தொடருந்து பாதை ஊடாக நடந்து சென்றபோதேவிபத்துஇடம்பெற்றதுஎனக்கூறப்பட்டது.

அளுத்கமையில்இருந்துகாலிநோக்கிபயணித்ததொடருந்தில்மோதியேமாணவி பலபிட்டிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

தொடன்விலையைச் சேர்ந்த 18 வயதுடைய மாணவி ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் அம்பலாங்கொடை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ரி4)

## ஆசிரியர்களுக்கான முன்சேவைப் பயிற்சி

யாழ்ப்பாணம்,ஓக.7

வடக்கு மகாணப் பாடசாலைகளுக்கு நேற்று முன்தினம் புதிதாக ஆசிரிய சேவை நியமனம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்களுக்கான முன்சேவைப் பயிற்சி நாளை தொடக்கம் எதிர்வரும் 28 ஆம் திகதி வரை 21 நாள்கள் வட்டுக்கோட்டையிலுள்ள யாழ்ப்பாணம் தொழிநுட்பக் கல்லூரியில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஆசிரியர்கள் இந்தப் பயிற்சிநெறியில் பங்குகொண்டு தமது சேவை நிரந்தரமாக்கப்படுதலுக்குத் தெவையான அடிப்படைத் தகுதியைப் பெற்றுக்கொள்ளுமாறும் முன்னைய ஆண்டுகளில் ஆசிரிய நியமனம் பெற்று இதுவரையில் இந்த முன்சேவைப் பயிற்சிநெறியில் பங்குபற்றி முன்சேவைப் பயிற்சியை நிறைவு செய்யாத ஆசிரியர்களும் இந்தப் பயிற்சி நெறியில் பங்குகொண்டு தமது சேவை நிரந்தமாக்கப்படுதலுக்குத் தேவையான அடிப்படைத் தக்தியைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

என வட மாகாணக் கல்வித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

(ரி4)

## வர்த்தக நிலையத்தில் தீ விபத்து

கொழும்பு,ஓக.7

வர்த்தக நிலைய தொகுதியொன்றில்ஏற்பட்டதீவிபத்தில்அனைத்துப்பொருள்களும்தீக்கிரையாகின.

கொழும்பு, புறக்கோட்டை மலிபன்வீதியிலுள்ளவர்த்தக நிலையத்திலேயே தீவிபத்து நேற்று ஏற்பட்டது எனப்பொலிஸார்தெரிவித்தனர்.

தீயணைப்புப் படையினரின் உதவியுடன் தீப் பரவல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

வர்த்தக நிலையத்தின் 8 இலட்சத்துக்கும் அதிகமான சொத்துக்கள் சேதமாகியுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

மின்னொழுக்கு காரணமாகவே தீ விபத்துஏற்பட்டது எனப் பொலிஸாரின் ஆரம்பகட்டவிசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

(ரி4)



வரலாற்றுச்சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்தத் திருவிழாவுக்கான பந்தற்கால் நடும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இதனைத்தொடர்ந்து கொடிச்சீலை வழங்குபவர்களுக்கான காளாஞ்சி வழங்கும் வைபவத்துக்காக பாரம்பரியமுறைப்படி காளாஞ்சி கொண்டு செல்லப்பட்டது.

(ரி4)



## ஆயுதங்கள் மீட்பு

மட்டக்களப்பு,ஓக.7

மட்டக்களப்பு பூலாக்காடு கிராம சேவகர் பிரிவிலுள்ள நூறு ஏக்கர்தவனைக்கண்டம்என அழைக்கப்படும்வயல்வெளி பிரதேசத்தில் ஆயுதங்கள் சில நேற்று மீட்கப்பட்டன.

எல்.எம்.ஜீஒன்றும்டி.56வகைதுப்பாக்கிஒன்றுமேமீட்கப்பட்டன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

வயலில்வரப்புகட்டும்பணிநேற்றுமுன்தினம்மேற்கொள்ளப்பட்டது.

இதன்போதுவயலில்ஆயுதங்கள்இருப்பதைஅறிந்தவயல் உரிமையாளரால் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது.இதனையடுத்துச்சம்பவஇடத்துக்குச்சென்றபொலிஸாரால் ஆயுதங்கள் மீட்கப்பட்டன.

சம்பவம்தொடர்பானமேலதிகவிசாரணைகளைவாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ரி4)

## முல்லைத்தீவில் நேற்று பொது நூலகங்கள் திறப்பு





முல்லைத்தீவு, ஓக.7

முல்லைத்தீவு, ஒலுமடு மற்றும் கரிப்பட்டமுறிப்பில் அமைக்கப்பட்ட பொது நூல் நிலையங்கள் நேற்றுத் திறக்கப்பட்டது. வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிவமோகன் நூல் நிலையப் பெயர்ப்பலகையைத் திரைநீக்கம் செய்து திறந்தார்.

ஒலுமடு

2017ஆம் ஆண்டு கிராமிய அபிவிருத்தி உட்கட்டமைப்புச் சிறப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தேசியக் கொள்கைகள் மற்றும் பொருளாதார அமைச்சின் கீழ் ஒதுக்கப்பட்ட 14 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் இந்த நூலகம் அமைக்கப்பட்டது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகனும், சிறப்பு விருந்தினர்களாக புதுக்குடியிருப்புப் பிரதேச சபைத் தவிசாளர் செ.பிறேமகாந் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் ஆகியோரும், வன்னிக்குறோல் கலாசாரப் பேரவையின் மாவட்டத் சி.நாகேந்திரராசா,பண்டாரவன்னியன் அறங்காவலர் கழக செயலாளர் சி.வேதவனம்,வன்னிக்குறோஸ் மகளீர்பேரவை தலைவி சு.வளர்மதி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

கரிப்பட்டமுறிப்பு

ஒட்டுசுட்டான் பிரதேசத்துக்குட்பட்ட கரிப்பட்டமுறிப்பு பழைய கண்டிவீதி புதியநகர் பகுதியில் அமைக்கப்பட்ட பொதுநூலகமும் மக்கள் பாவனைக்குக் கைளிக்கப்பட்டது. புதியசூரியன் விளையாட்டுக்கழக தலைவர் வே.கோகிலவரதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகனும், சிறப்பு விருந்தினர்களாக புதுக்குடியிருப்பு பிரதேச சபை தவிசாளர் செ.பிறேமகாந் மற்றும் பிரதேச சபை உறுப்பினர் இ.சத்தியசீலன் மற்றும் வன்னிக்குறோஸ் கலாசார பேரவையின் மாவட்ட தலைவர் சி.நாகேந்திரராசா, பண்டாரவன்னியன் அறங்காவலர் கழக செயலாளர் சி.வேதவனம்,வன்னிக்குறோஸ் மகளீர் பேரவை தலைவி சு.வளர்மதி எனப் கலந்து கொண்டனர்.

நூலகத்தின் பெயர்பலகையை புதுக்குடியிருப்பு பிரதேச சபை தவிசாளர் செ.பிறேமகாந் திரைந்க்கம் செய்தார். கட்டத்தை நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் நாடா வெட்டித் திறந்தார்.

(ரி4ரி3)



# யூரியா கலந்த சீனி விற்பனை சதொசவுக்கு ரூ. 6,000 தண்டம்

யாழ்ப்பாணம், ஓக.7

யூரியா கலக்கப்பட்ட சீனியை விற்பனை செய்தமைக்காக வவுனியாவில் உள்ள சதொச நிறுவனத்துக்கு நீதிமன்று 6 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. கடந்த வியாழக்கிழமை வவுனியா சதொசவில் பொருள்களைக் கொள்வனவு செய்ய வந்த ஒருவர் தனது தேவைக்காகப் பையொன்றை எடுத்துள்ளார். அதில் இருந்தது யூரியா என்பதை அறியாத அவர் சீனி என நினைத்து சீனிக் கொள்கலனுக்குள் கொட்டியுள்ளார். அதை அறியாத ஊழியர்கள் சீனியை விற்பனை செய்துள்ளனர்.

அதைக் கொள்வனவு செய்த வாடிக்கையாளர்களில் ஒருவர் சீனியில் இரசாயனப் பொருள் கலந்துள்ளது என்று தெரிவித்து மீளக் கொண்டு வந்து ஒப்படைத்துள்ளார். அதன்பின்னர் ஆராய்ந்தபோது சீனியில் யூரியா கலந்திருப்பது தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் வவுனியா பொலிஸாருக்கும், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கும் அறிவிக்கப்பட்டது. பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் விற்பனை நிலையம் சென்று ஆய்வுகளை மேற்கொண்டனர். சில சீனி மூடைகளைத் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தனர்.

இது தொடர்பில் சுகாதாரப் பரிசோதகர்களால் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்கை விசாரணை செய்த நீதிமன்று 6 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது. அதேவேளை, இந்தச் சம்பவத்தை அடுத்து வவுனியா சதொச நிறுவனத்தின் முகாமையாளர் மற்றும் பணியாளர் ஆகியோர் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என்று சதொச நிறுவனத் தகவல்கள் தெரிவித்தன. இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ந-110)



## துணுக்காய், மாந்தை கிழக்கில் பாலங்கள் மக்கள் பாவனைக்கு

முல்லைத்தீவு, ஓக.7

துணுக்காய் மற்றும் மாந்தை கிழக்கில் புதிதாக அமைக்கப்பட்ட பாலங்கள் நேற்று மக்கள் பாவனைக்குக் கையளிக்கப்பட்டது. கிராமியப் பாலங்கள் திட்டத்தின் கீழ் இந்தப் பாலங்கள் அமைக்கப்பட்டிருந்தன. புகழேந்திநகர் வீதிப்பாலம், பூவரசங்குளம் துணுக்காய் வீதிப்பாலம், கல்விளான் வீதிப் பாலம், பழையமுறிகண்டி கொக்காவில் இணைப்பு வீதிப் பாலங்கள் இரண்டு என 5 பாலங்கள் திறக்கப்பட்டன.

வடக்கு மாகாண சபை பிரதி அவைத் தலைவர் க.வ.கமலேஸ்வரன் நிகழ்வில் கலந்துகொண்டு பாலங்களை மக்கள் பாவனைக்குக் கையளித்தார்.

நிகழ்வில் வடக்கு மாகாண சபையின் பிரதி அவைத் தலைவர் க.வ.கமலேஸ்வரன், வீதிஅபிவிருத்தித் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் சிவநேசன், துணுக்காய் மற்றும் மாந்தை கிழக்குப் பிரதேச சபைகளின் தவிசாளர்கள், பிரதேச சபையின் உறுப்பினர்கள், மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ரி4)

## அடிக்கல் நடும் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஓக.7

திறந்த பல்கலைக்கழகத்தின் நுண்டலவாயில் திறப்பு விழாவும் புதியகட்டத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வும் நேற்று நடைபெற்றது. கட்டடத்துக்கான அடிக்கல்லை முதன்மை விருந்தினர் இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் அன்பழகன் அரியதுரை நட்டார். நிகழ்வில் இந்து, பௌத்த, முஸ்லிம், கிறிஸ்தவ மதச் சடங்குகள் நடைபெற்றன.

யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தின் உதவிப்பணிப்பாளர் கி.கந்தவேல் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் அன்பழகன் அரியதுரை, இலங்கை திறந்த பல்கலை கழகத்தின் பிரதி வேந்தர் போன்றோர் கலந்து கொண்டனர். (ரி4.113)





## முல்லை. மீனவர்களுடைய போராட்டம் தொடர்கின்றது

முல்லைத்தீவு, ஓக.7

சட்டவிரோத மீன்பிடியைத் தடுக்கக் கோரி முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள் நடத்திவரும் போராட்டம் நேற்று 5ஆவது நாளாகவும் தொடர்ந்தது.

இரவு, பகலாகத் தொடர்ந்து மீனவர்களால் மேற்கொள்ளப்பட்டுவரும் கவனவீர்ப்பு நடவடிக்கையில் அரசியல் பிரமுகர்கள் மற்றும் பொது அமைப்புகளைச் சார்ந்தவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு ஆதரவு தெரிவிக்கின்றனர்.

தொடர்ந்தும் முல்லைத்தீவு மாவட்டத்தில் சட்டவிரோத மீன்பிடித் தொழில்கள் இடம்பெறுகின்றன. இன்றும் (நேற்று) வெளிமாவட்ட மீனவர்கள் தடை செய்யப்பட்ட முறையான வெளிச்சம் பாய்ச்சி மீன்பிடிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர் என்றும் மீனவர்கள் தெரிவித்தனர்.

தடைசெய்யப்பட்ட சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட வெளி மாவட்ட மீனவர்களின் சில படகுகள் இன்றும் (நேற்று) கடற்பரப்பில் காணப்பட்டன. கடற்படையினர் அவர்களைக் கைது செய்யவில்லை. எமது மீனவர்கள் அப் படகுகளை கரைக்குக் கொண்டுவரும் முனைப்பில் இருந்தார்கள். நேற்று முன்தினம் கரைக்குக் கொண்டுவந்த வெளிமாவட்ட படகைப் பொலிஸார் பொறுப்பேற்காமலும், அசட்டையாக இருந்தமையைக் கவனத்திற் கொண்டு எமது மீனவர்களுக்கு அதனைத் தெளிவுபடுத்தி அதனைச் செய்யவில்லை என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்தார். (ற-ரி3)

## சீரான மாற்றல் இன்மையால் புற்றுநோய் பிரிவுக்கு ஆபத்து

யாழ்ப்பாணம், ஓக 7

தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் புற்றுநோய்ச் சிகிச்சைப் பிரிவு மருத்துவர்களின் இடமாற்றம் சீராக நடைபெறாவிட்டால் சிகிச்சைப் பிரிவை மூடும் நிலை ஏற்படும் என்று மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் தெரிவிக்கப்பட்டதாவது:

யாழ்ப்பாண மாவட்டத்தில் அதி நவீன வசதிகளுடன் சிறப்பான சிகிச்சையை தெல்லிப்பழை ஆதார மருத்தவ மனையின் புற்று நோய் சிகிச்சைப் பிரிவு வழங்குகின்றது. அங்கு மருத்துவர்களுக்கான அனுமதிக்கப்பட்ட ஆளணி 16 ஆக உள்ளபோதும், தற்போது 10 மருத்துவர்களே சேவையாற்றுகின்றனர். இவர்களுக்கான வருடாந்த இடம் மாற்றம் 4 வருடங்களுக்கு ஒருமுறை நடைமுறைப்படுத்தப்படுகின்றது. மீள் நிரப்பல் செய்யும் போது ஒரு மருத்துவமனையில் இருந்து இன்னோர் விரும்பிய மருத்துவ மனைக்கு செல்வார்கள். 4 வருடங்களுக்கு அதிகமாகத் தேவையின் நிமித்தம் கடமையாற்றிய 4 மருத்துவர்கள் தற்போது இடம் மாற்றம் பெற்றுச் செல்ல வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

வருடாந்த இடம் மாற்றத்துக்கான வேலைகளை கொழும்பு சுகாதார அமைச்சு மேற்கொள்ளும். பருத்தித்துறை ஆதார மருத்துவ மனையில் ஒருவரும், யாழ்ப்பாணம் போதனா மருத்துவ மனையில் இருவரும், கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் ஒருவரும் விடுவிக்கப்பட்டு இங்கேவர வேண்டும். அப்போதுதான் இங்கிருந்து மருத்துவர்கள் விடுவிக்கப் படுவார்கள்.

இந்தச் சீரான நிலமை ஏற்பட்டாலே எமது மருத்துவ மனையின் புற்று நோய் சிகிச்சை பிரிவைச் சிறப்பாக நடத்த முடியும். இங்கிருந்து விடுவிக்கப்படும் மருத்துவர்களுக்குப் பதில் மருத்துவர்கள் வராத நிலை காணப்பட்டால் சிகிச்சை வழங்க முடியாத நிலை ஏற்பட்டு புற்று நோய் சிகிச்சை பிரிவு செயற்படுதன்மை அற்றதாக மாறும். என்று தெரிவிக்கப்பட்டது. (ந-7)

## வவுனியா விபத்தில் இருவர் படுகாயம்



வவுனியா, ஓக.7

வவுனியாவில் நேற்று முச்சக்கர வண்டி விபத்துக்குள்ளானதில் இருவர் படுகாயமடைந்தனர். அவர்கள் வவுனியா பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

வவுனியா, திருநாவற்குளம் வீதியில் பயணித்த முச்சக்கர வண்டி எதிரே வந்த பேருந்துக்கு வழிவிட்டபோது கட்டுப்பாட்டை இழந்து மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

விபத்துத் தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ந-110)

## கால்நடைகளால் அழியும் மூலிகைச் செடி, கொடிகள்

### வடக்கு சுகாதார அமைச்சரிடம் சுட்டிக்காட்டு

மன்னார், ஓக.7

மன்னார், நறுவிலிக் குளத்தில் அமைந்துள்ள மன்னார் மாவட்ட ஆயுள்வேத மருத்துவமனை வளாகத்தில் வளர்க்கப்படும் மூலிகைச் செடிகள் கால்நடைகளால் சேதப்படுத்தப்படுகின்றன என வடக்கு மாகாண சுகாதார அமைச்சரிடம் முறையிடப்பட்டுள்ளது.

அந்த மருத்துவமனைக்கு வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஜீ.குணசீலன் நேற்றுச் சென்றார். அதன்போதே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறித்த ஆயுள்வேத மருத்துவமனை வளாகத்தில் பல்வேறு மூலிகைச் செடிகள் வளர்க்கப்படுகின்றன. மருத்துவமனையின் சுற்றுவேலி முற்கம்பிகளால் அடைக்கப்பட்டுள்ளது. அண்மைக்காலமாக ஆடு மற்றும் மாடு போன்ற கால்நடைகள் மருத்துவமனை வளாகத்துக்குள் வந்து மூலிகைச் செடிகளை உண்கின்றன.

சுற்று வேலியை முழுமைப்படுத்திய போதும், சுற்று வேலியின் முற்கம்பிகள் வெட்டப்பட்டுள்ளன. அதனூடாக கால்நடைகள் உள்நுழைகின்றன. மருத்துவமனையில் கடமையாற்றுகின்ற பணியாளர்கள் இதனால் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர் என்று சுட்டிக்காட்டப்பட்டது.

ஒரு தொகுதி ஆடுகள் வைத்தியசாலை வளாகத்தினுள் வந்து மூலிகைச் செடிகளை உண்பதை அமைச்சர் நேரடியாக அவதானித்தார். கிராம அலுவலரை உடனடியாகத் தொடர்பு கொண்ட சுகாதார அமைச்சர் இது தொடர்பில் ஆடுகளின் உரிமையாளரின் கவனத்துக்கு இந்த விடயத்தைக் கொண்டு சென்றார். தொடர்ந்து இவ்வாறு நடந்தால் கால்நடைகள் பிடிக்கப்பட்டுப் பொலிஸார் ஊடாக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அறிவுறுத்தினார். மருத்துவமனையின் நிலவும் ஏனைய தேவைகள் தொடர்பாகவும் அமைச்சர் கேட்டறிந்து கொண்டார்.



(ந-56)

# சத்திரச்சந்திச் சந்தையில் நவீன கடைத்தொகுதி

## சந்தையும் அதில் இயங்குமென்று மாநகர முதல்வர் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம்,ஓக 7**
**யாழ்ப்பாணம் சத்திரச் சந்தியில் உள்ள மரக்கறிச் சந்தையில் நகரின் நவீன க்ட்டடத் தொகுதி அமைக்கப்படவுள்ளதாக யாழ்ப்பாணம் மாநகர சபையின் முதல்வர் இ.ஆனோல்ட் தெரிவித்தார்.**



யாழ்ப்பாண நகரில் நவீன கடைக்கட்டடம் அமைப்பது தொடர்பாக மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்றது. கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது.
யாழ்ப்பாணம் நகரில் ஆயிரம் மில்லியன் ரூபா செலவில் நவீன கடைக் கட்டடத் தொகுதி அமைக்கப்படவிருந்தது. எனினும் குறித்த திட்டம் கைநழுவிப் போயிருந்தது. ஆனால் நாம் தலைமை அமைச்சர் ரணிலைச் சந்தித்து இந்த விடயம் தொடர்பில் பேசினோம் அதற்கு அவர் நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார். அதேபோல் கட்டடம் அமைய வேண்டிய இடம் போன்ற விடயங்களை ஆய்வு செய்து அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளது.
அந்தவகையில் நவீன கட்டடம் சத்திர சந்தியில் உள்ள சந்தைப் பகுதியிலேயே அமைக்கவுள்ளோம்.
இதனடிப்படையில் தற்காலிகமாக சந்தை வேறு இடத்துக்கு மாற்றப்படும். அமைக்கப்படும் கட்டடத் தொகுதியில் மரக்கறிச் சந்தை வியாபாரிகளுக்கும் கடைகள் வழங்கப்படும் என்ற உத்தரவாதத்தை இந்தத் தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்- என்றார். (8)

# மரபுக் கவிதை பயிலரங்கு நிறைவு



யாழ்ப்பாணம்,ஓக 7
யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் முன்னெடுத்த மூன்று மாதக் கற்கை நெறியான மரபுக் கவிதைப் பயிலரங்கு நேற்றுமுன்தினம் நிறைவுக்கு வந்தது.
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமைதோறும் இலவசமாகப் பயிலரங்கு இடம்பெற்றது.
.மூத்த கவிஞர் சோ.ப .பத்மநாதன். கவிஞர் த.ஜெயசீலன் ஆகியோர் பயிலரங்கின் வளவாளர்களாக செயற்பட்டனர்.
இவர்களுக்கான மதிப்பீடு எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.
பயிலரங்கில் பங்கேற்றவர்கள் படைத்த மரபுக் கவிதைகள் யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத்தால் விரைவில் நூலுருவில் வெளியிடப்படவுள்ளது.

# கழிவுகள் கொட்டுவதற்கு இடம் அறுகுவெளியில் ஒதுக்கீடு

கொடிகாமம்,ஓக 7
பொது மக்களால் குறிப்பிட்ட இடங்களில் கொட்டப்படும் திண்மக்கழிவுகள் அகற்றும் நடவடிக்கை சாவகச்சேரி கொடிகாமம் பிரதேச சபையால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.
திண்மக்கழிவுகள் கொட்டுவதற்கு இடமில்லாத காரணத்தால் கடந்த காலங்களில் அகற்றப்படாமல் இருந்தது. தற்போது அதற்கான இடம் சாவகச்சேரி அறுகுவெளிப் பகுதியில் ஒதுக்கீடு செய்யப்பட்டுக் கழிவுகள் அகற்றும் நடவடிக்கைகளைப் பிரதேச சபை முன்னெடுத்து வருகிறது எனச் சாவகச்சேரிப் பிரதேச சபை உபதவிசாளர் செல்வரட்ணம் மயூரன் தெரிவித்தார். (159)

# பொதுக்கூட்டமும் உறுப்பினர் தெரிவும்

அளவெட்டி,ஓக 7
அளவெட்டி அபிவிருத்தி மன்றத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும் புதிய செயற்குழு உறுப்பினர் தெரிவும் அளவெட்டி சுப்பிரமுனி சுவாமிகள் ஆச்சிரமத்தில் கடந்த சனிக்கிழமை காலை 10.30 மணியளவில் மன்றத் தலைவர் ப.இராஜகோபால் தலைமையில் நடைபெற்றது.
இதன்போது துறைசார்ந்த செயற்குழு உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.
அளவெட்டி அபிவிருத்தி மன்றத்தின் தலைவராக ப.இராஜகோபால் மீண்டும் தெரிவு செய்யப்பட்டார். தொடர்ந்து செயலாளராக செ.விஜயராஜ், பொருளாளராக சி.கந்தசாமி, உபதலைவராக மா.சந்திரகாந்தன், உப செயலாளராக க.மயூரதனும் தெரிவுசெய்யப்பட்டனர்.
துறைசார் செயற்குழு உறுப்பினர்களாக விளையாட்டு/பண்பாட்டுக்கு பொறுப்பாக அலன்றாஜ். கட்டடம்/திட்டமிடல் வ.நல்லதம்பி. சமூக ஒருங்கிணைப்பு கணேசதாஸ், கல்வி/சுகாதாரம் மு.சந்திரசேகரம், நூலக அபிவிருத்தி ரதி தெய்வேந்திரன். கைத்தொழில் மகளீர் விவகாரம் கந்தசாமி. விவசாயம்/உற்பத்தி மகாலிங்கம், கொழும்பு, பன்னாட்டு அமைப்பாளர் க.நித்தியானந்தம், கணக்காய்வு முருகையா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.
மன்றத்தின் ஆலோசகர்களாக வை. சுப்பிரமணியம், க.நாகலிங்கம், ம.பத்மநாதன், இ.சர்வேஸ்வரா, வே.சிவராசா, நா.கேதீஸ்வரன், வை.சரவணன் ஆகியோரும் அளவெட்டிப் பிரதேசத்தை உள்ளடக்கிய கிராம அலுவலர் பிரிவு கிராம சேவையாளர்களும் பதவி வழியாக இணைந்து செயலாற்றுவார்கள் எனக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. (36)



# நல்லூர் பெருந்திருவிழாவை முன்னிட்டு ஆலயச் சுற்றாடலில் அலங்காரங்கள்

யாழ்ப்பாணம், ஓக 7
வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நல்லூர் கந்தசுவாமி கோயில் வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு ஆலய சுற்றாடலில் அலங்காரப் பந்தல்கள் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
ஆலயத்துக்கு முன்பான பருத்தித்துறை வீதியில் கிடுகுகளை கொண்ட அலங்கார பந்தல் அமைக்கப்பட்டு வருகின்றன. அதனைவிட கோவில் வீதியிலும் அலங்கார பந்தல்கள் அமைக்கப்பட்டுள்ளன.
நல்லூர் ஆலயச் சுற்றாடல் பிரதேசத்தில் உள்ள வடிகால்வாய்களை துப்புரவு செய்யும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.
இந்த வடிகால்வாய்களில் நிரம்பி காணப்படும் கழிவுகள். சேறுகள் என்பன கழிவகற்றும் பிரிவினரால் அகற்றப்பட்டு வருகின்றன என்று வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்தது.
வடிகால்வாயில் சேற்று கழிவுகள் அதிகளவில் தேங்கியதால் பவுசர் மூலம் தண்ணீர் பாய்ச்சப்பட்டு அவை துப்புரவு செய்யும் பணிகளும் இடம்பெற்று வருகின்றன. அதனைவிட வீதியோரம் காணப்படும் பற்றைகள். புற்கள் என்பனவும் வெட்டித் துப்புரவு செய்யப்பட்டும் வருகின்றன. (17)

# உடுவில் லவ்லேன் வீதி சீரமைப்பு



யாழ்ப்பாணம்,ஓக 7
வலிகாமம் தெற்கு (சுன்னாகம்) பிரதேச சபைக்குட்பட்ட உடுவில் லவ்லேன் வீதியானது யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தருமலிங்கம் சித்தார்த்தனின் நிதியொதுக்கீட்டின் கீழ் சீரமைப்புப் பணிகள் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டது.
நிகழ்வில் முதன்மை விருந்தினராக கலந்துகொண்ட வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் கற்களைப்பரவி வீதி சீரமைப்பு வேலைகளை ஆரம்பித்து வைத்தார்.
மாகாணசபை உறுப்பினருடன் வலிகாமம் தெற்கு (சுன்னாகம்) பிரதேச சபையின் 14 ஆம் வட்டாரமான உடுவில் தெற்கு உறுப்பினர் அன்ரன் லீனஸ். 15 ஆம் வட்டாரமான உடுவில் தென்கிழக்கு உறுப்பினர் திருமதி சந்திரவதனி காந்தராசா மற்றும் ஊர்ப் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# விழிப்புணர்வுக் கருத்தரங்கு

தென்மராட்சி ஓக.7
கொடிகாமம் போக்கட்டி அ.த.க.பாடசாலையில் கற்கும் மாணவர்களின் பெற்றோர்களுக்கான பற்சுகாதாரம் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு கடந்த வியாழக்கிழமை பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. சாவகச்சேரிப் பிரதேச சுகாதார பற்சிகிச்சை பிரிவினர் கடந்த ஒரு மாதமாகக் கொடிகாமம் பிரதேசத்தில் உள்ள பாடசாலை மாணவர்களுக்குப் பற்சிகிச்சைகளை மேற்கொண்டனர். அவற்றில் பெறப்பட்ட ஆய்வுகளின் பிரகாரம் மாணவர்களின் பெற்றோர்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்குகளைப் பாடசாலைகளில் நடத்தி வருகின்றனர். (9)





# பெருந்திருவிழா

சாவகச்சேரி, ஓக 7
சாவகச்சேரி அருள்மிகு சிறி துர்க்காதேவி ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த மாதம் 31 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பன்னிரண்டு நாள்கள் நடைபெற்றுவருகின்றன. எதிர்வரும் 9 ஆம் திகதி வியாழக்கிழமை இரவு 8 மணிக்கு தேர்த் திருவிழாவும், மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்குத் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (131)



யாழ்ப்பாணம் கச்சாய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு ஆஸ்திரேலியா நாட்டில் வசிக்கும் செ. வினோதினி ஆரம்பப் பிரிவு வகுப்புகளுக்கு 50 ஆயிரம் ரூபா பெறுமதியான ஐந்து அலுமாரிகளை வழங்கியுள்ளார். அலுமாரிகளுடன் கா.குணசிங்கம். உப அதிபர் க.கோடீஸ்வரன். பகுதித் தலைவர் திருமதி மா. தேவ ஈஸ்வரன் மற்றும் அன்பளிப்புச் செய்தவரின் சகோதரியான திருமதி வி.கோகுலன் ஆகியோரையும் படத்தில் காணலாம். (159)

# 'கரும்பவாளி' ஆவணப்படம் திரையிடல்



யாழ்ப்பாணம்.ஓக7

வசீகரன்சுசீந்திரகுமார் இயக்கத்தில்உருவான 'கரும்பவாளி' ஆவணப்படத்தின் திரையிடல் நிகழ்வு யாழ்ப்பாணம் பொது சன நூலகக் குவிமாடக் கேட்போர் கூடத்தில் கடந்த சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் இடம்பெற்றது.

தொன்மயாத்திரை மற்றும் நிகழ்படம் அமைப்பினரால் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது. உடுப்பிட்டிப்பகுதியில்இருநூறு வருடங்களுக்கு முன் வாழ்ந்த 'வீராத்தை' எனும் பெண் அந்தக் கிராமத்துக்கு கேணிகளையும், ஆவுரஞ்சிக் கற்களையும், தண்ணீர்ப்பந்தலையும்தானங்களாக அமைத்துக்கொடுத்துள்ளார்.

மந்தை வளர்ப்பை வாழ்வாதாரமாகக் கொண்ட அந்தக் கிராமத்தின் மக்களுக்காக'வீராத்தை'செய்திருக்கும்பணிகளையும், அதைக் குறித்ததாக அந்தக் கிராமத்தில்நிகழும்வாய்மொழிவழக்காறுகளையும் ஆய்வு ரீதியிலான தகவல்களையும் திரட்டி 'கரும்பவாளி' ஆவணப்படம் தயாரிக்கப்பட்டது.



வடமராட்சி வதிரி சனசமூக நிலையத்திற்கு வடக்குமாகாணசபைஉறுப்பினர்அகிலதாஸ் சிவக்கொழுந்தினால் பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான தளபாடங்கள் மற்றும் விளையாட்டு உபகரணங்களை அண்மையில் வடக்கு மாகாண பேரவைச் செயலக செயலாளர் மற்றும் சனசமூக நிலைய உறுப்பினர்கள் அங்கத்தவர்கள்முன்னிலையில்வழங்கிவைத்தார். (26)



யாழ்ப்பாணம், அச்செழுமெதடிஸ்த மிசன் தமிழ்க்கலவன் பாடசாலையைச்சேர்ந்த 40 மாணவர்களுடன் ஆசிரியர்களும்நேற்றையதினம் உதயன் பத்திரிகை காரியலயத்துக்கான கல்விச் சுற்றுலாவை மேற்கொண்டு பத்திரிகைத் தொழிப்பாடுகள் தொடர்பில் பார்வையிட்டனர்.

### அபிவிருத்தியை எதிர்நோக்கினாலும்

# பொருளாதார வளர்ச்சியில் பின்தள்ளியே இருக்கிறோம்

### கலந்துரையாடலில் சரா எம்.பி. தெரிவிப்பு

சாவகச்சேரி ஓக.7

எமது பகுதியில் அபிவிருத்திகளை நாம் எதிர்நோக்கியிருந்தாலும், நீண்டகாலமாகப் பொருளாதாரவளர்ச்சியில் நாம் பின்தங்கியே காணப்படுகிறோம் என்று கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் கட்சியின் மறுவாழ்வு மீள்குடிய மர்வுபொருளாதாரத் திட்டங்களுக்கான திட்டச் செயலாளருமான ஈ.சரவணபவன் தெரிவித்தார்



தென்மராட்சிப் பிரதேச பொது அமைப்புகளின் பிரதிநிதிகளுடான சந்திப்பு சாவகச்சேரியில் நேற்றுமுன்தினம்இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர்மேலும் தெரிவித்ததாவது: நுண்கடன்திட்டங்கள், அதனால் ஏற்படும்உயிர்மாய்ப்புகள்எமது பகுதிகளை உலுக்கிக்கொண்டிருக்கின்றன. அண்மையில்அரசு வெளியிட்ட என்டபிரைஸ் சிறிலங்கா என்ற அரசின் வட்டிச்சலுகைக் கடன் திட்டமானது பல குடும்பங்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

தொழில்முனைவின் சொர்க்கபுரியாக உருவாக்கப்பட்ட என்டபிறைஸ் சிறிலங்கா திட்டமானது தொழில் வாய்ப்புகளுக்காகப் பல்வேறு கடன்களைப் பெற்று அதனைச் செலுத்த முடியாமல் தத்தளிக்கும்பலகுடும்பங்களுக்கும் வரப்பிரசாதமாகக் காணப்படுகிறது.

சிறியஅளவிலானவிவசாயிகள், கமநல நிறுவனங்கள், விவசாய நடவடிக்கைகளைஇயந்திரமயமாக்கல்திட்டத்தின்கீழ்5இலட்சம் ரூபா வரையிலும் பாடசாலை சேவைகளை நடத்தும்வான்களின் உரிமையாளர்களுக்கு 40 லட்சம்ரூபாவரையும்முழுமைப்படுத்தப்படாத வீட்டுவேலைகளைச்செய்துமுடிப்பதற்கு3இலட்சத்து 50 ஆயிரம் ரூபா வரையிலும்வழங்கப்படுகிறது.

மானிய வட்டி அடிப்படையில் கோழிஇறைச்சிஉற்பத்தித்தயாரிப்பாளர்கள், சுயதொழில்முயற்சியாளர்கள் ஆகியோர் 50 ஆயிரம்ரூபாவரையில்கடன்பெறமுடியும்.

பதிவு செய்யப்பட்டுள்ள ஊடகவியலாளர்கள்ஊடகஉபகரணங்களைக் கொள்வனவு செய்ய 3 லட்சம்ரூபாவும், ஊடக உபகரணங்களைப் புதுப்பிக்க ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா வரையும் பெறலாம். பட்டதாரி இளைஞர்கள் தொழில் முயற்சியை மேற்கொள்ள 15 இலட்சம் ரூபாவரை கடனாகப்பெறமுடியும்.

கூரையின் மீது பொருத்தப்பட்ட சூரியசக்தி உருவாக்கல்கருத்திட்டத்தின் கீழ் தனியார் வீடுகள் 75லட்சம் ரூபாவும் தொழில்முயற்சியாளர்கள்75இலட்சத்துக்கு மேற்பட்டதொகையிலும்கடன்களைப்பெறமுடியும்.

சிறிய அளவிலான நிறுவனங்களை ஆரம்பிக்கவுள்ள இளையோர், பெண்கள், விவசாயிகள், சிறியமற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களை ஆரம்பிப்பதற்குஅக்கறைசெலுத்தும் நபர்கள் நிறுவனங்களை ஆரம்பிப்பதற்கான தொழில்நுட்ப உதவி போன்றவற்றைப் பெறமுடியும்.

வயது அடிப்படையல் மீளச் செலுத்தும்காலம்கணிக்கப்படும் என்பதால் எமது பிரதேசத்தில் இவ்வாறான கடன்களுக்கு விண்ணப்பிக்கமுடியும் - என்று தெரிவித்தார்.

கலந்துரையாடலில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் கே. சயந்தன், சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன், பிரதேச சபைத் தவிசாளர் க.வாமதேவன், உபதவிசாளர்செ.மயூரன், சாவகச்சேரி நகரசபை, பிரதேச சபைஆகியவற்றின்உறுப்பினர்கள் மற்றும்பொதுஅமைப்புகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (9.159)

# கருணாநிதி கவலைக்கிடம்

### மருத்துவமனை அறிக்கை

இந்தியா, ஓக.7

தி.மு.கதலைவர்கருணாநிதியின் உடல்நிலையில்பின்னடைவுஏற்பட்டுள்ளதாககாவேரிமருத்துவமனை அறிவித்துள்ளது. இந்த அறிப்பை அடுத்து தமிழகத்தில் பரபரப்பும், பதற்றமும் ஏற்பட்டுள்ளது.

நோய்வாய்ப்பட்டநிலையில் சிகிச்சைக்காக காவேரி மருத்துமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் தி. மு.க தலைவர் கருணாநிதி. தொடர் சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவரின் உடல்நிலையில்பின்னடைவு ஏற்பட்டுள்ளது என்று நேற்று மாலை மருத்துவமனை நிர்வாகம் அறிவித்தது. இதன்படி, அடுத்த 24 மணி நேரத்தில் கருணாநிதிக்கு கொடுக்கப்படும் சிகிச்சைக்குஅவர்உடல்நிலைஎப்படிஒத்துழைக்கிறது என்பதை வைத்தே அடுத்தகட்ட சிகிச்சை இருக்கும் என்று அந்த அறிக்கையில்தெரிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்பு ஊடகங்கள் மூலம் பரவியது. இதனை அடுத்து கருணாநிதிசிகிச்சைபெற்று வரும் காவேரி மருத்துமனைதி.மு.ககட்சிஆதரவாளர்களால் நிரம்பியது. அரசியல் பிரமுகர்கள் என மருத்துவனைக்குச் சென்றனர். கருணாநிதியின் குடும்பத்தினரும்அங்குசென்றனர். தமிழகத்தைச் சேர்ந்த ஊடகங்கள் மருத்துமனையைக் கண்காணித்தன. ஆதரவாளர்கள் கோசங்களை எழுப்பினர். கருணாநிதி மீண்டும் வர வேண்டும் என்பதே அவர்கள் அனைவருடைய எதிர்பார்ப்பாக இருந்தது. நேரம் ஆக ஆக மருத்துமனை பரபரப்பானது. தமிழகமே பரபரப்பில் ஆழ்ந்தது. பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர். நேற்று இரவு பத்திரிகை அச்சுக்குபோகும்வரைகருணாநிதிதொடர்பில்இவ்வாறான நிலைமைகளே காணப்பட்டன.



யாழ்ப்பாணம் சாவகச்சேரி நுணாவில் மேற்கு தாளையம்பதி சிறி துர்க்காதேவி ஆலயத்துக்கு மட்டுவில்தெற்கைசேர்ந்தவரும்கனடாநாட்டின்தொழிலதிபருமானபாலாபாலசிங்கம்குடும்பத்தினால் அமைத்துவழங்கப்பட்ட 29அடிஉயரசித்திரத்தேரின்வெள்ளோட்டம்அண்மையில்நடைபெற்றது.

## பனை அபிவிருத்தி சபையின் ஆண்டு நிகழ்வு

யாழ்ப்பாணம்.ஓக7

யாழ்ப்பாண மாவட்டப் பனை அபிவிருத்தி சபையின் 40ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை சபையின் முதன்மைக் காரியாலயத்தில்முற்பகல்10மணிக்குசபையின்தலைவர்மருத்துவர் இ.சிவசங்கர்தலைமையில் இடம்பெறும். பனைஅபிவிருத்திசபைஆரம்பிக்கப்பட்டு இதுவரை காலமும் சபையின் தலைவர்களாக பணியாற்றியவர்கள் நிகழ்வில் மதிப்பளிக்கப்படவுள்ளனர். நல்லூரில் உள்ள சபையின் கற்பகம் சிறப்புஅங்காடியாகமெருகூட்டப்பட்டுஇன்றுநண்பகல் திறந்து வைக்கும் நிகழ்வும் இடம்பெறும் என்று சபையின் விரிவாக்க முகாமையாளர் கே.கோபாலகிருஷ்ணன்தெரிவித்தார். (17)

# ஆடைகள் விற்பனை நிலையத்தில் திருட்டு

யாழ்ப்பாணம், ஓக.7

ஆடைகள் விற்பனை நிலையம் ஒன்றில் பெரிய திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு பருத்தித்துறை நகரத்தில் அமைந்துள்ள ஆடைகள் விற்பனை நிலையம் ஒன்றிலேயே இடம்பெற்றுள்ளது.

நேற்றுக் காலையே திருட்டுப் போனது தெரியவந்தது. உரிமையாளர் கடையைத் திறக்கச் சென்றபோதே சம்பவத்தை அவதானித்துள்ளார். கடையில் பொருத்தப்பட்டிருந்த மறைகாணி கமராக்கள் திருப்பப்பட்டிருந்தன. 4 முதல் 5 லட்சம் ரூபாக்கும் அதிக பெறுமதியுள்ள ஆடைகள் திருடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது எனத் தெரிவித்த பருத்தித்துறைப் பொலிஸார் இது தொடர்பாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றனர். (21,26,114)

# மாட்டைத் திருடினார் என்று ஒருவர் நேற்றுக் கைது

யாழ்ப்பாணம், ஓக. 7

மாடு ஒன்றைத் திருடினார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார் என்று நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 27ஆம் திகதி பருத்தித்துறைப் பகுதியில் வீடு ஒன்றின் வெளியில் கட்டப்படிருந்த மாடு காணாமல் போயிருந்தது. அது தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. பின்னர் 3ஆம் திகதி அந்த மாடு துன்னாலைப் பகுதியில் கட்டி வைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டது. விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. இதனை அடுத்து நேற்றையதினம் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டார் என்று நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்ட நபர் பருத்தித்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். (21,26,114)

# நினைவுத் தூபி சிதைத்து அழிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 7



கடந்தகாலப் போராலும், இராணுவ ஆக்கிரமிப்பாலும் அழிவடையாது, அழிக்கப்படாது பாதுகாக்கப்பட்ட புலிகள், மற்றும் பொதுமக்களின் நினைவாக மக்களால் அமைக்கப்பட்ட நினைவுத் தூபி 28 ஆண்டுகளின் பின்னர் நேற்று அடித்து நொறுக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் மக்கள் மத்தியில் பெரும் விசனத்தையும், கோபத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

1989ஆம் ஆண்டு இந்திய இராணுவத்தின் காலத்தில் பலாலி வீதியில் ஆலடிச் சந்தியில் இடம்பெற்ற வெடி விபத்தில் வீரச்சாவடைந்த 4 புலிகள் மற்றும் 6 பொது மக்களின் நினைவாக 1990ஆம் ஆண்டு கிராம மக்களால் ஆலடிச் சந்தியில் அமைக்கப்பட்ட நினைவுத் தூபியே இவ்வாறு அடித்துநொறுக்கப்பட்டுள்ளது.

2010ஆம் ஆண்டுவரை இராணுவக் காவலரண் இருந்த காலத்திலும் அந்த நினைவுத் தூபி முழுமையாகக் காணப்பட்டது. 2010ஆம் ஆண்டுபலாலி வீதியின் அகலிப்புப் பணிகளின் போது வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் அந்தத் தூபியை அடியோடு கிழப்பி மறுகரையில் வைத்திருந்தனர். இந்த நிலையில் நேற்று அந்தத் தூபி நொறுக்கப்பட்டுள்ளது. அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்களே இந்த நாசகார வேலையைச் செய்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் தொடர்பில் மக்கள் விசனத்தை வெளிப்படுத்தியுள்ளார். (21,105)

## வாள்வெட்டு...

நடைபெற்ற சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டத்திலேயே பொலிஸார் இவ்வாறு தெரிவித்தனர்.

அங்கு தெரிவிக்கப்பட்டதாவது

யாழ்ப்பாணத்தில் கடந்த சில நாள்களில் வன்முறைகள் அதிகரித்துக் காணப்பட்டன. அதனுடன் தொடர்புடையவர்களைக் கைது செய்யப் பல பொலிஸ் குழுக்கள் களமிறக்கப்பட்டுள்ளன. இந்தச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் இதுவரை 22 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் 40 ஹெரோயின் பைக்கற்றுக்களை வைத்திருந்த 4 பேர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டுள்ளனர். மாவா பாக்குப் பாவனை கூடிய இடமாக யாழ்ப்பாணம், ஐந்து சந்திப் பகுதி இனங்காணப்பட்டுள்ளது. அங்கு பொலிஸ் கண்காணிப்புப் போடப்பட்டுள்ளது - என்றனர்.

கூட்டத்தில் கலந்து கொண்ட வடக்கு மாகாண சபை உறுப்பினர் தெரிவித்ததாவது:

அராலி, மூளாய் போன்ற பகுதிகளில் குள்ள மனிதர் அட்டகாசம் என்பது கட்டுக்கதை. அங்கு என்ன நடக்கின்றது என்பதை விசாரிக்க வேண்டும்.

அங்குள்ள மக்கள் எவரும் குள்ள மனிதர்களைக் காணவில்லை. ஆனால் ஊடகங்கள் மட்டும் அவ்வாறு கூறுகின்றனர். எனவே அது வெறும் கட்டுக்கதையாக இருக்கும். பொலிஸார் குற்றவாளிகளைக் கைது செய்ய நவீன தொழில்நுட்பச் சாதனங்களைப் பயன்படுத்த வேண்டும்.

ஆவாக் குழுவின் தலைவர் வருடத்துக்கு 3 தடவைகள் பிறந்த நாள் கொண்டாடுகின்றார். அண்மையில் யாழ்ப்பாணத்தில் இருந்து 25 படகுகளை வாடகைக்கு எடுத்து 200க்கும் அதிக மதுபானப் போத்தல்களுடன் வாள் வடிவிலான கேக்கை வெட்டியுள்ளார். அது தொடர்பான ஒளிப்படங்களும் வெளியாகியுள்ளன. ஆனால் பொலிஸார் அது தொடர்பில் என்ன நடவடிக்கை எடுத்தார்கள்? என்றார்.

யாழ்ப்பாணத்தில் சமூக விரோதச் செயற்பாடுகளில் ஈடுபடுவோரின் தொலைபேசி அழைப்புக்களை வைத்து நாம் நடவடிக்கை எடுகின்றோம். எனினும் வட்ஸ் அப், ஐஎம்மோ ஆகிய செயலிகளைப் பயன்படுத்தியே தொடர்புகளைப் பேணுகின்றார்கள். அவர்களது தொடர்பாடல்களை நாம் கண்காணிக்க முடியாதுள்ளது என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் சி. தவராசா கூட்டத்தில் கருத்துத் தெரிவித்தார். கொக்குவில் நந்தாவில் வயல்காணியில் ஒன்றுகூடும் இளைஞர்கள் மது விருந்து நடத்துகின்றனர். அந்தப் பகுதியில்தான் கோப்பாய் பொலிஸார் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. எனினும் அந்தப் பகுதியைப் பொலிஸார் கண்காணிப்பதில்லை.

கோண்டாவில் உப்புமடத்தில் பொலிஸார் முன்னிலையில் வாள்வெட்டுக் குழுவினர் சென்றபோதும் பொலிஸார் நடவடிக்கை எடுக்கவில்லை என்று கூறப்படுகின்றது. இவற்றைப் பொலிஸார் கவனத்தில் எடுக்க வேண்டும் என்றார்.

இந்தியாவில் ரௌடிகளை அடைத்து வைக்கும் குண்டர் சட்டத்தை ஒத்த கடும் சட்டம் இலங்கையிலும் கொண்டு வந்து வாள் வெட்டுக் குழுவினரை நீண்ட காலம் அடைத்து வைக்க வேண்டும் என வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

இலங்கையைப் போன்று இந்தியாவிலும் இவ்வாறான ரௌடிக் கும்பல்கள் பல முளைக்கும். ஆனால் அவ்வாறான கும்பல்களை பொலிஸார் கைது செய்தால் உடனடியாக நீண்ட காலத்துக்குச் சிறையில் அடைக்கின்றனர். ஆனால் எமது நாட்டில் உள்ள சட்ட ஏற்பாடுகளின்படி உடனடியாகவே வெளியே வருகின்றனர். அதனால் அவ்வாறு ரௌடித் தனத்தில் ஈடுபடுபவர்களுக்கு அச்சம் இல்லாமல் போய்விட்டது.

இவை தொடர்பில் பொலிஸார் உரிய இடங்களுக்குத் தெரியப்படுத்தி வாள்வெட்டு, கொள்ளையில் ஈடுபடுபவர்களை இந்தியாவின் குண்டர் சட்டம் போன்ற பயங்கரமான சட்டங்களில் நீண்ட காலத்துக்கு பிணையில் வர முடியாதவாறு சிறையில் அடைப்பதன் மூலம் மட்டுமே இவ்வாறான சம்பவங்களை கட்டுப்படுத்த முடியும் என்று அவர் குறிப்பிட்டார். அதேவேளை, வலி.மேற்கில் ஏற்பட்டுள்ள குள்ளமனிதர் தொடர்பான பிரச்சினையை ஆராய பொதுமக்களுக்கும், பொலிஸாருக்கும் இடையே அராலி அம்மன் ஆலயத்தில் நாளை பிற்பகல் 3 மணிக்கு கலந்துரையாடல் ஒன்றை நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது. (ற-8,105)

## ஆட்சியைக்...

கோளை முன்னாள் அரச தலைவர் மகிந்த தலைமையிலான பொது எதிரணியின் சகல நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் இந்தச் சந்தர்ப்பத்தில் முன்வைக்கின்றேன். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க முன்வைக்கும் தீர்வை சிங்கள மக்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். மைத்திரி மகிந்த இணைந்து முன்வைக்கும் தீர்வையே சிங்கள மக்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்று, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 16பேர் கொண்ட அணி தெரிவித்துள்ளமை தொடர்பில் கேட்டபோதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

புதிய அரசமைப்பு உருவாக்கச் செயன்முறைகளுக்கு முழுமையான ஆதரவையும் ஒத்துழைப்பையும் தருமாறு முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவிடம் பல தடவைகள் நான் நேரில் வேண்டுகோள் விடுத்துள்ளேன். கொழும்பில் அண்மையில் கூட நேரில் சந்தித்தபோதும் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளேன்.

தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகள் தொடர்பில் மகிந்த ராஜபக்சவும், அவரின் பொது எதிரணியும் தங்களது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளவேண்டும். நாடு மீண்டும் இருண்ட யுகத்துக்குச் செல்வதை தடுப்பதற்காக தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை விரைந்து காணவேண்டும். முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தலைமையிலான பொது எதிரணி முழுமையான ஆதரவைத் தரவேண்டும். போலிப் பரப்புரைகளையும் இனவாதகக் கருத்துக்களையும் நடைமுறைக்குச் சாத்தியமற்ற உரைகளையும் அவர்கள் கைவிட வேண்டும்.

புதிய அரசமைப்பு விவகாரத்தில் மகிந்த அணியினர் கடைப்பிடிக்கும் அணுகுமுறை நாட்டு மக்களிடையே அமைதியின்மையை தோற்றுவிக்கக் கூடிய ஆபத்தைக் கொண்டிருக்கின்றது. நாட்டு மக்களின் நலன்கருதி புதிய அரசமைப்பு விவகாரத்தில் மைத்திரி ரணில் தலைமையிலான அரசுடன் இணைந்து அவர்கள் பயணிக்கவேண்டும். தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண்பதற்கு கிடைத்துள்ள இந்தச் சந்தர்ப்பத்தை நாம் தவறவிட்டால், நாடு இன்னொரு இரத்தக்களரியைச் சந்திக்க வேண்டிவரும்.

நியாயமான அரசியல் தீர்வைக் காண்பதற்கு நிதானமான போக்கை கடைப்பிடிக்கவேண்டும் என்று முன்னாள் அரச தலைவர் மகிந்த தலைமையிலான பொது எதிரணியிடம் நான் மீண்டும் மீண்டும் வேண்டுகோள் விடுக்கின்றேன் - என்றார். (5)

## நல்லூரில்...

படுவார்கள் என்று யாழ்ப்பாணம் மாவட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்தார். யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்ற சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது

நல்லூர் ஆலயத் திருவிழா 16ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. திருவிழாவில் இந்த ஆண்டு பாதுகாப்புக் கடமைகளுக்காக 500 பொலிஸார் நியமிக்கப்படுவார்கள். கண்டியில் பெரேரா பெருநாளுக்காக வடக்கு மாகாண ரீதியில் 100 பொலிஸாரைத் தருமாறு எமக்கு கோரிக்கை விடுக்கப்பட்டது. எனினும் நாம் நல்லூர் ஆலய மகோற்சவ பாதுகாப்புக்கு பொலிஸார் தேவை என்பதால் அனுப்பவில்லை. -என்றார். (ற-8)

## பவுஸர்...

தாளையைச் சேர்ந்த சி.சிறிரஞ்சன் (வயது -45) என்பவரே உயிரிழந்தார்.

மோட்டார் சைக்கிளும், எரிபொருள் பவுசரும் விபத்துக்குள்ளாகின. கோப்பாயில் பயிலும் மகளை மோட்டார் சைக்கிளில் ஏற்றிச் சென்றபோது விபத்து நடந்துள்ளது. பவுசரை முந்திச் செல்ல முற்பட்டபோது அதில் உராய்ந்ததால் நிலைதடுமாறி விழ்ந்து அதன் சில்லுக்குள் அகப்பட்டார் என்று கூறப்படுகின்றது.

சிறிரஞ்சன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். காயமடைந்த மகள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

எரிபொருள் பவுசரின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். விபத்துத் தொடர்பான விசாரணைகளைக் கோப்பாய் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ற-9,29)

## இந்தியப்...

மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

இந்திய இழுவைப் படகுகள் அத்துமீறி எமது கடற்பரப்புக்குள் நுழைந்து நவீன முறைகளைக் கையாண்டு எமது கடல் வளத்தைச் சூறையாடுகின்றார்கள்.

இதனால் எமது மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிப்படைகின்றது. இதை அறிந்து கொண்டும் இலங்கை அரசு இந்திய மீனவர்களின் படகுகள், வலைகளை ஒப்படைப்பதுடன், சாதாரணமாக அவர்களை விடுதலையும் செய்கின்றது.

எமது கடற்பரப்புக்குள் மீன்பிடியில் ஈடுபட்டுப் பறிமுதல் செய்யும் படகுகள், வலைகளை மீள ஒப்படைக்கக் கூடாது. என்றார்.

வடக்கு முதல்வரின் இந்தக் கருத்தைக் கூட்டத்தில் கலந்து கொண்ட ஏனையோரும் ஏகமானதாக ஏற்றுக் கொண்டனர்.

இந்த விடயம் தொடர்பில் சிறப்புத் தீர்மானம் ஒன்று எடுக்கப்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார். (ற-213)

## வீதியோரம்...

ணித்த ஹைஏஸ் வாகனம் இயக்கச்சி வீதியோரத்தில் நிறுத்தப்பட்டிருந்த இலங்கை மின்சார சபையின் ஹன்ரர் வாகனத்துடன் மோதிச் சிதறியது. ஹன்ரலில் மின் கம்பங்கள் பல ஏற்றப்பட்டிருந்த நிலையில் அதனுடன் பலமாக மோதிய ஹயஸின் முன்பகுதி அப்படியே அப்பளம் போன்று நொருங்கிப் போனது.

விபத்தில் படுகாயமடைந்த 8 பேரும் கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டனர் என்றும் அவர்களில் 2 பேர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

விபத்துத் தொடர்பான விசாரணைகளைப் பளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (உ-ற-21,6,35,159,214)

## அரசியல்...

அவர்கள் தெரிவித்ததாவது:

அரசியல்வாதிகளின் சந்தர்ப்பவாதக் கருத்துகளால்தான் நல்லிணக்கத்துக்குப் பாதிப்பு ஏற்படுகின்றது. மிகவும் உணர்ச்சிபூர்வமான கருத்துகளும் இன. நல்லிணக்கம் பாதிப்புறுவதற்கு முதன்மைக் காரணமாகும். இவற்றை அரசியல்வாதிகள் முற்றாகத் தவிர்த்து நடக்கவேண்டும்.

அனைத்து இன மக்களும் ஒற்றுமையாக வாழவேண்டும். நாட்டைக் கட்டியெழுப்பும் பணிகளில் ஏதாவது பின்னடைவுகள் ஏற்படுமாயின் தற்போது வாழும் நாமே பொறுப்புக் கூற வேண்டும்என்றனர்.

இந்த மாநாட்டில் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், மதத் தலைவர்கள், அமைச்சர்கள், சிறுபான்மைக் கட்சிகளின் தலைவர்கள், பொலிஸ் மா அதிபர் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (உ-ற)

## சிறப்பு...

நிதி அமைச்சருடன் நடத்தப்பட்ட கலந்துரையாடலை அடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த வரியை 12 சதவீதமாகக் குறைக்க வேண்டும் என்று வலியுறுத்திச் சிறப்பு மருத்துவ நிபுணர்களும், மருத்துவப் பணியாளர்களும் போராட்டம் நடத்தியிருந்தனர். அதன் பின்னர் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் படி இந்த வரி குறைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ற)

## தாய்...

என்றும் நேற்றுமுன்தினம் இரவு கைதுசெய்யப்பட்டார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சிறுமி மருத்துவ பரிசோதனைகளுக்காக தெல்லிப்பளை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். (உ-21,26,114)

# மனித உரிமை மீறல்கள் தொடர்பாக பன்னாட்டு விசாரணை நடத்தக்கூடாது

## அட்மிரல் சரத் வீரசேகர கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஓக. 7

இலங்கையில் உள்நாட்டுப் போரின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் மற்றும் பன்னாட்டு மனிதாபிமானச் சட்ட மீறல்கள் தொடர்பில் பன்னாட்டு விசாரணை எதுவும் நடத்தப்படக் கூடாது என்று ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

இதுதொடர்பில்அவர்மேலும்தெரிவித்துள்ளதாவது:

கடந்த அரசைப் பழிவாங்கும் நோக்கில் இலங்கைக்கு எதிராகப் புலம்பெயர் அமைப்புகள்பொய்யான அறிக்கைகளை முன்வைத்தன. அவைதொடர்பில்ஐக்கிய நாடுகள் சபை விசாரணைகளை மேற்கொண்டு ஒருதலைப்பட்சமாகவே செயற்பட்டுவருகின்றது.

**அரசமைப்பை உருவாக்க போர்க் குற்றச்சாட்டு**


போர்க்குற்றங்கள்இடம்பெற்றதாகக்குறிப்பிட்டு புதிய அரசமைப்பை உருவாக்கி கொள்வதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கிய நோக்கமாகக்காணப்படுகின்றது.

கூட்டமைப்பினர் பொது நோக்கங்களுக்காக அரசியலில் செல்வாக்கு செலுத்தாது. சுயநல விடயங்களை மையப்படுத்தியே செயற்படுகின்றனர்.

இலங்கையில் பொறுப்புக் கூறல் விடயத்தில் உள்ளக பங்களிப்புகள் இல்லாமல் பன்னாட்டு விசாரணைகள்



இடம்பெற்றுமுடிந்துள்ளமைஎமக்குஎதிரானதாகவேகாணப்படுகின்றது-என்றார். (4)



# நாட்டின் இறையாண்மையை அரசு தெளிவுபடுத்தவேண்டும்

## எல்லே குணவங்ச தேரர் கோருகிறார்

கொழும்பு, ஓக. 7

மத்தள வானூர்தி நிலையத்தை இந்தியாவுக்குக் குத்தகைக்கு வழங்குவதன் மூலமாக, நாட்டில் இறையாண்மையைப் பாதுகாப்பதற்கான வழியைப் பற்றி அரசு நாட்டு மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும் என்று எல்லேகுணவங்சதேரர் தெரிவித்துள்ளார்.

கேகாலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கருத்தரங்கில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அத்துடன் வானூர்தி நிலையத்தை இந்தியாவுக்குவழங்கியதன்பின்னர் அதற்கு மேலுள்ள வான் பரப்பு யாருக்குச் சொந்தம் என்பதையும் அரசு தெளிவுபடுத்த வேண்டும்எனவும்அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது அரசியலில் உள்ள முரண்பாடுகளுக்கு மத்தியில் எதிர்காலத்தில் போர் ஒன்று ஏற்பட்டால் இலங்கைக்கு இருகுழுக்களுக்குஇடையில்நடைபெறும்போட்டியின் பந்தை போன்று இருக்கநேரிடும்என்றும் தேரர் மேலும் தெரிவித்துள்ளார். (4)

# மும்மொழிப் பாடசாலைகளை விரைவில் உருவாக்கத் திட்டம்

## கல்வி அமைச்சர் அகிலவிராஜ் கூறுகிறார்



கொழும்பு, ஓக. 7

இலங்கையில் மூன்று மொழிகளினும் கற்பிக்கும் பாடசாலைகளை அறிமுகப்படுத்தவுள்ளோம் என்று கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

கொழும்பு விவேகானந்தா தேசிய பாடசாலையின் பரிசளிப்பு சில நாள்களுக்கு முன்னர் இடம்பெற்றது. அதில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்என்றுதெரிவிக்கப்பட்டது.

இந்த மும்மொழிப் பாடசாலைகள் முதலில் கொட்டாவ, வெள்ளவத்தை, வத்தள மற்றும் களுத்துறை ஆகிய நகரங்களில் நிறுவப்பட்டு பின்னர் ஏனையநகரங்களிலும் அமைக்கப்படும்.

தற்போதைய அரசு முன்னையஅரசைப்போலல்லாது நாட்டிலுள்ள சகல பாடசாலைகளையும் ஒரேவிதமாகவேநடத்துகிறது. 3 ஆயிரம் பாடசாலைகளில் அதிபர்களுக்கான வெற்றிடங்கள் அண்மையில்நிரப்பப்பட்டன. இவைமுறையான பயிற்சியின் பின்னரே நிரப்பப்பட்டன.

அதுமட்டுமன்றிக் கல்வி நிர்வாகத்தில் இருந்த சகல வெற்றிடங்களும் தற்போது நிரப்பப்பட்டு முறையான, திறமையான நிர்வாக சேவைகள் கல்வித் திணைக்களத்தில் மேற்கொள்ளப்படுகின்றன - என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார். (4)

# ஐ.தே.கட்சி சூழ்ச்சி செய்கிறது சினக்கிறார் வாசுதேவ எம்.பி.

கொழும்பு, ஓக. 7

நாடாளுமன்றில்6உறுப்பினர்களைக் கொண்ட கட்சிக்கு அமைப்பாளர் பதவியும் 16 உறுப்பினர்களைகொண்டகட்சிக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவியும் வழங்கியுள்ளமை ஐக்கிய தேசியக் கட்சியின் சூழ்ச்சி என்று நாடாளுமன்ற உறுப்பினர்வாசுதேவநாணயக்கார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் வாசுதேவ நாணயக்கார இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதுமட்டுமன்றி, நாடாளுமன்ற உறுப்பினர்களின் சம்பள உயர்வு குறித்து அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்த கருத்துகளைத் தான் வரவேற்பதாகவும் வாசுதேவநாணயக்கார தெரிவித்துள்ளார். (4)

# ஹெரோய்ன் வைத்திருந்தவருக்கு மேல்நீதிமன்று ஆயுள் தண்டனை

கொழும்பு, ஓக. 7

4.3 கிராம் ஹெரோய்ன் போதைப் பொருளைத் தன் வசம் வைத்திருந்த குற்றத்துக்காக ஒருவருக்கு கொழும்புமேல்நீதிமன்றுநேற்றுஆயுள்தண்டனை வழங்கித் தீர்ப்பளித்துள்ளது.

கிருலப்பனைப் பகுதியைச் சேர்ந்த 36 வயதுடைய இரு பிள்ளைகளின் தந்தை ஒருவருக்கே இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

2012 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 7 ஆம் திகதி பொல்ஹேனகொட இராணுவத்துக்குக்கிடைத்ததகவலையடுத்து கிருலப்பனைப் பொலிஸ் போதைப் பொருள்ஒழிப்புபிரிவினர்குறித்தநபரைக்கைதுசெய்திருந்தனர்.

நீதிமன்றில்நீண்டவிசாரணைகளின்பின்னர்அவர் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டது. அதனையடுத்து இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

குற்றவாளி 6 திருட்டுச் சம்பங்களில் ஈடுபட்டிருந்தார் என்றுமந்நீதிமன்றில்வழக்குத்தொடுக்கப்பட்டுள்ளதாகவும் 2012 ஆம் ஆண்டு 340 கிராம் கஞ்சாவை வைத்திருந்தசம்பவம்தொடர்பில்குற்றம்நிரூபிக்கப்பட்டதாகவும் அரச தரப்பு சட்டத்தரணி நீதிமன்றில் கருத்துத் தெரிவித்திருந்தார்.

இவை அனைத்தையும் கருத்திற்கொண்டு குற்றவாளிக்கு ஆயுள் தண்டனை வழங்கித் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (4)

# இராணுவ கொள்ளையனும் பறிகொடுத்த பொலிஸும்

வவுனியா இராணுவ முகாமில் பணியாற்றும் மதவாச்சியை சேர்ந்த 30 வயதான இராணுவச் சிப்பாயே இந்தச் சம்பவத்தின் சூத்திரதாரி எனத் தெரிவிக்கப்பட்டது.

அவர் தனது கடமை நேரத்தில் படையில் இருப்பார். கடமை முடிந்த பின்னர் பகுதிநேரத் தொழிலாக வழிப்பறிக்கொள்ளையில் ஈடுபடுவதை வழமையாகக் கொண்டிருந்துள்ளார் என்று விசாரணைகளில்தெரியவந்துள்ளதாகஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சம்பவம் அநுராதபுரத்தில்சிலநாள்களுக்கு முன்னர் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் தெரிய வருவதாவது.

பெண்பொலிஸ் உத்தியோகத்தர் உந்துருளியில் தனது மகனுடன் வீடுநோக்கிச்சென்றுகொண்டிருந்தார். சிப்பாயான குறித்த திருடன் பொலிஸ் அலுவலரின் கழுத்தில் இருந்த தங்கச் சங்கிலியைஅறுத்துக்கொண்டுசென்றுள்ளார். அவன் தனது உந்துருளியில் சென்றே கொள்ளையில் ஈடுபட்டுள்ளார். பொலிஸ் அலுவலரான அந்தப் பெண் பொலிஸாருக்கு அறிவித்தார். அதன்படி நடவடிக்கைகளை மேற்கொண்ட அநுராதபுர பொலிஸார் சந்தேகநபரைக் கைது செய்தனர். அவரை விசாரணை செய்தபோது அவர் இதற்கு முன்னரும் இது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றார் என்பது தெரியவந்தது. பெண்ணின் தங்கச் சங்கிலியையும் இதே பாணியில் கொள்ளையடித்துமதவாச்சியிலுள்ளஒருநகைக் கடையில்விற்றுள்ளார்என்பதும்தெரியவந்துள்ளது. அவருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (4)

## நகர நுழைவாயிலில் உள்ள

# கூட்டுறவுத் திணைக்களக் காணியை இராணுவத்தினர் விடுவிக்கவேண்டும்

## மன்னார் ஒருங்கிணைப்பில் அறிவுறுத்து



மன்னார், ஓக. 7

மன்னார் நகரத்தின் நுழைவாயிலில் அமைந்துள்ள கூட்டுறவுத் திணைக்களத்தின் காணியை இராணுவம் உடனடியாகக் கூட்டுறவுத் திணைக்களத்திடம் கையளிக்க நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கூட்டம் மன்னார் மாவட்டச் செயலகக்கேட்போர்கூடத்தில்நேற்று மதியம் இடம்பெற்றது.

மன்னார் மாவட்டச் செயலர் சி.ஏ.மோகன்ராஸின் ஏற்பாட்டில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், அமைச்சர் ரிசாட் பதியுதீன், பிரதி அமைச்சர் கே. கே. மஸ்தான், நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், ஆகியோரின் இணைத்தலைமையில் இது இடம்பெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன், வடக்கு அமைச்சர்களான ஜீ. குணசீலன், க.சிவநேசன், மாகாண சபை உறுப்பினர் அலிக்கான்சரீப், பிரதேசசெயலாளர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள், திணைக்களத் தலைவர்கள், பொலிஸ் கடற்படை உயர் அதிகாரிகள், மீனவ, விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலர்கலந்து கொண்டிருந்தனர்.

அதன்போது, மன்னார் நகர நுழைவாயிலில்அமைந்துள்ளகூட்டுறவுத் திணைக்களத்தின் காணி இராணுவ வசம் உள்ளது.

அதை உடனடியாக மாகாணக்கூட்டுறவுத் திணைக்களத்தின் நடவடிக்கைக்காகவிடுவிக்கப்படவேண்டும் என்று முதலமைச்சர் தெரிவித்தார். ஆனால் இராணுவத்தினர் சார்பாக எந்தவொருஅதிகாரியும்அதில்கலந்துகொண்டிருக்கவில்லை. அந்த விடயம் தொடர்பில் அவர்களுக்கு அறிவிப்பது என்று கூறப்பட்டது.

மன்னார் மாவட்டத்தில் மீன்பிடி, சுகாதாரம், போக்குவரத்து, குடிதண்ணீர், விவசாயம், கால்நடை வளர்ப்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டன.

அடையாளம் காணப்பட்ட குளங்களின் சீரமைப்பு, மீன்பிடி, மணல் தடைகளுக்கான எல்லைக்கட்டுப்பாடு, வன ஜீவராசிகள் திணைக்களத்தால்காணிகள்எல்லையிடுதல், முள்ளிக்குளம் காணி, உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.

இந்தியாவிலிருந்துநாடுதிரும்பிவீட்டுத்திட்டம் கிடைக்காத அனைத்து மக்களுக்கும் வீட்டுத்திட்டத்தைப் பெற்றுக்கொடுக்கவேண்டுமென்று கூட்டத்தில்தீர்மானம்நிறைவேற்றப்பட்டது.

மாவட்டத்தில்உள்ளகுடிதண்ணீர் வசதியைப் பெற்றுக்கொள்ளாத கிராம மக்களுக்கும் குறித்த வசதிகளை உடன் ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

மக்களின் காணிகளில் தொல்பொருள் திணைக்களம் மற்றும் வன ஜீவராசிகள்திணைக்களத்தால்எல்லைகள் போடப்பட்டுள்ளமை குறித்தும் பேசப்பட்டது. அதன்போது அதிகளவான எல்லைகளை அகற்றுவதற்கு அறிவுறுத்தல்கள்வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (4,56)

# ஒரு பில்லியன் அமெரிக்க டொலரை இரு கட்டங்களாக சீனா வழங்குகிறது

கொழும்பு, ஓக.7

சீனா ஒரு பில்லியன் அமெரிக்க டொலரைக் கடனாக வழங்கவுள்ளதுடன், அதன் முதற்பாதி இந்தமாத இறுதியிலும், எஞ்சிய தொகை ஒக்ரோபர் மாதமளவிலும் வழங்கவுள்ளது என்று மத்திய வங்கியின் ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி தெரிவித்தார்.

மத்திய வங்கியில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: சீனாவின் மூலோபாயப் பங்குதாரராக இலங்கையைக் கருதுகின்றனர். இலங்கைக்குப் பல்வேறு நிதிசார் உதவிகளை வழங்கும் நாடாகச் சீனா உள்ளது. அந்த அடிப்படையில் சீன அபிவிருத்தி வங்கி 5.25 சதவீத வட்டியுடன் 3 வருட மீள்செலுத்துகைக் காலத்துக்குள் இந்தக் கடனை வழங்குகின்றது. ஏனைய பன்னாட்டுக் கடன்களை விடவும் சீனா வழங்கும் கடன்கள் இலாபகரமானதாக உள்ளது - என்றார். (4)

# பாவனைக்கு உதவாத உப்பு மருத்துவ பிரிவால் மீட்பு

கொழும்பு, ஓக.7

மனித பாவனைக்கு உதவாத உப்பு தொகையொன்று ஹூங்கம நகர சபையின் தனியார் களஞ்சியசாலையொன்றில் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

ஹம்பாந்தொட்டை பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரிகள் பணியக பொது சுகாதார ஆய்வாளர்கள் இந்த உப்பைச் சில நாள்களுக்கு முன்னர் மீட்டுள்ளனர்.

உப்பு உற்பத்தி தொழிற்சாலையாக பராமரித்துச் செல்லப்பட்ட இந்த இடம் நீண்ட நாள்களாக மூடப்பட்டுக் கிடந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த உப்பு தொகை மிகவும் அசுத்தமான நிலையில் காணப்பட்டுள்ளது. குறித்த உப்புத் தொகை பாரவூர்தியொன்றுக்கு ஏற்ற தயார் நிலையில் இருந்தபோது சில நாள்களுக்கு திடீர் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டு மீட்கப்பட்டது. களஞ்சியசாலை உரிமையாளரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டது. (4)

# 160 தொடருந்துப் பெட்டிகளும் 12 இயந்திரங்களும் இறக்குமதி

## அமைச்சர் நிமல் கூறுகிறார்

கொழும்பு, ஓக.7

160 தொடருந்துப் பெட்டிகளும் 12 தொடருந்து இயந்திரங்களும் வெகு விரைவில் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படவுள்ளன என்று போக்குவரத்து மற்றும் வானூர்திப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா கூறியுள்ளார்.

ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இதனூடாக மக்களினதும் பொருள்களினதும் போக்குவரத்தை முன்னேற்ற இயலும்.

இயந்திரங்கள் ஒவ்வொன்றும் 4 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியானவை. பவர்செட் என்று அழைக்கப்படும் தொடருந்துப் பெட்டிகளுடன் இயந்திரங்களும் இணைந்த வகையில் தொடருந்துப் பயணத்தை மேற்கொள்வதைப் பலரும் விரும்புவார்கள்.

தொடருந்துப் பயணங்கள் தான் தற்போது இலகுவானதாகவும் இலாபகரமானதாகவும் காணப்படுகிறன. பொதுமக்கள் தொடருந்துப் பயணங்களில் ஆர்வம் காட்டுகிறார்கள்.

பொதுமக்கள் நம்பிக்கையான பேருந்து போக்குவரத்துச் சேவையைத்தான் விரும்புகிறார்கள். தனியார் பேருந்துகளுடன் ஒப்பிடுகையில் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குரிய பேருந்துகள் மிகக் குறைந்த அளவே விடத்துக்குள்ளாகியுள்ளன. அதனால் இப்போது பொதுமக்கள், இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பேருந்துகளில் பயணிப்பதையே விரும்புகின்றனர். இதனூடாக இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வருமானமும் அதிகரிக்கிறது.

ஆயிரம் பேருந்துகளை இறக்குமதி செய்யப்படவுள்ளன. அவற்றில் மின்சார சக்தியில் இயங்கும் 500 பேருந்துகளும் உள்ளடங்குகின்றன. பேருந்துகளில் கட்டணங்களுக்குப் பின்னர் மிகுதிப்பணம் கொடுப்பதில் பேருந்து நடத்துநர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளைத் தவிர்ப்பதற்காகப் புதிய காட் முறைமை அறிமுகப்படுத்தத் திட்டமிடப்படுகிறது - என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார். (4)




# கோத்தா அரசதலைவராவதை தடுக்கும் நோக்கில் தூதரகம்!



கொழும்பு, ஓக.7

அடுத்த அரசதலைவர் தேர்தலில் கோத்தபாய ராஜபக்ச களமிறங்குவதைத் தடுப்பதற்கான நடவடிக்கையில் கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் ஈடுபட்டுள்ளது என்று திவயின சிங்கள நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றி விசாரிக்கும் அரசதலைவர் ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வல் பரணகமவைச் சந்தித்த அமெரிக்க தூதரக அதிகாரிகள், கோத்தபாய ராஜபக்சவுக்கு எதிரான போர்க்குற்றச்சாட்டுகள் குறித்து விசாரித்துள்ளனர்.

காணாமல் ஆக்கப்படும் நடவடிக்கைகள், வெள்ளைக் கொடிச் சம்பவம் குறிப்பாக விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் நடேசன் சரணடைந்த பின்னர் கொல்லப்பட்டமை தொடர்பான நடவடிக்கைகளைக் கோத்தபாய ராஜபக்ச நடைமுறைப்படுத்தினாரா என்பது குறித்து தெரிந்து கொள்வதிலும் அமெரிக்க அதிகாரிகள் ஆர்வம் காட்டியுள்ளனர் என்றும் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மக்ஸ்வல் பரணகமவின் கருத்தை அறிய மேற்கொண்ட முயற்சி பலனளிக்கவில்லை என்றும் கூறப்பட்டுள்ளது. (4)

# பொலிஸ் என்று அறிமுகப்படுத்தி சங்கிலி திருடிய பெண் மறியலில்

## மறைகாணியின் உதவியுடன் கைதானார்

கொழும்பு, ஓக.7

ஏறாவூர் நகர கடைத்தெருவிலுள்ள நகைக்கடையொன்றுக்குச்சென்ற பெண்ணொருவர் தன்னைப் பெண் பொலிஸ் உத்தியோகத்தராக அறிமுகப்படுத்தி நகையைத் திருடிச் சென்றுள்ளார். அவர் மறைகாணியின் உதவியுடன் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் மாத்தளை நாவல பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இது குறித்துப் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டது. மறைகாணியின் (சி.சி.ரி.வி) உதவியுடன் ஏறாவூர் குற்றத் தடுப்புப் பொலிஸ் பிரிவினர் விசாரணை நடத்தி குறித்த குற்றச்சாட்டில் அந்தப் பெண்ணைக் கைது செய்தனர். அவர் மாத்தளை நகரில் வைத்துக்கைது செய்யப்பட்டார். அதே இடத்தைச் சேர்ந்த 50 வயதுடைய பெண்ணே கைது செய்யப்பட்டார்.

விசாரணைகளின் அடிப்படையில் நகைக்கடையில் திருடிய நகையை கதுறுவெலநகரில்விற்றுள்ளதாகத் தெரிவித்துள்ளார். கைது செய்யப்பட்ட பெண்ணுடன் மாத்தளையிலிருந்து கதுறுவெல நகருக்குச் சென்ற பொலிஸார் திருடப்பட்டு விற்கப்பட்டநகையை மீட்டனர். அதனை வாங்கியவரைப் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து வாக்குமூலம் பதிவு செய்தனர்.

அவரை எதிர்வரும் 17ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறும் அன்றையதினம் அவரை அடையாள அணிவகுப்புக்கு முற்படுத்துமாறும் நீதிவான் உத்தரவிட்டார்.



இதேவேளை, குறித்த பெண் நகைக்கடைக்குள்நுழைந்து தன்னை அறிமுகப்படுத்திய போது தானும் தனது கணவரும் வாழைச்சேனைப் பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் உத்தியோகத்தர்களாகக் கடமையாற்றுவதாகக் கூறியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

தமக்கு நகை கொள்வனவு செய்ய வேண்டிய தேவை இருப்பதாகவும் கூறியுள்ளார்.

பெண்ணின் வேண்டுகோளுக்கிணங்க தங்க நகைகளைப் பார்வைக்குக் காட்டிக்கொண்டிருக்கும்போது குறித்தபெண், தான் வங்கியிலிருந்து பணம் பெறவேண்டும் என்பதாகக் கூறி நகைக்கடையை விட்டு வெளியேறியுள்ளார், அதன் பின்னர் நகைக் கடை உரிமையாளர் நகைகளைச் சரிபார்த்த போது ஒரு தங்கச் சங்கிலி காணாமல் போயிருந்தது.

மறைகாணியைப் பரிசோதித்தபோது தங்க மாலைகளில் ஒன்றை அந்தப் பெண் திருடித் தனது கைப்பைக்குள் மறைத்தமை பதிவாகியிருந்தது என்று தெரிவிக்கப்பட்டது. (4)

# வங்கி அட்டையைத் திருடி பணம் எடுத்தவருக்கு மறியல்

கொழும்பு, ஓக.7

பொதுமருத்துவமனையின் முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கரவண்டியில் இருந்த பணப்பையைத் திருடி, அதிலிருந்த வங்கி அட்டையை எடுத்து 70 ஆயிரம் ரூபா பணத்தைப் பெற்றுக் கொண்டமை தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். அவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டது.

சம்பவம் திருகோணமலை துறைமுக பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் சில நாள்களுக்கு முன்னர் இடம்பெற்றுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

திருகோணமலை C/3ஆம் கட்டை சோலையடியைச் சேர்ந்த 22 வயதுடைய ஏ. ஜே. முகம்மட் அணஸ் என்பவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

முச்சக்கரவண்டி உரிமையாளர் செய்த இந்த முறைப்பாட்டையடுத்து குறித்த வங்கியின் மறைகாணியின் (சி.சி.ரி.வி) மூலமாகப் பெறப்பட்ட புகைப்படத்தை அடிப்படையாக வைத்துச் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார் என்று துறைமுகப் பொலிஸார் தெரிவித்தனர்.

அவருக்கு எதிராக முன்னரும் பல குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (4)

# துப்பாக்கிச் சூடு நடத்தினரென்று மினுவாங்கொடயில் இருவர் கைது

கொழும்பு, ஓக.7

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் 2 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவண் குணசேகர தெரிவித்துள்ளார்.

மினுவாங்கொட, பட்டியான சந்திப் பிரதேசத்தில் கடந்த சனிக்கிழமை இந்தத் துப்பாக்கிச் சூட்டு சம்பவம் இடம்பெற்றது. அதில் 68 வயதுடையவர் உயிரிழந்தார்.

சந்தேக நபர்கள் இருவரும் பன்னல பகுதியில் அமைந்துள்ள வீடு ஒன்றில் ஒழிந்திருந்தபோதே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்துக்குப் பயன்படுத்தப்பட்ட உந்துருளி ஒன்றும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது என்று பொலிஸ் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (4)

## சுற்றுலாப்பயணிகளின் அறைகளில் கொள்ளை

கொழும்பு,ஒக.7
உணவகமொன்றுக்குள் நுளைந்த கும்பலொன்று அங்கு தங்கியிருந்த சுற்றுலாப் பயணிகளின் பணத்தைக் கொள்ளையடித்துள்ளது.
இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை சிகிரியா சுற்றலா வலயத்தில் இடம்பெற்றுள்ளது.
கொள்ளையர்கள், சுற்றுலாப் பயணிகள் தங்கியிருந்த 5 அறைகளுக்குச்சென்றுள்ளனர். அதனுடன்தொடர்புடைய காட்சிகள் கண்காணிப்பு கமராவில் பதிவாகியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
இதற்கு முன்னரும் தம்புள்ளை மற்றும் சிகிரியா போன்ற பிரதேசங்களில் சுற்றுலாப்பயணிகள் தங்கியிருந்த உணவகங்களில் நுழைந்து கொள்ளையிடப்பட்ட பல சம்பவங்கள் இடம்பெற்றுள்ளது. (ரி2)

## விமலின் வழக்கு நவம்பர் 2 இல் விசாரணைக்கு



கொழும்பு,ஒகஸ்ட்7
சட்ட விரோதமான முறையில்வருமானங்களும்சொத்துக்களும் ஈட்டியுள்ளமை தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்விமல்வீரவன்சவுக்கு எதிராகத் தொடரப்பட்டுள்ள வழக்கை விசாரிக்க, கொழும்பு மேல் நீதிமன்றம் திகதியை அறிவித்துள்ளது.
இந்த வழக்கு மீதான விசாரணை நேற்று கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி விக்கும் களுவாராச்சி முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.
வழக்குடன் தொடர்புப்பட்ட கணினி சாட்சியங்கள் குற்றம் சுமத்தப்பட்ட தரப்பினரால் இதுவரை பரிசோதிக்கப்படவில்லை எனத் தெரியவந்துள்ளது.
கணினிசாட்சியங்களைப்பரிசோதிக்ககாலஅவகாசத்தை வழங்கியிருந்தநீதிபதி,வழக்குவிசாரணைகளைநவம்பர் மாதம் 2 ஆம் திகதி நடத்துமாறும் உத்தரவிட்டுள்ளார்.
2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் 2014 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதி வரை அமைச்சராகக் கடமையாற்றிய வீரவன்ச, சட்டவிரோதமாக 75 மில்லியன்ரூபாவுக்கும்மேல்சம்பாதித்துள்ளதாகக்குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.
இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் அவருக்கு எதிராக இலஞ்ச சட்டத்தின் கீழ் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (ரி2)

## களியாட்ட நிகழ்வில் பங்கேற்ற நான்காவது நபரும் உயிரிழப்பு

கொழும்பு,ஒகஸ்ட்.7
களியாட்ட நிகழ்வில்கலந்துகொண்டு உணவுஒவ்வாமையினால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நான்காவது நபரும் உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
கடந்த சனிக்கிழமை வாதுவைப் பகுதியிலுள்ள களியாட்ட நிகழ்வொன்றில் வழங்கப்பட்ட உணவை உட்கொண்டதில் நால்வர் பாதிப்புக்குள்ளாகி பாணந்துறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தனர்.
எனினும்சிகிச்சை பயனின்றி இருவர் சனிக்கிழமை இரவு உயிரிழந்ததுடன் மற்றைய இருவருக்கும் தொடர்ந்தும் சிகிச்சை வழங்கப்பட்டு வந்த நிலையில் மேலும் ஒருவர் நேற்று முன்தினம் உயிரிழந்தார்.
இந்த நிலையில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வந்த நான்காவது நபரும் நேற்று உயிரிழந்துள்ளார்.
சம்பவத்தில் கஸ்பாவ, திவுலபிட்டிய மற்றும் வாதுவ பகுதிகளைச் சேர்ந்த 20, 26, 31, 36 வயதுகளையுடையவர்களே உயிரிழந்தனர். சம்பவம் தொடர்பில்இதுவரையில்எவரும் கைதுசெய்யப்படவில்லை எனத் தெரிவிக்கும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர, 20 பேர் வரையில் வாக்குமூலம் பெறப்பட்டிருப்பதாகவும் தொடர்ந்து விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.
இந் நிகழ்வின் போது, பரிமாறப்பட்ட உணவு மற்றும் மது பானவகைகள் தொடர்பில் மருத்துவப்பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரியவருவதோடு, விருந்தகத்தின் சி.சி.ரி.வி. கமராக்கள் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளன. மேலதிக விசாரணைகளை வாதுவைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் வழிகாட்டலின் கீழ் முன்னெடுக்கப் பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ரி2)

# சிங்கப்பூர் ஒப்பந்தத்தை மீளாய்வு செய்யுங்கள்

## மகிந்த ராஜபக்ச தெரிவிப்பு

கொழும்பு,ஒகஸ்ட்7
இலங்கை சிங்கப்பூர் இடையிலான சுதந்திர வர்த்தக உடன்படிக்கையில் இலங்கைக்குப் பாதகமான விடயங்கள் இருப்பதாகவும் அந்த உடன்படிக்கை குறித்து மீளாய்வு செய்யப்படவேண்டும் எனவும் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அனுராதபுரத்தில்நேற்றுக்காலைஸ்ரீமஹாபோதி புனித வெள்ளரசு மரத்துக்கு அருகில்வழிபாடுகளில்ஈடுபட்டபின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.
இதேவேளை தலைமை அமைச்சர் ரணில்விக்ரமசிங்கவுக்கும், முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவுக்கும் இடையில் உடன்பாடுகள் இருப்பதாக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திஸநாயக்க நேற்று முன்தினம் கூறியிருந்தமை தொடர்பான கேள்விக்குப் பதிலளித்துள்ள மகிந்த ராஜபக்ச,
தனக்கும்தலைமைஅமைச்சர்ரணில் விக்ரமசிங்கவுக்கும்இடையில்எவ்வித உடன்பாடுகளும் இல்லை எனவும், அனுரகுமார திஸநாயக்கவுக்கும் தலைமை அமைச்சருக்கும் இடையிலேயே உடன்பாடுகள் இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அனுரகுமார திஸநாயக்க,நாடாளுமன்றத்தில்உரையாற்றும் போது, தலைமை அமைச்சருக்குத் தேவையான வகையிலேயே உரையாற்றுகிறார்எனவும்மகிந்தராஜபக்சகுறிப்பிட்டுள்ளார். அனுரகுமாரதிஸநாயக்கதன்னுடன் விவாதத்திற்கு வருமாறு முன்னாள் அரச தலைவருக்கு விடுத்துள்ள சவால் தொடர்பாகக் கேள்விக்குப்பதிலளித்துள்ளமகிந்தராஜபக்ச, அனுரகுமார திஸநாயக்கவுடன் விவாதத்திற்கு செல்லப் போவதில்லை எனவும் அவருடன் யார் விவாதத்திற்கு செல்வார்கள் எனவும் தெரிவித்துள்ளார். (ரி2)

## புறக்கணிக்கப்பட்ட தொண்டராசிரியர்கள் வழக்குத் தாக்கல்

கொழும்பு,ஒக. 7
நேர்முகப் பரீட்சைக்கு அழைத்தும் தமக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை என தொண்டராசிரியர்களாகக் கடமையாற்றிய நால்வர் நேற்றுத் திருகோணமலை மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.
கடந்த 2007 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரை பல தடவைகள் தொண்டராசிரியர்களுக்கு நேர்முகப்பரீட்சை இடம்பெற்றது. இதில், 456 தொண்டராசிரியர்களின் பெயர்கள் வெளியாகியுள்ள நிலையில் தங்களுடைய பெயர்கள் உள்வாங்கப்படவில்லை எனவும் தங்களுக்கு நீதியை பெற்றுத்தருமாறு கோரி இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித போகொல்லாகம, பிரதிப் பிரதம செயலர் (நிர்வாகம்) எச்.ஜீ.எம். டபிள்யூ. ஜீ.திஸ்ஸநாயக்க மற்றும் கல்வி அமைச்சின் செயலர் ஐ.கே.ஜீ. முத்துபண்டா ஆகியோருக்கு எதிராகத் தொண்டராசிரியர் சார்பில் சட்டத்தரணி எஸ். தில்லைராசாவினால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (ரி2)

## டிசெம்பர் மாதத்துக்குள் எட்கா பேச்சுக்கள் நிறைவு

கொழும்பு,ஒகஸ்ட்7
பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்பாடு (எட்கா) தொடர்பான பேச்சுக்களை இந்த ஆண்டு டிசெம்பர்மாதத்துக்குள்முடிக்க இலங்கை அரசு இந்தியாவுடன் இணங்கியுள்ளது.
புதுடெல்லியில் உள்ள இந்திய அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி பிரிஐ நிறுவனம் இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது.
ஆரோக்கியமான வகையில் பேச்சுக்கள் இடம்பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. எட்கா உடன்பாடு குறித்த பேச்சுக்களை, டிசெம்பர் மாதத்துக்குள் முடிக்க இரண்டு நாடுகளும் இலக்கை நிர்ணயித்துள்ளன. என்றும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார். (ரி2)

## ஆயுள்வேதத் தாபனத்தின் கட்டடம் திறந்து வைப்பு



கொழும்பு,ஒகஸ்ட்7
இலங்கைஆயுள்வேதஔடதக்கூட்டுத்தாபனத்தில்புதிதாக அமைக்கப்பட்டுள்ளநான்குமாடிக்களஞ்சியத்தொகுதியை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நேற்றுத் திறந்து வைத்தார்.
ஆயுள்வேதஔடதங்களைக்கொள்வனவுசெய்யும்மத்திய நிலையத்தின் ஊடாகக் கொள்வனவு செய்யப்படும் உலர் ஔடதங்கள் மற்றும் உற்பத்தி செய்யப்படும் ஔடதங்களைக் களஞ்சியப்படுத்துவதற்காக இந்தப் புதிய கட்டடத் தொகுதி அமைக்கப்பட்டுள்ளது.
ஆரோக்கியமான சமூகமொன்றைக்கட்டியெழுப்புவதற்கு மருத்துவத்துறையின்தனித்துவத்தைப்பாதுகாத்து, தேசிய மற்றும் பன்னாட்டு மருந்துத் தேவைகளை உயர் நியமங்களுடன் வழங்கும் முன்னோடி நிறுவனமாக இலங்கை ஆயுள்வேத ஔடதக் கூட்டுத்தாபனம் விளங்குகின்றது.
2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்துக்குப் பின்னர் ஆயுள்வேத ஔடத உற்பத்திகளைப் புதிய துறைகளுக்கு உட்படுத்தி மூலிகை சார்ந்த ஆயுள்வேத உற்பத்திகள் மற்றும் மூலிகை சார்ந்த அழகுசாதனப் பொருள்கள் உற்பத்தியில் இலங்கை ஆயுள்வேத ஔடதக் கூட்டுத்தாபனம் ஈடுபட்டு வருகின்றது.
இதன்மூலம்ஆயுள்வேத மருந்துப்பொருள்களுக்குப் புதிய சந்தைவாய்ப்புக்கள்ஏற்பட்டுள்ளதுடன், தற்போது ஏற்றுமதி செய்யப்படும் அழகுசாதன உற்பத்திகளுக்குப் போட்டியாக அதிகரித்த சந்தை வாய்ப்பை இந்த ஆயுள்வேத மூலிகை உற்பத்திகளால் பெற்றுக்கொள்ள முடிந்துள்ளது.
2014 ஆம் ஆண்டு 270 மில்லியன் ரூபாவாக இருந்த ஆயுள்வேத உற்பத்திகளுக்கான செலவு 2017 ஆம் ஆண்டில் 343 மில்லியன் வரை அதிகரிக்கவும், அவ் உற்பத்திகளைவிற்பனைசெய்வதன்மூலம்கிடைக்கும்வருமானம் 2014 ஆம் ஆண்டு 340 மில்லியனாக இருந்ததுடன், 2017 ஆம் ஆண்டு 501 மில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளமைக்கும் இந்தப் புதிய அணுகுமுறையே காரணமாகும்.
நினைவுப்பலகையைத்திரைநீக்கம்செய்தஅரசதலைவர், புதிய கட்டடத் தொகுதியைத் திறந்து வைத்தார். இலங்கை ஆயுள்வேதஔடதக்கூட்டுத்தாபனத்தினால்உற்பத்திசெய்யப்படும் 7 புதியவகை மருந்துகள் இதன்போது அறிமுகப்படுத்தப்பட்டன.
அமைச்சர் ராஜித சேனாரத்ன, பிரதியமைச்சர் பைசால் காசிம், மேல்மாகாண முதலமைச்சர் இசுர தேவப்பிரிய, இலங்கைஆயுள்வேதஔடதக்கூட்டுத்தாபனத்தின்தலைவர் லால் சமரசிங்க ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (ரி2)

# கண்ணீர் காணிக்கை



மலர்வு 17.01.1956

உதிர்வு 06.08.2018

மாரியம்மன் வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகக் கொண்ட
வரலாற்றுத்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர்

**சோமேசசுந்தரி கிருஸ்ணகுமார்**

**(சிரேஷ்ட விரிவுரையாளர், வரலாற்றுத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)**

அவர்கள் நேற்று (06.08.2018) திங்கட்கிழமை இறைபதம் அடைந்-துள்ளார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பிரிவைப் பகிரும்**

**தொல்லியல், வரலாற்றுத்துறை.**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

(CS/13555)(11.17)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சோமேசசுந்தரி கிருஷ்ணகுமார்.

*(சிரேஷ்ட விரிவுரையாளர் - வரலாற்றுத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)*



மூளாயைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சோமேசசுந்தரி கிருஷ்ணகுமார் நேற்று (06.08.2018) திங்கட்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் . காலஞ்சென்றவர்களான அரியகுட்டி - தவபாக்கியம் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் - கௌரிஅம்பாள் தம்பதிகளின் மருமகளும் இராசரத்தினம் கிருஷ்ணகுமாரின் (ஓய்வு பெற்ற சிரேஷ்ட உதவிப்பதிவாளர்) அன்பு மனைவியும் சேந்தன் (மருத்துவர் - USA), பிரணவன் (மென்பொருள் பொறியியலாளர்), ஆரூரன் (சத்திரசிகிச்சை மருத்துவர் - போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), அபர்ணா (மாணவி - தெற்காசிய பல்கலைக்கழகம்), அஜிதா (மாணவி - கொழும்பு பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் பிரவீனா, டிலானி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் கிருஷ்ணிதா, ஆதர்சன் ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும் விஜயசுந்தரி, முகுந்தசுந்தரி, சண்முகம், வைத்திலிங்கம், சிவகாமசுந்தரி ஆகியோரின் சகோதரியும் இராஜலட்சுமியின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.08.2018) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் (திருநெல்வேலி) நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**10/08, மாரி அம்மன் வீதி.**
**முதலாம் ஒழுங்கை,**
**திருநெல்வேலி.**

தகவல்: குடும்பத்தினர்,
**இ.கிருஸ்ணகுமார் (கணவர்)**
**0778210175**

## சின்னத்தம்பி தங்கராசா



ஏழாலை வடக்கைப் பிறப்பிடமாகவும், ஊரெழு மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி தங்கராசா நேற்று (06.08.2018) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான நடராசா, நாகம்மா, சிவராசா ஆகியோரின் அன்புச்சகோதரரும் சொர்ணலீலாவதியின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை சொர்ணம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் சுஜீவ்கரன், சுஜீத்தா, சுபகம்சி ஆகியோரின் அன்புத்தந்தையும் மயூரன், யுசாந்தன் ஆகியோரின் அன்புமாமனும் யதுரன், கஸ்சா, கஷ்வின் ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.08.2018) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப. 2 மணியளவில் பூதவுடல் ஊரெழு பொக்கணை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஊரெழு மேற்கு,**
**ஊரெழு.**

**தகவல் :**
**குடும்பத்தினர்.**

## வீடு வாடகைக்குண்டு

அரசடி லேன், யாழ்ப்பாணத்தில் சகல வசதிகளுடன் கூடிய புதிய வீடு வாடகைக்குண்டு. (CS/18029)(11.17)

**077 850 3176 , 8.00am to 9.00 pm**

## வாடகைக்குண்டு

பருத்தித்துறை வீதியில் சகல வசதிகள் கொண்ட ரெஸ்ரோறண்ட் வாடகைக்குண்டு.

**077 486 0517, 077 595 2245**

## தேவை

- மிக்சர் பொதி செய்வதற்கு வேலையாள்கள் தேவை
- குடிநீர் சுத்திகரிப்பு ( Water Filter) பெரிய இயந்திரம் தேவை.

**077 205 6567**

## வேலையாள்கள் தேவை

தனியார் நிறுவனம்
ஒன்றிற்கு துப்புரவு பணிக்கு
(Peon) ஆள்கள் தேவை.

**நேரம் - 9.00 am - 5.30 pm**

**தொடர்பு - 070 305 5001**

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com, 021 493 1111

# நீங்கா நினைவலைகள்

**25 ஆம் ஆண்டு 21 ஆம் ஆண்டு 4 ஆம் ஆண்டு**







**இளையதம்பி கந்தசாமி**
மலர்வு 13.02.1929 உதிர்வு 20.12.1993

**செல்வி மைதிலி கந்தசாமி**
மலர்வு 19.11.1961 உதிர்வு 30.07.1997

**திருமதி மங்கையர்க்கரசி கந்தசாமி**
மலர்வு 15.01.1930 உதிர்வு 09.03.2014

திதி: ஏகாதசி

ஆண்டுகள் பல சென்றும் ஆறவில்லை எம் துயரம்
நீண்டு நினைவுதரும் உங்கள் பசுமையான நினைவுகளால்
நிதம் வாடித் தவிக்கின்றோம்.

ஞானபண்டித பாடசாலை அருகில்
கொக்குவில் மேற்கு, கொக்குவில்

**குடும்பத்தினர்.**

# பெறுகைகள் அறிவித்தல் 2018/2019
# பொதுவைத்தியசாலை, வவுனியா
# 2018 ஆம் ஆண்டுக்கு தேவையான வழங்கல்கள் / சேவைகள்

**வவுனியா பொதுவைத்தியசாலைக்கு பின்வரும் வழங்கல் சேவைகளுக்கான பெறுகைகள் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அவர்களின் அங்கீகாரத்தின் கீழ் 2018 நவம்பர் முதல் ஒக்டோபர் 2019 வரையான காலப்பகுதிக்கு கோரப்படுகின்றன.**

01) வழங்கல்கள்,சேவைகளின் விவரமும் வைப்புத் தொகைகளும்.

| இல | விவரம் | எண்ணிக்கை | மீளளிக்கப்படாத வைப்புத் தொகை (ரூபா) | கேள்விப் பிணை (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | உணவு விநியோகித்தல் | | 2000.00 | 100,000.00 |
| 02 | சுத்திகரிப்பு சேவை | 29 | 2000.00 | 25.000.00 |
| 03 | சுத்திகரிப்புசேவை (வைகறை) | 07 | 1000.00 | 15,000.00 |
| 04 | வாயு சீராக்கிபராமரிப்பு சேவைகள் | 120 | 2000.00 | 10,000.00 |
| 05 | பிணவறைக் குளிரூட்டிகள் பராமரிப்பு சேவைகள் | 03 | 1000.00 | 10.000.00 |
| 06 | வாகனங்கள் சுத்திகரிப்பு சேவைகள் | 15 | 2000.00 | 25.000.00 |

02. மீளளிக்கப்படாத வைப்புக்கள் வைத்தியசாலையின் நிதிப்பிரிவில் காசாக செலுத்திப் பற்றுச்சீட்டுக்கள் பெற்றுக் கொள்ள வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட வங்கியொன்றிலிருந்து 31.10.2018 வரை செல்லுபடியாகக் கூடிய பிணைப் பொறுப்பொன்று கேள்வி ஆவணத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.

03. பெறுகைப்பத்திரம் கோரும் நிறுவனங்கள் வடக்கு மாகாணத்தில் அமைந்திருப்பதுடன் குறித்த சேவையினை வழங்குவதற்கான வியாபார பெயர்ப் பதிவினைக் கொண்டிருப்பதுடன் அது தொடர்பான அனுபவத்தினையும் கொண்டிருத்தல் வேண்டும்.

04. பெறுகை ஆவணங்கள் 07.08.2018 தொடக்கம் 28.08.2018 வரை பெற்றுக்கொள்ளலாம்.

05. பிரதியுடன் கூடிய சகலபெறுகை ஆவணங்களும் தலைவர், பிராந்திய பெறுகைக்குழு, மாவட்ட பொதுவைத்தியசாலை, வவுனியா என்ற முகவரிக்கு அனுப்பப்படுவதுடன் கடித உறையின் இடதுபக்கமேல் மூலையில் 2018/2019 ஆம் ஆண்டிற்கான .................. சேவையென குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

06. சகல முத்திரையிடப்பட்ட பெறுகைகளும் 28.08.2018 பிற்பகல் 14.30 மணிவரை மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

07. பெறுகைநேரம் முடிவடைந்தவுடன் 28.08.2018 பிற்பகல் 14.30 மணிக்குத் திறக்கப்படும் பெறுகை திறக்கும் போது விண்ணப்பதாரரோ அல்லது எழுத்து மூலம் நியமிக்கப்பட்ட பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.

08. மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் நேரடியாகவோ அல்லது 024-2222715 மற்றும் 024-2228094 என்ற தொலைபேசி இலக்கத்துடனே தொடர்பு கொண்டு அறிந்துகொள்ளலாம்.

09. பெறுகை தொடர்பாக பெறுகைக்குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**தலைவர்,**
**பிராந்தியபெறுகைக்குழு,**
**மாவட்டபொதுவைத்தியசாலை, வவுனியா.**

(IN/33560)(11.17)

**07.08.2018**

# நாடு திரும்பும், மீளக்குடியமரும் ஏதிலிகளுக்கு வீடுகள் வேண்டும்

## அவற்றை வழங்க உத்தரவிடுமாறு சஜித்திடம் ரிசாட் கோரிக்கை

**மன்னார், ஓக. 7**
**போரால் பாதிக்கப்பட்டுப் புலம்பெயர்ந்து மீளக் குடியமர முற்படும் வடக்கு– கிழக்கு மக்களுக்கு வீடுகள் வழங்கத் தேசிய வீடமைப்பு அதிகார சபை கூடிய கவனஞ்செலுத்த வேண்டும். அதனை விரைவுபடுத்த வேண்டும் என்று அதற்குரிய அமைச்சர் சஜித் பிரேமதாச விடம் அமைச்சர் ரிஷாட் பதியுதீன் வேண்டுகோள் விடுத்தார்.**

மன்னார், நறுவிலிக்குளத்தில் அமைக்கப்பட்ட 23 வீடுகள் கொண்ட மாதிரிக் கிராமம் நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது. அமைச்சர் சஜித் பிரேமதாச முதன்மை அதிதியாகக் கலந்துகொண்டார். இந்த நிகழ்வில் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
கிராம எழுச்சியில் சகலருக்கும் வீடு என்ற திட்டத்தில் ஏனைய பிரதேசங்களைப் போன்று வடக்கிலும் மாதிரிக் கிராமங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இற்றைவரை 34 மாதிரிக் கிராமங்கள் அமைக்கப்பட்டுள்ளன.
வடக்கு- கிழக்கில் போரால் இடம்பெயர்ந்துஉள்நாட்டில்இடம்பெயர்ந்தும் இந்தியாவிலும் வாழ்ந்த மக்கள் தற்போதுதமதுபிரதேசங்களுக்குத்திரும்புகின்றனர். வீடில்லாப் பிரச்சினை பெரும் பிரச்சினையாக இருக்கிறது. அவர்கள் முன்னர் வாழ்ந்த வீடுகள் தகர்ந்து அழிந்துவிட்டன. தற்போது தற்காலிகக் கொட்டில்களை அமைத்துத் தங்கியுள்ளனர். அவர்களுக்கு வீடுகள் அமைக்க வேண்டும். அதற்கேற்பநடவடிக்கைஎடுக்கவேண்டும்.

**மூலிகைத் தோட்டம்**
பாரம்பரியமூலிகைஉற்பத்தித்தோட்டம்ஒன்று இங்கு இன்று (நேற்றுமுன்தினம்) ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.
இந்த அரிய திட்டத்தை வீட்டுக்கு வீடு விரிவாக்கவேண்டும். அதற்குப் பிரதேச செயலர்களும், கிராம அலுவலர்களும் பங்களிக்க வேண்டும்.
இலங்கையில் இது வெற்றிபெற்றால் வருடாந்தம் மூலிகையின் இறக்குமதிக்காகச் செலவிடப்படும் சுமார் 800 அல்லது 900 மில்லியன் ரூபாவை மீதப்படுத்தலாம். உள்ளூர் மக்களின் அபிவிருத்தித் திட்டத்துக்கு அந்த நிதியைப்பயன்படுத்தலாம்–என்றார். (4)



# அப்பளத் தொழிற்சாலையை மீள ஆரம்பிக்கக் கோரிக்கை

## நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்கிறார் பிரதேச செயலர்

கிளிநொச்சி, ஓக. 7
புளியம்பொக்கணை நாகேந்திரபுரம் பகுதியில் இயங்காத நிலையில் காணப்படும் அப்பளத் தொழிற்சாலையை மீள ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றுபொதுமக்கள்கோருகின்றனர். கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கிராமமேபுளியம்பொக்கணை நாகேந்திரபுரம் கிராமம்.
குறித்த கிராமத்தில் அரசசார்பற்ற நிறுவனம் ஒன்றால்பெண்தலைமைத்துவக் குடும்பங்கள் மற்றும் பெண்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்காக அப்பளத் தொழிற்சாலை ஒன்று பல மில்லியன்ரூபாசெலவில்அமைத்துக்கொடுக்கப்பட்டிருந்தது.
குறித்ததொழிற்சாலையை மாதர் சங்கத்தினர் நடத்தி வந்தபோதும் கடந்த ஒரு வருடமாக அந்தத்தொழிற்சாலை மூடப்பட்ட நிலையில் உள்ளது. அங்கு உற்பத்தி செய்யப்படுகின்ற அப்பளம் பொதி செய்யப்பட்டு மக்களுக்கு விற்பனை செய்யப்பட்டு வந்துள்ளது. நாளடைவில் அது செயலிழந்து தற்போது எதுவித இயக்கமும்இன்றியுள்ளது.
"சந்தைப்படுத்தல் பிரச்சினை காரணமாகவே நிறுவனம் சில காலங்கள் இயங்கவில்லை. தற்போது குறித்த கட்டடத்தில் மோர் மிளகாய், பருத்தித்துறை வடை, மிக்சர் தயாரித்தல் போன்றனவுடன் நெல் அரைக்கும் ஆலையும் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அப்பளம்செய்யும் இயந்திரம் பழுதடைந்துள்ளது. அதனைத் திருத்திய பின்னர்அப்பளஉற்பத்தியிலும்ஈடுபடவுள்ளோம்" என்று நாகேந்திரபுரம் மாதர் சங்கத்தலைவி தெரிவித்தார்.
"என்ன காரணத்துக்காகக் குறித்த அப்பளத் தொழிற்சாலை மூடப்பட்டது என்று ஆராய்ந்தபோது, சந்தை வாய்ப்புமற்றும்சிலபொருளாதாரச் சிக்கல்களே காரணம் என்பது கண்டறியப்பட்டது. அதனைமீளஆரம்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு உரிய தரப்பினரிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது" என்று கண்டாவளைப் பிரதேச செயலர் திருமதி த. ஜெயராணி தெரிவித்தார். (4,6)

# ரூ.75,000 கறவை மாடு கடத்தல்

கொடிகாமம், ஓக. 7
75ஆயிரம்ரூபாபெறுமதியானகறவைமாடுதிருடப்பட்டுள்ளதாகப்பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.
கடந்த 31ஆம்திகதி அது கடத்தப்பட்டுள்ளதுஎனத் தெரிவிக்கப்பட்டது.
தென்மராட்சியில் கேரதீவுவீதிகைதடிநாவற்குழியில் இயங்கிவரும் கள்ளுத் தவறணைக்கு அருகிலுள்ள வீட்டிலிருந்துபசுகடத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. கடத்தப்பட்ட பசுமாட்டில் " இ " என்ற எழுத்துஅடையாளமாக உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.
தொடர்ச்சியாக இந்தப் பகுதியில் கால்நடைகள் திருடப்படுகின்றன.
கடந்த 5 வருடங்களுக்குள்அதேவீட்டில்மூன்று தடவைகள் கால்நடைகள் திருடப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (4,159)

# 'ரெலோ' விலிருந்து விலகுவதாக கணேஸ் வேலாயுதம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 7
தமிழ் ஈழ விடுதலை இயக்கக் கட்சியிலிருந்து (ரெலோ) விலகுவதாகக் கணேஸ்வரன் வேலாயுதம் நேற்று அறிவித்தார்.
யாழ்ப்பாணத்தில் உள்ள விருந்தினர் விடுதியில்நேற்றுநடைபெற்றஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
நான் எனது விலகல் கடிதத்தைக் கட்சியின் செயலாளர் ந.சிறிகாந்தாவுக்குக் கடந்த 2 ஆம் திகதி அனுப்பி வைத்துள்ளேன்.
கடந்த 30வருடகாலப்போரில்பாதிக்கப்பட்ட எமது தமிழ் மக்களுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து என்னால் மக்களுக்கு முழுமையான உதவிகளைச் செய்ய முடியவில்லை.
கல்வி, பொருளாதார அடிப்படை வசதிகளின்றி அல்லற்படும் மக்களுக்கு இதுவரை திருப்தியான எந்தவொரு தேவையும் பூர்த்தி செய்யப்படவில்லை.
அத்துடன் தமிழ் விடுதலை இயக்கம் என்ற கட்சி தனித்துவமான ஒரு தனிக் கட்சியாகச் செயற்படவில்லை.
தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின்பங்காளிக் கட்சியாகச் செயற்படுவதால் சுயமாக முடிவெடுத்துச் செயற்பட முடியவில்லை.
நான் எமது மக்களின் கல்வி, தொழில் முயற்சிகளைமேம்படுத்துவதில்எனது முழு நேரத்தையும் செலவிட விரும்புகின்றேன் –என்றார்.
ஊடகவியலாளர்களின் கேள்விக்கு அவர் பதிலளிக்கையில் தெரிவித்ததாவது:
மக்களுக்குத் தேவையான சேவைகளைச் செய்யவேண்டும். அதற்கு அனுமதிகள், அதிகாரங்கள் தேவை. மாகாண சபையில் அங்கத்துவம் என்பது அவசியம்.
இது தொடர்பில் சேவைகளைச் செய்பவர்கள் என்னுடன் இணைந்து கொள்ளலாம். மாகாண சபையின் ஊடாக வேண்டியஅபிவிருத்தித்திட்டங்களைச் செயற்படுத்த உத்தேசித்துள்ளேன்.

**முதலமைச்சர் வேட்பாளர்**
இதுவரை காலமும் அரசியலில் இல்லாத சேவை மனப்பான்மை உடையவரை நான் எதிர்பார்க்கின்றேன். மாற்றம் ஒன்று வேண்டும்.

**புதிய கட்சி?**
புதிய கட்சி ஆரம்பிக்க வேண்டிய தேவைஉள்ளது. சம்பளம்பெற்றாலும் அதனை மக்களின் தேவைகளுக்குப் பயன்படுத்தக் கூடியவர்களாக இருக்க வேண்டும். அவ்வாறானவர்களை இனங்காண்போம் –என்றார். (4,7)

# கொள்ளைக் குற்றச்சாட்டில் நகைக்கடை நடத்துநர் கைது

யாழ்ப்பாணம், ஓக, 7
நெல்லியடியில்வீதியில்பயணித்தபெண்ணிடம்அண்மையில் இடம்பெற்றசங்கிலிஅறுப்பில்ஈடுபட்டவர்நகைக்கடை நடத்துநர் என்று விசாரணையில் தெரியவந்துள்ளதாக நெல்லியடிப்பொலிஸார்தெரிவித்தனர். யாழ்ப்பாணமாவட்டச் செயலகத்தில் மாவட்டச் செயலர் நா. வேதநாயகன் தலைமையில் அண்மையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. அதில்பொலிஸார் இதனைத்தெரிவித்தனர்.
நெல்லியடியில் வீதியில் இடம்பெற்ற குறித்த சங்கிலி அறுப்புத் தொடர்பில் விசாரணை நடத்தப்பட்டது. மறைகாணியின் (சீ.சீ.ரி.கமரா) பதிவு ஒன்று கிடைத்தது. அதன் உதவியுடன் ஒருவரைக் கைதுசெய்தோம். கைதுசெய்யப்பட்டவர் நகைக்கடை ஒன்றின் நடத்துநர் விசாரணை தொடர்கிறது என்று பொலிஸார் தெரிவித்தனர். (4,105)

# தேசிய கைத்தொழில் போட்டிக்கு வடக்கிலிருந்து 44 நெசவாளர்கள்

## தொழிற்றுறைத் திணைக்களம் தகவல்

யாழ்ப்பாணம், ஓக. 7
வடக்குமாகாணத்திலிருந்து44 நெசவாளர்கள் தேசியமட்டக்கைத் தொழில், கைத்தறிப்போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்றுமாகாண தொழிற்றுறைத் திணைக்களம் தெரிவித்துள்ளது. இதுபற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:
வடக்கு மாகாணத்தில் மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்குச்சுயதொழில்பயிற்சிகளைத் திணைக்களம்வழங்கிவருகிறது. இவை ஆறுமாதங்கள், ஒரு வருடம் என 2 பயிற்சி நெறியாக அமையும். ஆடை வடிவமைப்பு, தோல், நார், தும்பு, பனைசார் உற்பத்தி, சாயமிடல், நெசவு போன்ற பல்வேறு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. பயிற்சிகள் நிறைவடைந்த பின்னர் சான்றிதழ் வழங்கப்படும். விற்பனை முனைப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல்போன்றபல்வேறுஏற்பாடுகளும்நடைபெறுகின்றன.
பயிற்சியைமுழுமையாகநிறைவு செய்தவர்களின்உற்பத்திகளைக் காட்சிப் படுத்துவதன் மூலமாக அவர்களுக்கான சந்தை வாய்ப்பைஏற்படுத்தும்நோக்கில் கண்காட்சிகள்மாவட்ட, மாகாண, தேசிய மட்டத்தில் நடத்தப்படுகின்றன. மாகாண ரீதியாகப் பொருள்களைக் காட்சிப்படுத்தும் நிகழ்வு யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலையில் நடைபெற்றது. இதில்நூற்றுக்கும் அதிகமான உற்பத்திகள் காட்சிப் படுத்தப்பட்டன. அதில் 44நெசவாளர்களின் உற்பத்திகள் தேசிய ரீதியில் நடைபெறும் கைத்தறி கண்காட்சி மற்றும் போட்டிக்குத் தெரிவாகியுள்ளன. திரைச்சீலை, மேசைவிரிப்பு, சாறி, புதியதொழில்நுட்பங்களைப்பயன்படுத்திநெய்யப்பட்டவை, ஆண் பெண்களுக்கான ஆடைகள் என்று பல்வேறு வகைகளில்தெரிவுகள்நடைபெற்றன. அதன்படி யாழ்ப்பாண மாவட்டம்–23, வவுனியாமாவட்டம்–16, முல்லைத்தீவு மாவட்டம் –2, மன்னார்மாவட்டம்–3 உட்பட 44நெசவாளர்கள்தெரிவுசெய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (4,7)



# பார்த்தீனியத்தைக் கட்டுப்படுத்த இரண்டு முறைகள் நடைமுறைக்கு

யாழ்ப்பாணம், ஒக. 7

யாழ்ப்பாண மாவட்டத்தில் பார்த்தீனியத்தைக் கட்டுப்படுத்த ஒரே குடும்ப தாவரத்தைப் பயிரிடல், வினாகிரி பயன்படுத்தல் போன்ற முறைகளைக் கையாளவுள்ளதாக மாவட்டச் செயலக விவசாயப்பிரிவு தெரிவித்துள்ளது.

இது பற்றி அந்தப் பிரிவு மேலும் தெரிவித்ததாவது, யாழ்ப்பாண மாவட்டத்தில் விவசாய நிலங்கள் உட்படப் பல்வேறு இடங்களில் பார்த்தீனியத்தின் பரம்பல் காணப்படுகின்றது. விவசாயநிலங்களில் இது வளர்வதால் பயிர்களின் வளர்ச்சி குன்றுகின்றது. இது சுவாசத்துக்குத் தீங்கு விளைவிக்கின்றது. ஆகவே இதனைக் கட்டுப்படுத்துவதற்குச் சில முறைகள் பரீட்சார்த்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. பார்த்தீனியம் ஒழிப்பதைவிட அதனை முற்றாக அழித்தலே சிறப்பானது. பார்த்தீனியத்தின் ஒரே குடும்பத் தாவரமாக செவ்வந்தி கூறப்படு கின்றது. செவ்வந்தி நெத்துகளை விவசாய நிலங்களில் போடுவதன் மூலமாக அது வளரும். இதனால் பார்த்தீனியத்தின் வளர்ச்சி கட்டுப்படுத்தப்படும்.

அதேபோன்று வினாகிரியுடன் உப்பைக் கலந்து விசுறுவதன் மூலமாக அதனை அழிக்க முடியும். மூன்றுலீட்டர்வினாகிரிக்கு ஒரு கப் உப்பைக் கலந்து விசிறமுடியும். செவ்வந்தித் தாவரத்தை விவசாய நிலங்களில் வளர்க்குமாறு விவசாயிகளுக்கு அறிவுறுத்தியுள்ளோம். வினாகிரி விசிறல் தொடர்பில் பரீட்சார்த்த நடவடிக்கையில் ஈடுபடவுள்ளோம். இந்த முறை சாத்தியமாக அமையுமாயின் கிராம அலுவலர் பிரிவு ஊடாகப் பொது அமைப்புகளைப் பயன்படுத்திப் பார்த்தீனியத்தை இல்லாது ஒழிக்க நடவடிக்கைஎடுக்கப்படும்எனத் தெரிவிக்கப்பட்டது. (4.7)

# ஒவ்வொரு கிலோ கடலுணவுக்காகவும் தலா 18 கிலோ மீன்குஞ்சுகள் சாகடிப்பு!

## தென்பகுதி மீனவர்களால் இந்த அவலம்: ஜே.வி.பி. எம்.பிக்கு ரவிகரன் கண்டனம்



முல்லைத்தீவு, ஒக. 7

தென்பகுதிமீனவர்கள்முல்லைத்தீவில்ஒருகிலோகடல்உணவைப் பிடிப்பதற்காக வெளியில் கொண்டுவருவதற்காக 18 கிலோமீன்களைத்தரக்கூடியமீன்குஞ்சுகளை அழிக்கின்றனர். அவர்கள்தடைசெய்யப்பட்டதொழில்உபகரணங்களைப்பயன்படுத்திமீன்பிடிக்கின்றமையே இதற்குக்காரணம்என்றுவடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்தார்.

தெற்கு மீனவர்களின் வடக்கு வருகையை இனவாத நோக்கில் பார்க்க வேண்டாம் என்று மக்கள் விடுதலை முன்னணியின்நாடாளுமன்றஉறுப்பினர் நிஹால் கலப்பதி அண்மையில் ஊடகங்களிடம்கூறியிருந்தார். "பருவகாலதொழிலுக்காகவடக்கில்இருந்து மீனவர்கள் தெற்குக்குச் செல்லவும் தெற்கில்இருந்துமீனவர்கள்வடக்குக்குச்செல்லவும் இந்த நாட்டில் உரிமை உள்ளது. தென்பகுதி மீனவர்களின் வடபகுதி வருகையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இனவாதமாகப் பார்க்கின்றார்கள்" என்றுகலப்பதிகூறியதைக் கடுமையாகக் கண்டிக்கிறேன்.

கடலில் இருந்து பயணித்து தொழில் செய்யலாம். அதைவிடக் கரையில் தங்கி இருந்து தொழில் செய்வதாக இருந்தால் அந்த இடத்துக்குப் பிரதேச செயலாளரிடம் அனுமதி பெறவேண்டும். பிரதேசசபையினும்அதற்கு அனுமதி பெறவேண்டும்.

இதனைவிட குறித்த கடற்பகுதியில் உள்ளகிராமகடற்றொழில்சங்கத்தின் அனுமதியும்தேவை. இவற்றுக்குஅப்பால்தான்ஒருவர்பிரதேசத்தில்தொழில் செய்யமுடியும். முல்லைத்தீவில்அனுமதி எதுவும் பெறப்படாமலேயே தென்பகுதி மீனவர்கள் தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இவ்வாறானவர்களின் சட்டவிரோத தொழில் நடவடிக்கை காரணமாக முல்லைத்தீவுமாவட்டத்தில்வசிக்கும் கடற்றொழிலாளர்களின் தொழில் நடவடிக்கைபாதிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான நிலையில்தான் முல்லைத்தீவு மாவட்டத்தில் கடற்றொழிலாளர்கள் தங்கள் தொழில் உரிமைகளைக் கோரியும்தடைசெய்யப்பட்டதொழில் முறைகளைப் பின்பற்றுவதனைத் தடுக்கக்கடும்நடவடிக்கைஎடுக்குமாறு கோரியும்நேற்று 5ஆவதுநாளாகவும் போராடி வருகின்றனர் - என்று ரவிகரன்மேலும்தெரிவித்தார். (4,ரி3)

# வியாபார வருமான

# ரூ.1 1/2 இலட்சம் பணம் போத்தலுடன் அபகரிப்பு

பளை ஒக. 7

வர்த்தக நிலையத்தில் பல பொருள்களுக்குச் சிட்டை பதிவு செய்த நபர், வர்த்தகர் பொருள்களை பொதி செய்து கொண்டிருந்தவேளையில் போத்தல் ஒன்றில் வைக்கப்பட்டிருந்த பணத்தை திருடிக் கொண்டு தலைமறைவாகியுள்ளார்.

பளைநகரப்பகுதியில்உள்ளவர்த்தகநிலையத்தில்சிலநாள்களுக்கு முன்னர் சம்பவம் நடைபெற்றதெனத் தெரிவிக்கப்பட்டது.

கடைக்கு வந்த ஒருவர் பல பொருள்கள் வாங்குதற்குச் சிட்டை எழுதக் கூறியுள்ளார். வர்த்தகரும் சிட்டை எழுதி விட்டுப் பொருள்களை அளந்து பொதிசெய்துகொண்டிருந்தார். அங்கு போத்தல் ஒன்றுக்குள் வைக்கப்பட்டிருந்த பணத்தை அவர் அபகரித்துச் சென்றுள்ளார்.

தேநீர் அருந்திவிட்டுவருவதாகக்கூறி அங்கிருந்துதப்பியுள்ளார். சிறிது நேரத்தின் பின்னரே போத்தலில் வைக்கப்பட்டிருந்த பணம் திருடப்பட்டதை அவர் அவதானித்தார். அதற்குள் ஒரு லட்சத்து 80 ஆயிரம் ரூபா பணம் இருந்தது என்று வர்த்தகர் தெரிவித்துள்ளார்.

# சூழலுக்குப் பாதிப்பு ஏற்படாது உப்பு ஆலை அமைக்கப்படும்

## உப்புஆலை முகாமையாளர்கள் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஒக. 7

கிளிநொச்சி உமையாள்புரத்தில் சூழலுக்குப் பாதிப்பு ஏற்படாத முறையில் உப்பு ஆலை அமைக்கவுள்ளதாக ஆலைமுகாமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட உமையாள்புரம் பகுதியில் ஆலை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அங்கு தனியார் 3 பேர் ஆலை அமைக்க விண்ணப்பித்துள்ளனர்.

ஆனால்அங்குஉப்புஆலைஅமைத்தால் விவசாய நிலங்கள் பாதிப்படையும் என்று கூறிய விவசாயிகள் ஆலை அமைக்கக் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், பாதிப்பு எதுவும் ஏற்படாது என்று ஆலை முகாமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

"ஆனையிறவில்உள்ளஉப்பளத்தில் உப்புக் கொள்வனவு செய்யப்பட்டு அவற்றைத் துப்புரவுசெய்து பொதிகளில் அடைத்து விநியோகிக்க வுள்ளதாகவும்துப்புரவுப்பணிகளில்இருந்து வெளியேறும் கழிவுகள் பாதுகாப்பாகத் தாங்கிகளில் எடுக்கப்பட்டு மீள் சுழற்சிக்கு உட்படுத்தப்படும். இறுதியாக விஞ்சும் தண்ணீரைப் பிரதேச சபையின் அனுமதியுடன் அகற்றப்படும். இதனால் குறித்த பகுதியில் பாதிப்புஏற்படுவதற்கானவாய்ப்புகள் இல்லை" என்று தெரிவித்துள்ளார் முகாமையாளர்களில் ஒருவர்.

இதற்கான விண்ணப்பம் மைய சுற்றாடல் அதிகாரசபையின் அனுமதிக்காக அனுப்பப்பட்டது. அனுமதி கிடைத்துள்ளது. இதனால்நேரடியாக 50வேலைவாய்ப்புக்களும்மறைமுகமாக 50 வேலை வாய்ப்புகளும் வழங்குவதற்கானவழிகள்உள்ளன. வேலையாள்கள் உள்ளூரிலிருந்தே தெரிவுசெய்யப்படுவார்கள். உப்பளத்துக்கு அருகில் ஆலை அமைப்பதால் போக்குவரத்துச் செலவு குறைவடையும். உப்பைக் குறைந்த விலையில் வழங்கமுடியும் என்று ஆலை முகாமையாளர்கள் தெரிவித்தனர். (4,6)

# வெளிநாட்டு மோகங்கள்தான் மாணவரை சீரழிக்கின்றன

## சபைத் தவிசாளர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஒக. 7

வெளிநாட்டு மோகங்களே எமது கலாசாரங்களைச்சீரழிக்கின்றன. சின்னத்திரை கள், திரைப்படங்களால் மாணவர்களும் தவறான வழிக்குச் சென்று கொண்டிருக்கின்றனர்.

இவ்வாறு கூறியுள்ளார் வலி. வடக்குப் பிரதேச சபையின் தவிசாளர் சோ. சுகிர்தன்.

96ஆவது பன்னாட்டுக் கூட்டுறவுதின விழாதெல்லிப்பளைபனைதென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. சங்கத்தலைவர் நா. கணேசன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

எங்களுடைய முதன்மை மார்க்கங்களில் ஒன்றான பனைவளம் போரில் அழிந்து போனாலும், எங்களுடைய சூழலில் நாகரிக மோகங்களையே காண்கின்றோம்.

எவ்வளவுதான் வெளிநாட்டு மோகங்கள் வந்தாலும் அவற்றைக் கட்டுப்படுத்திஉள்ளூர்உற்பத்திகளைஊக்குவிக்கவேண்டும்.

வெளிநாட்டு மோகங்கள்தான் எமது சமுதாயத்தையும், கலாசாரங்களையும் எமது பள்ளி மாணவர்களையும் அழித்துச் செல்கின்றன. இந்திய நாடகங்களையும், இந்தியத்திரைப்படங்களையும் பார்த்து இங்குள்ள மாணவர்கள் தலைமுடிவெட்டுவது, உந்துருளியை முறையற்றவிதத்தில்செலுத்துதல் என்பன தொடர்கின்றன. இன்று பாடசாலை மாணவர்கள்கூட மதுப் பழக்கத்துக்கு ஆளாகியுள்ளனர். எங்களுடையநோக்கம்எங்களுடையபொருளாதாரத்தில் நாம் நிமிர்ந்து நிற்க வேண்டும்என்பதே. அதில்ஒன்றுபனை தென்னை வளம். அந்த வளத்தை ஊக்குவிக்கின்ற செயற்பாடுகளைச் செய்யவேண்டும் - என்றார். (4,63)

தள்ளுபடி செய்தாலும் பெண்கள் மீண்டும் கடன் பெறுவரென்பதால்

# கடன் வழங்குவதை நிறுவனங்கள் வரையறை செய்யவேண்டும்

## சபை உறுப்பினர் கூறுகிறார்

வவுனியா, ஒக. 7

கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்ட பின்னரும் பெண்கள்மீண்டும்கடன்களைப்பெறத்தான் செய்வார்கள். எனவேகடன்களைத்தள்ளுபடி செய்வதுடன் நின்றுவிடாமல் கடன்வழங்கலில் நுண்நிதி நிறுவனங்களின் செயற்பாடுகளை வரையறைசெய்யவேண்டும்.

இவ்வாறு வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபையின் கூட்டமைப்பு உறுப்பினர் பூ. சந்திரபத்மன் தெரிவித்தார்.

வவுனியாபூந்தோட்டத்தில்நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நுண்நிதிநிறுவனங்களின் செயற்பாடுகளால் ஒவ்வொரு கிராமத்திலும் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் அதிகரித்துச் செல்கின்றன. இதனால் தவறான முடிவெடுத்து உயிர்துறப்பதும்இன்னும்பலபிரச்சினைகள் சமூகத்தில் ஏற்பட்டுவருன்றன.

இந்தநிலையில் பெண்கள் பெற்ற நுண்நிதிக் கடன்களில் ஒரு இலட்சம்ரூபாவரையிலான தொகையைத் தள்ளுபடிசெய்ய உள்ளதாக அரசு அறிவித்தது.

இதுவரவேற்கத்தக்கவிடயமாகஇருந்தாலும் இதனால் மாத்திரம் இந்தப் பிரச்சினையைத் தீர்த்துவிடமுடியாது.

கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்ட பின்னரும் பெண்கள்மீண்டும்கடன்களைப்பெறத்தான் செய்வார்கள். எனவேகடன்களைத்தள்ளுபடி செய்வதுடன் நின்றுவிடாமல் நுண்நிதி நிறுவனங்களின் செயற்பாடுகளை வரையறை செய்துகடன்கள்பெறுபவரதுவருமானமூலங்கள் தொடர்பாக ஆராய்ந்து, மீளச் செலுத்தக்கூடிய தகைமை இருக்கின்றதா என்பதைப் பார்க்கவேண்டும். ஒருவர்ஒருநிறுவனத்தில் கடன்பெற்றிருந்தால்இன்னுமொருநிறுவனத்தில் இருந்து கடன்களைப் பெறமுடியாதவாறு சட்ட ஏற்பாடுகளை இறுக்கமாக்கவேண்டும். வட்டிவீதங்கள்தொடர்பாகக்கட்டுப்பாடுகளை விதித்து, பொதுமக்களுக்கும்இதுதொடர்பான விழிப்புணர்வுகளை வழங்கவேண்டும் என்றார். (4,110)

# முல்லை. மீனவர்கள் விவகாரம் முன்னாள்புலிகளுக்கும்தொடர்பு

## கண்டுபிடித்தார் விமல் வீரவன்ச

கொழும்பு,ஓகஸ்ட் 7

முல்லைத்தீவுகடற்தொழில்நீரியல்வளத்திணைக்களத்தின் மீதுமேற்கொள்ளப்பட்டதாக்குதலில்முன்னாள்விடுதலைப்புலி உறுப்பினர்களும் தொடர்பு பட்டுள்ளார்கள். வடக்கில் முன்னாள் புலிகளின் ஆதிக்கம் தற்போது தலைதூக்கியுள்ளது. இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.



தேசியசுதந்திர முன்னணியின் செய்தியாளர் சந்திப்பு நேற்று முன்தினம் கொழும்பில்கட்சிஅலுவலகத்தில்இடம் பெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே விமல் வீரவன்ச மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் சட்டவிரோத மீன் பிடி முறைகளைத் தடுத்து நிறுத்துமாறுகோரிஆயிரக்கணக்கானவர்கள்கடந்தவியாழக்கிழமைமாவட்ட நீரியல் வளத் திணைக்களம் முன்பாக பெரும்போராட்டத்தில்ஈடுபட்டனர். இதனால் அங்கு பெரும் களேபர நிலமை காணப்பட்டது.

திணைக்கள வேலிகளைப் பிய்த்தெறிந்த ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் அங்கிருந்த பொலிஸாருக்கும் இடையில் பெரும்முறுகல்நிலைகளும்ஏற்பட்டது. இந்த நிலையிலேயே விமல் வீரவன்ச இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்ததாவது.

பொலிஸார் பார்த்துகொண்டிருந்த போதே நீரியல் வளத் திணைக்களத்தின்மீது தாக்குதல் இடம்பெற்றுள்ளது. ஆனால் எவரும் கைதுசெய்யப்படவில்லை.

சேர்ந்துத் தாக்குதல் நடத்திய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் மீது ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை. அந்தளவு மோசமான நிலைமை இன்று உருவாகியுள்ளது.

தெற்கிற்கு ஒரு சட்டமும், வடக்குக்கு வேறு சட்டமும் இந்த ஆட்சியில் இடம் பெற்றுவருகின்றது. வடக்கின்அரசியல் வாதிகளைச் சட்டத்தால் கட்டுபடுத்த முடியாதநிலைமைஉருவாகியுள்ளது. மோடி போன்று உடை அணிந்து அரச தலைவரும், தலைமை அமைச்சரும் மக்களை ஏமாற்றுகின்றனர்.

வடக்கில் போதைபொருள் பாவனை அதிகரித்துவருகின்றது. மிகவும்மோசமாக இளம் சமூகம் பாதிக்கபட்டு வருகின்றது. ஆனால் சமூகப் பிரச்சினைகளைத் திசைதிருப்ப அரசு செய்திகளை உருவாக்கி வருகின்றது.

இப்போது நாடாளுமன்ற உறுப்பினர்கள் சம்பள உயர்வு குறித்துப் பேசுகின்றனர். நாம்யாருமேசம்பளஉயர்வைக் கேட்கவில்லை. அரசே இந்தக் கருத்தைக் கூறியது.

அரசே இப்போது சம்பளம் அதிகரிக்கப் படாதுஎனவீரவசனமும்பேசுகின்றது. அரச தலைவர் வீர வசனம் பேசுகின்றார். அவரது அரசை அவரால் கட்டுப் பாட்டுடன்வைத்திருக்கமுடியாதுள்ளது என்றார்.

மோடியின் ஆடையை அணிந்து கொண்டு நாட்டு மக்களை ஏமாற்றும் நடவடிக்கைகளைஇன்றையதலைவர்கள் முன்னெடுத்துள்ளனர்என்றார். (ரி2,61)

# கோத்தாவின்பேச்சாளராக மிலிந்தராஜபக்சநியமனம்

கொழும்பு,ஓகஸ்ட் 7

முன்னாள்பாதுகாப்புச்செயலர்கோத்தபாயராஜபக்சவின் ஊடகப்பேச்சாளராகக், கொழும்புமாநகரசபைசிறிலங்கா பொதுமக்கள் முன்னணி உறுப்பினர் மிலிந்த ராஜபக்ச நியமிக்கப்பட்டுள்ளார்.

விடயம்தொடர்பில்கோத்தபாயராஜபக்சவின்உத்தியோகபூர்வ டுவிட்டர்தளத்தில் இவ்வாறு பதிவிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில், எதிர்வரும் 2020 ஆணடு இடம்பெறவுள்ள அரச தலைவர் தேர்தலில் அரச தலைவர் அபேட்சகராக கோத்தபாய ராஜபக்சவை முன்னிறுத்துவதாக மகிந்த அணி உறுப்பினர்கள் தெரிவித்து வருகின்றனர். (ரி2)

# அரச தலைவர் வேட்பாளராக கோத்தபாயவே வேண்டும்

## என்கிறார் கம்மன்பில

கொழும்பு,ஓகஸ்ட் 7



மகிந்த அணி தலைமையிலானசிறிலங்காபொது மக்கள் முன்னணியின் அரசதலைவர்வேட்பாளராகக் கோத்தபாய ராஜபக்ச நியமிக்கப்பட வேண்டும். இவ்வாறு ஹெல உறுமய வின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

அநுராதபுரம் பகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்ததாவது.

கோத்தபாய ராஜபக்சவுக்கு எதிராக எவ்விதத்திலேனும் குற்றம் சாட்ட முடியுமா என்பது தொடர்பில் பேராசிரியர் மெக்ஸ்வெல்பரணகமஉடன்அமெரிக்கத்தூதரகக்குழு கலந்துரையாடியது உண்மையான விடயமே.

அரச சார்பற்ற குழு ஒன்று அமெரிக்கத் தூதரகத்துக்குச் சென்றுகோத்தபாயராஜபக்சவின்குடியுரிமைதொடர்பில் கலந்துரையாடியது.

அனைத்துத் தரப்பினரும் கோத்தபாய ராஜபக்சவுக்கு அச்சம் கொள்கின்றனர் என்றால் எதிர்வரும் அரச தலைவர்தேர்தலில்அவரேஅரசதலைவர்வேட்பாளராக வேண்டும் - என்றார். (ரி2)

# மிளகாய்த் தூள் வீசிக் கொள்ளை

## 5 பேர் கைது

கொழும்பு,ஓகஸ்ட் 7

மிளகாய்த் தூள் வீசப்பட்டு நூதனமான முறையில் பெருந்தொகைப் பணம் கொள்ளையிடப்பட்டுள்ளது.

இந்தச்சம்பவம் கொழும்பு, புளத்சிங்களப் பகுதியில் கடந்த மாதம் 28 ஆம் திகதி இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தனியார் நிதி நிறுவனம் ஒன்றின் தன்னியக்க இயந்திரத்துக்கு மீள் நிரப்புவதற்காக எடுத்து வரப்பட்ட சுமார் 20 மில்லியன்ரூபாபணமே இவ்வாறு கொள்ளையடிக்கப்பட்டிருந்தது. சந்தேகநபர்களிடம்இருந்து10மில்லியன்ரூபாபணம் மற்றும் ஜீப் வாகனம் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

பணம்எடுத்துச்செல்லப்படும்வழியில்அந்தநிறுவனத்தின் ஊழியர்கள்மீது மிளகாய்த் தூளை வீசித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுஇந்தக்கொள்ளைசம்பவம்இடம்பெற்றிருந்தது. (ரி2)

# திருமலையில் 24 குளங்கள் ராணுவத்தால்மறுசீரமைப்பு

திருகோணமலை,ஓகஸ்ட் 7

திருகோணமலைமாவட்டத்தில்24குளங்கள்இராணுவத்தினரால் மறுசீரமைப்புச்செய்யப்பட்டுள்ளது.

அரசதலைவர்செயலகம்கடந்தஆண்டுஅமுலாக்கிய'சிறிசர பிவிசும' என்ற தேசத்தைக் கட்டியெழுப்பும் திட்டத்தின் கீழ் இந்த மறுசீரமைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதன் அடுத்த கட்டமாக இந்த ஆண்டு மேலும் 25 குளங்களின் மறுசீரமைப்புப் பணிகள் முழுமையாகவுள்ளன.

பிரதேசவாசிகளின் நலன்கருதி, கைவிடப்பட்ட நிலையில் உள்ள 9 குளங்கள் முன்னுரிமை அடிப்படையில் தூர்நீக்கி அபிவிருத்தி செய்யப்பட உள்ளன.

'சிறிசரபிவிசும'வேலைத்திட்டத்தின்கீழ்ஒவ்வொருபிரதேசத்தினதும் தேவைக்கு ஏற்ப பாடசாலைக் கட்டடங்களும், நெடுஞ்சாலைகளும், வணக்கத் தலங்களும், சனசமூக நிலையங்களும்சீரமைக்கப்பட்டு வருகின்றன. (ரி2)

# இலங்கையின் நிலைபேறான அபிவிருத்திக்கு நடவடிக்கை

கொழும்பு,ஓகஸ்ட் 7

2030 ஆம் ஆண்டளவில் இலங்கை அனைத்து நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்குத் திட்டமிட்டுள்ளதாக அரச தலைவர் செயலர் உதய ஆர். செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பான திட்ட அறிக்கை, அரச தலைவருக்கு வழங்களதிர்பார்த்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டபோதே இதனைத் தெரிவித்தார்.

விடயம் தொடர்பான திட்ட அறிக்கை குறித்து அவர் விளக்கம் அளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நோபல் பரிசைப் பெற்ற பேராசிரியர் மொஹான் முனசிங்ஹ தலைமையிலானகுழுவேஇந்த அறிக்கையை தயாரித்துள்ளது.

தேசிய நிலைபேறான அபிவிருத்திக் குழுவின் தலைவராக உதய ஆர் செனவிரட்ன செயல்படுகின்றார். அறிக்கையில் சமூக பொருளாதார, சுற்றாடல் மற்றும் இதர விடயங்கள் குறித்த நிலைபேறானஅபிவிருத்திஇலக்குகள் தொடர்பான விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்த செயல்திட்டம் நாடாளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதிபால தலைமையிலான நாடாளுமன்றகுழுவினால்மேற்பார்வை செய்யப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த ஊடகவியலாளர்சந்திப்பில் பேராசிரியர்மொஹான்முனசிங்ஹவும்கலந்து கொண்டார். (ரி2)

# கைத் துப்பாக்கி வைத்திருந்த விமானி கைது

கொழும்பு,ஓகஸ்ட் 7

பிரித்தானியாவில் உற்பத்தி செய்யப்பட்ட கைத் துப்பாக்கியொன்றை தன்வசம் வைத்திருந்த விமானியொருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

6.35 மில்லிமீற்றர் ரக கைத் துப்பாக்கியைத் தனது பயணப்பொதியில் மறைத்து துபாய் நோக்கிச் செல்ல முற்பட்ட முன்னாள் விமானியொருவரே கட்டுநாயக்க வானூர்தித் தளத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.

ராஜகிரியபிரதேசத்தைச்சேர்ந்த55வயதுடைய ஒருவரே கைதுசெய்யப்பட்டார்.

சந்தேகநபர்துப்பாக்கியைமறைத்துக்கொண்டு சென்றது எதற்காக என்பது தொடர்பில் வானூர்தித்தளப்பொலிஸார்விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் நீர்கொழும்பு மூத்த பொலிஸ்அத்தியட்சகரின்கண்காணிப்பின்கீழ் விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாக வானூர்தித் தளப் பொலிஸார் தெரிவித்தனர். (ரி2)

# பரீட்சை வினாத்தாள் வைத்திருந்தால் சட்டநடவடிக்கை

கொழும்பு,ஓகஸ்ட் 7

நடைபெற்று முடிந்த தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாளை தம்வசம் வைத்திருத்தல், அச்சிடல், மற்றும்விற்பனைசெய்தல், இணையத்தில் உள்ளீட்டு பகிரங்கமாக வெளியிடல் என்பன தண்டனைக்குரிய குற்றமாகும்எனப்பரீட்சைகள்திணைக்களம்அறிவித்துள்ளது.

பரீட்சை நிறைவடைந்த போதும், அவை அடங்கிய பரீட்சை வினாத்தாள், இரகசியமான ஆவணமாகத் தொடர்ந்தும்கருதப்படும்என்று, பரீட்சைகள் ஆணையாளர் விடுத்துள்ள அறிவித்தலில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

எவரேனுமொருவர்அல்லதுநிறுவனத்தினால்விதிகள் மீறப்படுமாயின், அதுதொடர்பில்பொலிஸ்தலைமையகத்திற்கோ (119, 011 2 42 1111), பரீட்சைகள் திணைக்களத்திற்கோ (1911) அறிவிக்குமாறும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

497 தொடர்பாடல் மத்திய நிலையங்கள் ஊடாக 3 ஆயிரத்து 50 பரீட்சைநிலையங்களில்இடம்பெற்றஇப்பரீட்சைக்கு, நாடு முழுவதிலுமுள்ள சிங்கள மொழி மூலம் 2 இலட்சத்து 67 ஆயிரத்து 770 பேரும் தமிழ் மொழி மூலம் 87 ஆயிரத்து, 556 பேரும் உள்ளிட்ட, 3 இலட்சத்து 55 ஆயிரத்து 326 மாணவர்கள் விண்ணப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ரி2)



சிம்பாப்வேயில் அதிபர் தேர்தல் அண்மையில் நடைபெற்றது. எமர்சன் வெற்றிபெற்றார் என்று அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் அதை ஏற்காது தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர் எதிர்கட்சியினர். அது தொடர்பான ஒளிப்படங்களை பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் வெளியிட்டது. (ம)

# ஈரானிடம் புதிதாக ஐந்து வானூர்திகள்

தெக்ரோன், ஓக. 7

அமெரிக்கா ஈரானின் மீது விதித்த பொருளாதாரத் தடைகள் நேற்று நடைமுறைக்கு வந்த நிலையில் குறித்த தடைக்கு ஒரு நாளுக்கு முன்னதாக அதாவது நேற்றுமுன்தினம் ஐந்து வானூர்திகளைக் கொள்வனவு செய்தது ஈரான்.

அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தத்தில் இருந்து சமீபத்தில் விலகிக்கொண்ட அமெரிக்கா, அடுத்தடுத்து ஈரான் மீது பல வேறு பொருளாதாரத் தடைகளை விதித்து வருகிறது.

தனது நேசநாடுகளும் ஈரானைப் புறக்கணிக்க வேண்டும் என அமெரிக்க அயலுறவுத் துறையின் சார்பில் நிர்பந்திக்கப்படுகிறது. எனினும் ஈரானுடன் தாம் கொண்டுள்ள வர்த்தகத் தொடர்புகளை உலக நாடுகள் தொடர்ந்துகொண்டுதான் உள்ளன.

கடந்த 2017ஆம் ஆண்டு பிரான்ஸ் மற்றும் இத்தாலியின் கூட்டு நிறுவனமான ஏடிஆர் உடன் 72600 ரக பயணிகள் விமானங்களை வாங்க ஈரான் ஒப்பந்தம் செய்துகொண்டது. அதன்படி ஏற்கனவே 8 வானூர்திகள் ஈரானிடம் ஒப்படைக்கப்பட்டு தற்போது அந்த நாட்டின் உள்நாட்டு போக்குவரத்துக்காகப் பயன்படுத்தப்படுகிறது.

நேற்றுமுன்தினம் மேலும் ஐந்து வானூர்திகளை ஈரான் வாங்கியது. (ம)



## சவூதி கூட்டுப்படை தாக்குதல் ஏமனில் 70 பேர் துயரச் சாவு

சனா, ஓக. 7

ஏமனின் மீது சவூதிக் கூட்டுப்படை அண்மையில் நடத்திய தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எணிக்கை 70ஆக உயர்ந்தது.

ஏமனில் அதிபர் மன்சூர் ஹதியை ஆட்சிக் கவிழ்ப்புச் செய்யும் முனைப்பில் ஹவுத்தி ஆயுதக் குழு போரிட்டு வருகிறது. அந்தக் குழுவுக்கு எதிராக சவூதி தலைமையில் கூட்டுப்படை போரிட்டு வருகிறது. தலைநகர் சனாவில் அரச தரப்புக்கு எதிராக ஹுபுத்தி தாக்குதல் நடத்துவதும் ஹவுத்தியையும் அதன் ஆதரவாளர்களையும் இலக்கு வைத்து சவூதி கூட்டுப்படை போரிட்டு வருவதும் அனைவரும் அறிந்ததுதான். அவ்வாறாக ஹவுத்தி அமைப்பின் கட்டுப்பாட்டில் உள்ள அல் குவைட்டா நகரில் கடந்த சனிக்கிழமை தாக்குதல் நடத்தியது.

இந்தத் தாக்குதலில் 25 பேர் உயிரிழந்தனர் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்ட நிலையில் நேற்றைய நிலவரப்படி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 70 ஆக அதிகரித்தது. மேலும் 125 பேர் காயங்களுடன் சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களில் சிலரின் நிலையும் கவலைக்கிடம் என்பதால் உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)

# இந்தியாவுடன் பேச பாகிஸ்தான் தயார்



இந்தியாவுடன் பேச்சு நடத்த பாகிஸ்தான் தயாராகவுள்ளது என்று பாகிஸ்தானின் அயலுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் பைசல் நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

பாகிஸ்தானின் நாடாளுமன்றத் தேர்தல் அண்மையில் நடைபெற்றது. பெரும்பாலான இடங்களில் வெற்றிபெற்று தனிப் பெருங் கட்சியாக உருவெடுத்தது பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும் தெக்ரிக் இ இன்சாப் கட்சியின் தலைவருமான இம்ரான் கானின் கட்சி. இதையடுத்து இம்ரான் கான் பாகிஸ்தானின் தலைமை அமைச்சராக இன்னும் சில தினங்களில் பொறுப்பேற்கவுள்ளார். அவர் பாகிஸ்தான் இராணுவத்துக்கு மிகவும் நெருக்கமானவர் என்று சொல்லப்படுகிறது. இன்னும் சொல்லப்போனால் "பாகிஸ்தான் இராணுவத்தின் செல்லப்பிள்ளை" என்றே பன்னாட்டு ஊடகங்கள் இம்ரான் கானை குறிப்பிடுகின்றன. இதனால் இம்ரானின் ஆட்சியில் இந்தியா - பாகிஸ்தான் இடையிலான உறவில் மேலும் விரிசல் ஏற்படுமா? அல்லது இரண்டு நாடுகளும் நட்புப் பாராட்டுமா? என்பது தொடர்பில் பெரும் எதிர்பார்ப்பு நிலவியது. இவ்வாறான நிலையில் "இந்தியாவுடன் பேச்சு நடத்தத் தயார்" என்று அறிவித்தது பாகிஸ்தான்.

"இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடியும் இம்ரான் கானும் தொலைபேசியில் பேசியுள்ளனர். இதன் மூலம் இரு நாடுகளுக்கு இடையே மீண்டும் பேச்சு தொடங்க வாய்ப்பிருக்கிறது. அமைதிப் பேச்சுக்கு பாகிஸ்தான் எப்போதும் தயாராக உள்ளது. இந்தியா, பாகிஸ்தான் பிரச்சினை காரணமாக கடந்த 2016 நவம்பரில் நடைபெற வேண்டிய சார்க் மாநாடு ஒத்தி வைக்கப்பட்டது.

இந்த மாநாட்டை நடத்த பாகிஸ்தான் தயாராக உள்ளது. இதன்மூலம் பிராந்திய பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும். தெற்காசிய நாடுகளுக்கு இடையிலான உறவு வலுவடையும்" என்று பைசல் மேலும் தெரிவித்தார். (ம)

# இந்தோனேசியாவில் சக்திமிகு நிலநடுக்கத்தால் சுனாமி எச்சரிக்கை 91 பேர் பரிதாபச் சாவு; நூற்றுக் கணக்கானவர்களுக்குப் படுகாயம்





யகார்தா, ஓக. 7

இந்தோனேசியாவில் கடலுக்கடியில் பத்தே கிலோமீற்றர் ஆழத்தில் நேற்று நிலநடுக்கம் ஏற்பட்டது. இதையடுத்து இந்தோனேசியாவும், உலக நாடுகளும் நேற்றுப் பேரதிர்ச்சியில் உறைந்தன.

இந்தோனேசியாவின் லோம்பாக் தீவில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவுகோலில் 7.0 என்று பதிவாகியது. பத்து கிலோமீற்றர் ஆழத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டதால் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து கடலோர பகுதிகளில் வசித்த மக்கள் வெளியேற்றப்பட்டனர். பின்னர் சில மணி நேரங்களுக்கு பின்னர் சுனாமி எச்சரிக்கை திரும்பப் பெறப்பட்டது. எனினும் மூன்று தடவைகள் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்படுவதும் சில நிமிடங்களில் அது திரும்பப் பெறப்படுவதுமாக இருந்தது என்கின்றன உள்ளூர் ஊடகங்கள்.

இதுகுறித்து இந்தோனேசிய தேசிய பேரிடர் மேலாண்மை அமைப்பின் தரப்பில், "இந்த நிலநடுக்கத்தில் இதுவரை 91 பேர் உயிரிழந்தனர். நூற்றுக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். 84ஆயிரம் பேர் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேற்றப்பட்டனர். பல்லாயிரக் கணக்கான வீடுகள் நொறுங்கிப்போயுள்ளன. பல கட்டடங்கள் சேதமடைந்துள்ளன. தொடர்ந்து மீட்புப் பணிகள் நடந்து வருகிறன. 900 சுற்றுலாப் பயணிகள் லோம்பாக் தீவுப் பகுதிகளிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர். மிதமுள்ள 700 சுற்றுலா பயணிகளை மீட்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது" என்று குறிப்பிட்டுள்ளது. கடந்த 2004ஆம் ஆண்டு 9.4 ரிச்டர் அளவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் இந்தோனேசியாவில் 2 லட்சத்து 20 ஆயிரம்பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

சொலமன் தீவுகள், பிலிப்பைன்ஸ், பப்புவா நியூகினியா உள்ளிட்ட நாடுகளும் நேற்று சிறிது பதற்றத்தில் இருந்ததாக பன்னாட்டு ஊடகங்கள் சில குறிப்பிட்டுள்ளன. (ம)

சி.நற்குணலிங்கம்



# ஆசிரியத்துவம் மகத்துவமானது

அறிவை ஆள்பவன்தான் ஆசிரியர். ஆசிரியம் என்பது வல்லமையுள்ள பொருள் நிறைந்த சொல். கல்விச் சாலைகளும், ஆசான்களும் காலத்தால் கரைந்து போகின்றவர்கள் இல்லை. பாடசாலைகள் ஒரு சமூகத்தின் இதயம் போன்றவை. பண்பாட்டு விழுமியங்களை ஒரு தலைமுறையினருக்குக் கடத்துவதில் செல்வாக்குச் செலுத்துகின்றவை. மாணவர்கள் எந்தவகையில் பாதிக்கப்பட்டாலும் ஒட்டுமொத்த சமூகமே நாளை இருட்டுக்குள் தள்ளப்பட்டுவிடும். பெற்றோர்களாகவே உருவகிக்கும் நல்லாசிரியர்களின் பணி என்றும் கட்டாயம் தேவையுள்ளதாகும். கல்வியறிவை வழங்கும் ஒவ்வொருவரும் மனிதரும் கடவுளாகவே போற்றப்படுகின்றனர். "குருவின் பெயரைச் சொல்லி, குருவைக் கண்டு, குருவின் சொல் கேட்டாலே பாடப் பொருளில் தெளிவு ஏற்படும்" என்றார் திருமூலர். ஆகவே இந்தத் தொழிலை நாம் சிதைக்கக்கூடாது. இந்தத் தொழிலின் புனிதம் பேணப்பட வேண்டும்.

### வேண்டும் வினைத்திறன்

பாடசாலைகளில் மாணவர்கள் வெளிப்படுத்தும் திறனை ஆசிரியர்கள் உரிய முறையில் இனங்கண்டு கொள்ள வேண்டும். அதன்வழி ஊக்குவிக்கப்பட வேண்டும். ஊக்குவித்தல் மூலம் கற்றல் செயற்பாடு வினைத்திற னுள்ளதாக அமையும். இதனால் உயர்வான சமூக மாற்றமும், முன்னேற்றம் ஏற்படும். ஆசிரியர் தன் தொழிலில் தடையின்றிய வழிப்படுத்தல் பணியை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும். இது கடமைக்கானதாக இல்லாது கடமையுணர்வோடு முன்னெடுக்கப்பட வேண்டும். மாணவனிடம் விமர்சனப்பாங்கு, சுயதேடல் திறன் என்பன மேலோங்க வழிசமைக்கக்கூடிய ஆசிரியர்கள் வேண்டும். அத்துடன் உயர்ந்தளவிலான தொடர்பாடல் திறன், இணையவழி மூலமான கற்பித்தல் திறன் பெற்றிருக்க வேண்டும். இவை ஒரு சில ஆசிரியர்களிடம் மட்டும் இருத்தல் போதாது. கல்வித்தர உறுதிப்பாட்டிற்கும், கல்விக் கொள்கைகளை வினைத்திறனான முறையில் நடைமுறைப்படுத்துவதற்கும் சகல ஆசிரியர்களும் தயாராக இருக்க வேண்டும். பிள்ளைகளின் நடத்தைப் பாங்கினையும், எதிர்காலக் கல்வியின் வெற்றி, வாய்ப்புக்களையும் ஒழுங்கமைக்கும் செயன் முறையை வெற்றிகரமாக முன்னெடுக்கக்கூடிய வினைத்திறன் மிக்கவராக ஆசிரியர்கள் இருக்க வேண்டும்.

### ஆசிரியருக்கு அழகு

கல்வியானது அமைதி, மற்றும் செழிப்புக்கான அடித்தளம், உலகை மாற்றுவதற்கு பயன்படுத்தக்கூடிய மிகச் சக்திவாய்ந்த ஆயுதம் கல்வி. இதனை சிறந்த ஆசிரியரிடமிருந்து எவன் பெறுகின்றானோ அவனால் சிறந்த உலகையே உருவாக்க முடியும். இளைய சமூகத்தினரை திறனுடன் கூடிய அறிவுடையவர்களாக, மாறும் உலகில் வாழ வைக்கக்கூடியவராக, வந்து வாய்க்க வேண்டும் ஆசிரியர். தனியாள் வேறுபாடுகளைக் கருத்தில் கொண்ட நிலை, மதிக்கும் இயல்பு உயர்வாண்மைத்துவ நிலை பேணும் இயல்பு, நேர்மனப்பாங்கு கொண்ட சிந்தனை, மகிழ்ச்சிகரமான மனோநிலை, பொருத்தமான நடை, உடை, பாவனை என்பன எந்த ஆசிரியர்களிடம் உள்ளதோ அவர்களே ஆசிரியர்கள். அத்துடன் ஆலோசனைகளையும், வழிகாட்டல்களையும் வழங்குதல் செவிமடுக்கும் இயல்பு. பிரச்சினைகளை அணுகும் திறன், சவால்களை கையாளும் திறன் என்பவற்றிலும் சிறந்த ஆசிரியர் தங்கியுள்ளார்.

வெளிப்படையான உலகின் சவால்களை எதிர்கொள்ள உரிய தேர்ச்சிகளை வழங்க வேண்டும். மாணவர்களது கற்றல் தராதரங்களில் அக்கறை செலுத்த வேண்டும். பல்மட்டக் கற்பித்தல், பரிகாரக் கற்பித்தல் முறைகளை தேவைக்கேற்ப உபயோகிக்க வேண்டும். மாணவனது தனியாள் வேறுபாடுகளைக் கருத்தில் கொண்டு அவர்களது இயலுமைக்கேற்ப பல்மட்டக் கற்பித்தலிலும், கற்றலின் இடர்களை எதிர்நோக்குவோருக்கு பரிகாரக் கற்பித்தலிலும் தேவைக்கேற்ப தன்னை ஈடுபடுத்திக் கொள்ளக்கூடியவராக ஆசிரியர் இருக்க வேண்டும். ஒரு வகுப்பறையில் விரைவாகக் கற்கும் மிதமாகக் கற்கும் மெல்லக் கற்கும் என மூவகைப்பட்ட மாணவர்கள் இருப்பார்கள். அந்தந்த மட்டங்களுக்கு பொருத்தமான கற்பித்தல் முறைகளை திட்டமிட்டு செயற்பட வேண்டும். முயற்சியுடனான கற்றலை மேம்படுத்த கற்பித்தல் கலாசாரத்திலிருந்து கற்றல் கலாசாரத்துக்கு இட்டுச் செல்ல கற்பித்தல் சாதனாங்கள், நவீன கற்பித்தல் சாதனங்கள் பயன்படுத்தப்பட வேண்டும்.

### மகத்தான செயன்முறை

மாணவர்களுக்கு ஒழுங்கமைந்த முறையில் அறிவைப் புகட்டுபவரே ஆசிரியர். பொருத்தமான பின்னூட்டல், பாட அறிவு, நீடித்து நிலைத்திருக்கும், கல்விக்கு உதவி புரியாதவராகவும், இயலுமை கொண்டவராகவும் இருக்க வேண்டும். மாணவர்களை புறமொதுக்குதல், பக்கச்சார்பான மதீப்பீடுகளை மேற்கொள்ளல், பாரபட்சம் காட்டுதல், போன்ற செயற்பாடுகளை மேற்கொள்வதாகவும் இருக்க வேண்டும், வகுப்பறையில் தவறுகளை பூச்சிய மட்டத்தில் வைத்திருக்கக் கூடிய வராக இருக்க வேண்டும். ஆசிரியத்துவம் என்பது மனிதத்துவம் மிக்க செயன்முறை. தமது முன் மாதிரி யான நடத்தைக் கோலங்களின் வழியே மாணவர்களிடத்தில் நடத்தை மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். இதனது நகர்வு கொஞ்சம் குறைவாகவே உள்ளது. ஆசிரியர் தமது ஆளுமை நடத்தை என்பவற்றைக் அடிக்கடி மதிப்பீடு செய்ய வேண்டும். தன்னை மாணவர்கள் பின்பற்றக் கூடியவர்க ளாக இருக்கின்றனரோ என மதிப்பீடு செய்து கொள்ள வேண்டும். இது இன்றைய சிலருக்குத் தேவைதான்.

ஆசிரியர்கள் நவீன உலகில் சஞ்சரிக்கும் மாணவர்களுக்கு பரந்த ஒரு அறிவுத் தொகுதியை நான்கு கல்வித் தூண்களாக எடுத்தியம்ப வேண்டும். அறிவைப் பெறக் கற்றல், செயலில் ஈடுபடக் கற்றல், ஏனையவர்களுடன் வாழக் கற்றல், மகிழ்ச்சியாக எவ்வாறு வாழலாம் என்பதைக் கற்றல், ஆசிரிய தொழிலில் கவனிக்க வேண்டியவை பின்பற்றப்பட வேண்டிய, விலக்கிக் கொள்ள வேண்டியவை என பல்கோணப் பார்வையில் தொழிலை மேற்கொள்ள வேண்டும். சமூகப் பார்வைக்கும் விடைகொடுக்க வேண்டியதால் மிகவும் அவதானமாக செய்ய வேண்டிய ஒரு தொழிலாகவுள்ளது. அலெக்சாண்டர் ஆசிரியரை உயர்வான இடத்தில் வைத்திருந்தார். "வாழ்வதில் நான் என் தந்தைக்கு கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் முறையாக வாழ்வதில் நான் என் ஆசிரியருக்கு கடமைப்பட்டிருக்கிறேன்" என்றார். எனவே ஆசிரியர் எந்த விடயமானாலும் மிகவும் அவதானமாக நகர வேண்டும். அவசரப்பட்டு முடிவுக்கு வரக்கூடாது. வந்தால் முடிவு பொய்த்துவிடும். இதற்கு ஒரு எடுத்துக்காட்டு, பாடசாலையில் ஆசிரியரால் மொக்கன் என புறமொதுக்கப்பட்டு வீட்டுக்கு அனுப்பிவைக்கப்பட்ட தோமஸ் அல்வா எடிசன் என்பவரே பின்நாளில் மின்குமிழைக் கண்டுபிடித்த விஞ்ஞானி ஆவார். ஆபிரகாம் லிங்கன் ஆசிரியரில் கூடிய மதிப்பும், நம்பிக்கையும் கொண்டிருந்த ஒருவர். ஆபிரகாம் லிங்கன் தனது மகன் எப்படியெல்லாம் இருக்க வேண்டும் என எதிர்பார்த்தாரோ அவற்றை எல்லாம் மகனின் ஆசிரியர் ஊடாகவே நிறைவேற்ற முனைந்தவர். ஆசிரியப் பணி மகத்துவம் நிறைந்தது. ஆசிரியர்களே சமுதாயத்தை உருவாக்கும் சிற்பிகள். ஆசிரியர் தவறுவிட்டால் சமுதாயமே நலிவடையும். முறைசார்ந்த கற்றலுடன் முறைசாராக் கல்வியையும் இணைப்பாடவிதான செயற்பாடுகளையும் பொருத்தமான மாணவர்களுக்கு இணைத்து வழிப்படுத்தும் ஆசிரியர்களாலேயே மாணவர்கள் எதிர்காலத்தில் வளமான வாழ்வு வாழ முடியும்.

### ஆசிரியரின் உள்ள நிலை மாணவர்களைப் பிரதிபலிக்கும்

ஆசிரியர்கள் தமது தொழிலை நேசிப்பவராக இருக்க வேண்டும். இரண்டாம் நிலைப் பெற்றோராக விளங்க வேண்டும். ஆசிரியரது கோபமும் மகிழ்ச்சியும் மாணவரிடையே தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை புரிந்து கொண்டு செயற்படுபவராக இருக்க வேண்டும். ஒவ்வொரு மாணவனதும் நம்பிக்கையின் பங்காளியாகவே இருக்க வேண்டும். திறந்த மனமுடையவராகவும், மாணவர்களது உணர்வு நிலைகளை புரியக்கூடியவராகவும் உடல் உள ரீதியான தண்டனைகளைத் தவிர்த்து பல்வேறு தந்திரோபாய உத்திகளுடாக நெறிப்படுத்தக் கூடியவராகவும் இருக்க வேண்டும். இன்றைய மாணவர்கள் மத்தியில் இழையோடியுள்ள வன்முறைத் தன்மைகள், பாலியல் சார் நடவடிக்கைகள் நெறிவாழ்வான நடத்தைக் கோலங்கள் போதைப்பொருள் பாவனை வாள்வெட்டுக் கலாசாரம் என்பன எதிர்காலத்திலும் மிளிராதிருக்க ஆசிரியர் வண்மையாளராக அறிவுறுத்துநராக வழிகாட்டியாக நண்பனாக ஊக்குவிப்பாளராக நெறிப்படுத்துநராக மதீப்பீட்டாளராக சமநிலை ஆளுமை இயல்புடையவராக முகாமையாளராக விளங்குவதன் மூலம் ஆசிரிய மாணவ உறவு கட்டியெழுப்பப்பட்டு அவற்றினூடாக நல்லுலகம் காணலாம். அத்துடன் மாணவரிடத்தில் மிக உயர் விழுமியங்களையும், சிறந்த நியமங்களையும் விருத்தி செய்தல், அன்பு பரஸ்பரம் நட்பு ஆகிய உணர்வுகளை பகிர்ந்து கொள்வதில் ஆசிரியர் உண்மை நாட்டம் உள்ளவராக மாணவரை மாற்ற வேண்டும்.

தற்போது நவீன கல்வி வழங்கள் செயற்றிட்ட நடைமுறைகள் உள்வாங்கப்பட்டு சகல வகுப்பறைகளையும் திறன் வகுப்பறைகளைச் மாற்றும் திட்டத்துக்கு அமைவாக கட்டமைக்கப்பட்டு வருகின்றன. மாணவர்கள் நவீன தொழில்நுட்ப வசதிகளை கையாள்வதிலும் கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்வதிலும் ஆர்வம் காட்டி வருகின்றனர். இதற்கு இணையாக ஆசிரியர்கள் தம்மை மாற்றிக்கொள்ள வேண்டிய தேவையுள்ளது. ஒட்டுமொத்தமாக ஆசிரியத்துவம் மகத்தானது என்பதை புரிந்துகொண்டு ஆசிரியர்கள் தம் தொழிலை மேற்கொள்வார்களாயின் எல்லா ஆசிரியர்களும் நல்லாசிரியர்களே.

> பாடசாலைகளில் மாணவர்கள் வெளிப்படுத்தும் திறனை ஆசிரியர்கள் உரிய முறையில் இனங் கண்டுகொள்ள வேண்டும். அதன்வழி ஊக்கு விக்கப்பட வேண்டும். ஊக்கு வித்தல் மூலம் கற்றல் செயற்பாடு வினைத்திறனுள்ளதாக அமையும். இதனால் உயர்வான சமூக மாற்றமும், முன்னேற்றமும் ஏற்படும். ஆசிரியர் தன் தொழிலில் தடையின்றிய வழிப்படுத்தல் பணியை தொடர மேற்கொள்ள வேண்டும். இது கடமைக்கானதாக இல்லாது கடமையுணர்வோடு முன்னெடுக்கப்பட வேண்டும்.

நாளை

08.08.2018

புதன்கிழமை

ஆடி 23

திதி: துவாதசி மு.இ. 11.43 வரை
நட்சத்திரம்: மிருகசீசிடம் மு.ப. 08.35 வரை
சுபநேரம்: 04.34 – 06.34 வரை
ராகுகாலம்: 12.04 – 01.34 வரை

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# அனைவரும் கைகோர்த்து செயற்படுவோம் வாருங்கள்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இருதய வால்வு மாற்று அறுவைச் சிகிச்சை ஒன்று வெற்றிகரமாகச் செய்து முடிக்கப்பட்டுள்ளமை மகிழ்ச்சியைத் தரும் செய்தி. குறைந்த மருத்துவ வளங்களுக்கு மத்தியிலும் இதுபோன்ற ஓர் அறுவைச் சிகிச்சையை மேற்கொண்டு ஒரு ஏழையின் உயிரைக் காத்த மருத்துவ வல்லுநரும் ஏனைய மருத்துவர்களும் உதவியாளர்களும் போற்றத்தக்கவர்கள், பாராட்டத்தக்கவர்கள்.

போருக்குப் பின்னரான காலத்தில் போதனா வைத்தியசாலைக்குத் தமிழ் மருத்துவ வல்லுநர்கள் பலரும் சேவையாற்ற வந்திருப்பதும் மருத்துவக் கட்டுமானங்கள் ஓரளவுக்காவது விரிவாக்கம் அடைந்திருப்பதும் மகிழ்ச்சியைத் தரும் வளர்ச்சி. எனினும் மருத்துவர்களினதும் மருத்துவ வல்லுநர்களினதும் பற்றாக்குறை தொடர்வதும் தாதியர்கள் பற்றாக்குறை நிலவுவதும் கவலையளிக்கிறது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியாசாலை வடக்கில் மட்டுமல்ல, கிழக்கு மற்றும் வட மத்திய மாகாணங்களிலேயே மிகப்பெரிய வைத்தியசாலை. போர் முடிந்த சூழ்நிலையில் வடக்கில் இருந்து மட்டுமல்லாமல் அதற்கு வெளியில் இருந்தும் நோயாளர்கள் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு வருகிறார்கள். அதிலும் மருத்துவ வல்லுநர்களின் சேவையைப் பெறுவதற்காக யாழ்ப்பாணத்திற்கு என்று வருபவர்கள் பலர் இருக்கிறார்கள்.

இதனால் மருத்துவமனையில் நெருக்கடிகளும் சிக்கல்களும் அதிகளவில் இருக்கின்றன என்பது கண்கூடு. இருந்தாலும் அவற்றைத் திறம்படக் கையாண்டு மக்களுக்கு முடிந்தவரையில் தரமான வைத்தியசேவையை வழங்குவதற்குப் பாடுபடும் யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாகம், மருத்துவ வல்லுநர்கள், மருத்துவர்கள், தாதியர்கள், மருந்தாளர்கள், தொழில்நுட்பவியலாளர்கள், சிற்றூழியர்கள் அனைவருமே பாராட்டுக்குரியவர்கள்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தமிழர்களின் ஒரு பெரும் சொத்து. தமிழர்களுக்கு இருக்கும் அரசியல் வரலாற்றைப் போலவே இந்த வைத்தியசாலைக்கும் வரலாறு உண்டு. அதுவும் தமிழர்களின் அரசியலுடன் பின்னிப்பிணைந்த வரலாறு. போதனா வைத்தியசாலையின் ஆவணக் கிடங்குகளைக் கிளறியெடுத்தால், அது பல வெளித்தெரியாத கதைகளை இந்த உலகத்திற்குச் சொல்லும். அதேபோன்று வெளியே அறியப்பட்ட பல மருத்துவக் கதைகளையும் அது சொல்லும். அதனைப் பாதுகாப்பதும், வளர்த்தெடுப்பதும், சேவை விரிவாக்கத்துக்காகப் பாடுபடுவதும் ஒவ்வொரு தமிழ் மகனினதும் கடமை.

அத்தகைய ஒரு வைத்தியசாலை இப்போது இன்னும் பல உயிர்களைக் காப்பாற்றக்கூடிய வகையில் சிறப்பு மருத்துவ வசதிகளை வளர்த்து வருவது இன்னும் சிறப்பு. இந்த வளர்ச்சி தொடரவேண்டும். அதற்குத் தேவையான அனைத்து உதவிகளையும் தமிழ் அரசியல்வாதிகளும் உள்ளூராட்சி மன்றங்களும் வழங்க முன்வரவும் வேண்டும். அது கடமையும் கட்டாயமும்கூட. வடக்கு, கிழக்கில் முழுமையான தனியார் மருத்துவ நிலையங்களும் இல்லாத நிலையில் யாழ். போதனா வைத்தியசாலைதான் தமிழர்களுக்கு மட்டுமல்ல வடக்கு, கிழக்கு மற்றும் வட மத்திய மக்கள் அனைவருக்கும் ஆபத்தாந்தவன். எனவே அதன் வளர்ச்சியின் மீது அனைவருமே அக்கறைகாட்ட வேண்டியது அவசியம். இருதய அறுவைச் சிகிச்சைகளை தனியார் வைத்தியசாலைகளில் செய்தால் அதற்குப் 10 லட்சம் ரூபா வரையில் தேவைப்படும் என்கிறபோது இங்கு வாழும் பெரும்பாலான மக்களிடம் அதற்கான வசதி கிடையாது. எனவே ஏழைகளும் நடுத்தர வர்க்க மக்களும் உயிர் பிழைத்திருக்க யாழ். போதனா வைத்தியசாலையின் வளர்ச்சி இன்றியமையாதது.

தற்போதிருக்கும் நிலையில் வாரத்திற்கு இரண்டு திறந்த இருதய அறுவைச் சிகிச்சைகளையே மேற்கொள்ள முடிவதும் 750 பேர் வரையிலானோர் சிகிச்சைக்காகக் காத்திருக்கிறார்கள் என்பதுமான புள்ளிவிவரங்கள் மலைக்க வைக்கின்றன. இந்த நிலமையில் இருந்து தப்புவதற்கு தனியான அறுவைச் சிகிச்சைக் கூடத்துடன் இருதய சிகிச்சைப் பிரிவு விரிவாக்கப்பட வேண்டியதன் அவசியம் ஒவ்வொருவருக்கும் புரியும். அதனை உருவாக்குவதற்கு அனைவரும் கைகோர்த்துச் செயற்படுவோம் வாருங்கள்.

# அரசியலைக் களங்கப்படுத்துவது அரசியல்வாதிகளுக்குத் தகுமா?

இந்துமதி



பொருளாதார அபிவிருத்தி என்பது மக்களுக்கானதே. இதில் சந்தேகமே இல்லை. ஆனால் அதை அரசியல்வாதிகளின் சட்டைப்பைகளை நிரப்புவதற்குப் பயன்படுத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது. இவ்வாறு அறிவித்திருக்கிறார் அரசதலைவர். அவர் கூறியதில் உண்மை இருக்கின்றபோதிலும் நடைமுறையில் அதைக் காணமுடியவில்லை. அரசியலுக்குள் நுழையும் போது நல்லவர்களாகத் தம்மை இனம் காட்டிக் கொள்பவர்கள் அங்கு சென்றதும் தமது இயல்பை மாற்றிக்கொள்கின்றனர். சிலர் பணம் சம்பாதிப்பதற்கென்றே அரசியலைத் தேர்ந்தெடுக்கின்றனர். இவர்களால் தமது நோக்கத்தை நிறைவு செய்யவும் முடிகின்றது.

**ஜனநாயகத்தின் வெளிப்பாடுதான்**

ஜனநாயகத்தின் ஓர் அங்கமாகத்தான் அரசியல் பார்க்கப்படுகின்றது. மக்களின் ஜனநாயக உரிமைகளை அரசியல் ஊடாகப் பெற்றுக் கொடுக்கவும் முடிகின்றது. ஆனால் அரசியல்வாதிகள் சிலரின் தவறான நடவடிக்கைகள் முழு அரசியலுக்கும் களங்கத்தை ஏற்படுத்திவிடுவதுமுண்டு. இதன் காரணமாகவே அரசியலை வெறுத்த பேரறிஞர் பேர்னாட்சா அதையொரு சாக்கடை என்று சாடினார்,

இலங்கையின் அரசியல் மெத்தப்படித்தவர்களாலும் அவ்வளவு படிக்காதவர்களாலும் எப்போதுமே நிறைந்து காணப்படுகின்றது. ஒரு காலத்தில் சட்டம் பயின்றவர்கள்தான் அரசியலுக்கு இலாயக்கானவர்கள் என்றதொரு தோற்றப்பாடு இருந்ததுமுண்டு. இதற்குப் பல்வேறு காரணங்களைக் கூறமுடியும். இந்த நாட்டில் இனவாதத்துக்கு ஆரம்பப்புள்ளி இட்ட பெருமை மறைந்த முன்னாள் தலைமை அமைச்சர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கவையே சாரும். அவர் இலண்டன் வரை சென்று உயர்கல்வியைக் கற்ற ஒரு கல்விமான். மிகச் சிறந்த பேச்சாளராகவும் அவர் திகழ்ந்தார். அவர் அரசியலுக்குள் நுழைந்த போது ஐக்கிய தேசியக் கட்சி பதவியில் அமர்ந்திருந்தது. அதையொரு முதலாளித்துவக் கட்சி எனவும் கூறுவார்கள். இதனால் தம்மையொரு சோசலிசவாதியாகக் காட்டிக்கொண்ட பண்டாரநாயக்க கீழ்த்தட்டு மக்களைக் கவரும் வகையில் தமது அரசியல் காயை நகர்த்திச் சென்றார். அதுமட்டுமல்லாது இனவாதம் என்ற ஆயுதத்தையும் கையில் ஏந்திக் கொண்டார். பதவியேற்று 24 மணி நேரத்தில் சிங்களத்தை அரச கரும மொழியாக மாற்றுவேன் என அவர் கூறிய வார்த்தைகளால் பெரும்பான்மையின மக்கள் பெரிதும் கவரப்பட்டனர். இதன் விளைவாகப் பண்டாரநாயக்கவினால் ஆட்சியில் அமர முடிந்தது. அவருக்குப் பின்னர் அவர் விட்டுச் சென்ற பாதையில் பயணிப்பதையே பெரும்பான்மையின அரசியல்வாதிகள் பெரிதும் விரும்பினர். இனப்பிரச்சினையின் தோற்றத்துக்கு இதுவே வழியமைத்துக் கொடுத்து விட்டது.

> தம்மையொரு சோசலிசவாதியாகக் காட்டிக்கொண்ட பண்டாரநாயக்க கீழ்த்தட்டு மக்களைக் கவரும் வகையில் தமது அரசியல் காயை நகர்த்திச் சென்றார், அதும்ட்டுமல்லாது இனவாதம் என்ற ஆயுதத்தையும் கையில் ஏந்திக் கொண்டார், பதவியேற்று 24 மணி நேரத்தில் சிங்களத்தை அரச கரும மொழியாக மாற்றுவேன் என அவர் கூறிய வார்த்தைகளால் பெரும்பான்மையின மக்கள் பெரிதும் கவரப்பட்டனர்,

**அரசியலும் ஊழலும் இரண்டறக் கலந்தவை**

அரசியல் வாதிகளுக்கும் ஊழலுக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாகக் கூறுவார்கள். இதை நிரூபிப்பது போன்று இந்த நாட்டில் மட்டுமல்லாது வேறு நாடுகளிலும் அரசியல்வாதிகளின் ஊழல்கள் வெளிவந்துள்ளன. கடந்த ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற ஊழல் மற்றும் மோசடிகளால் நாட்டின் பொருளாதாரமே கீழ்நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டது. ஆனால் இவை தொடர்பாக எவருமே கைது செய்யப்பட்டுத் தண்டனைக்கு உள்ளாக்கப்படவில்லை, இன்று அத்தகையவர்கள்தான் அரசைக் கவிழ்ப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர்.

மக்களைப் பொறுத்தவரையில் எதற்கெடுத்தாலும் அரசியல்வாதிகளையே நம்பியிருக்க வேண்டிய நிலையில் உள்ளனர். தமது வாக்குப் பலத்தினால் பதவிகளைப்பிடித்த அரசியல்வாதிகள் தம்மை ஏமாற்றி விடமாட்டார்களென்றும் இவர்கள் நம்புகின்றனர். இவர்களின் நம்பிக்கையை நிறைவேற்றி வைக்க வேண்டிய பெரும் பொறுப்பு அரசியல்வாதிகளுக்கு உண்டு. ஆனால் இவர்களில் பெரும்பாலானவர்கள் மக்களை மறந்து செயற்படுவதைக் காண முடிகின்றது. இது மக்களுக்குப் புரிகின்ற மிகப்பெரிய துரோகமாகும்,



**அரசியலுக்கு ஊழல் அழகானதல்ல**

சில அரசியல்வாதிகளுக்கு தேர்தல்கள் இடம்பெறும் போதுதான் மக்களின் நினைப்பு மனதில் தோன்றுகின்றது. மக்கள் வாக்களிக்காவிட்டால் பதவிகளைப் பெறமுடியாது என்பதால் தேர்தல்களின்போது மக்களை நாடிச் செல்லவேண்டிய தேவை அரசியல்வாதிகளுக்கு எழும்புகின்றது. தேர்தல் முடிந்ததும் தமக்கு வாக்களித்த மக்களை இவர்கள் மறந்துவிடுவதுமுண்டு.

அரசியலைத் தூய்மைப்படுத்த வேண்டிய பொறுப்பு அரசியல்வாதிகளிடமே உள்ளது. அரசியல் தொடர்பான தவறான எண்ணங்களையும் இவர்கள்தான் இல்லாதொழிக்க வேண்டும். தம்மீது மக்கள் மதிப்பும், மரியாதையும் வைத்துச் செயற்படும் வகையில் தமது செயற்பாடுகளை வகுத்துக்கொள்ள வேண்டும்.

இதைவிடுத்து இனவாதம் பேசுவதும், பிற இனத்தவரைக் கொடுமைப்படுத்தி அவர்களைத் துன்பத்தில் ஆழ்த்துவதும் ஊழல் மோசடிகளில் ஈடுபடுவதும் அரசியல்வாதிகளுக்கு நல்லதல்ல.

# உலகம் உறைந்த நாள்கள்

இன்றைக்கு 73 ஆண்டுகளுக்கு முன்னர் ஜப்பான் இந்த நாள்களில் அதிர்ச்சியில் உறைந்தது. இரண்டாவது உலகப்போர் தீவிரம் பெற்றிருந்த இந்த நாள்களில் ஜப்பான் மீது லிட்டில் போய், பட போய் என்று இரண்டு அணுகுண்டுகளை வீசியது அமெரிக்கா. "சூரியன் பூமியில் உதித்த நாள்கள்" என்று வர்ணிக்கப்படும் அந்தக் காலங்களையும் இன்று அணுவாயுதங்கள் எந்தளவுக்கு நிலைபெற்றுள்ளன என்பதையும் ஆராய்ய முனைகிறது இந்தப் பத்தி.



> சீனத்தின் பெரும் பகுதிகளைக் கைப்பற்றிய ஜப்பான் அங்கு இமாலய மனித வேட்டையை நடத்தயது. அந்தக் காலங்களில் ஜப்பான் மேற்கொண்ட வதைகள் ஒன்றல்ல இரண்டல்ல அதுவொரு நீண்ட பட்டியல்.

### ஜப்பானும் அமெரிக்காவும்

டிசெம்பர் 1941ஆம் ஆண்டில் ஐக்கிய அமெரிக்காவைத் தாக்கியதன் மூலம் ஜப்பான் இரண்டாம் உலகப் போரில் தீவிரமாக ஈடுபட்டது. அதுவரை நேச நாடுகளுக்கு தளபாட வழங்கலை மட்டும் செய்து வந்த அமெரிக்காவும் ஜப்பானின் சீண்டலை அடுத்து போரில் நேரடியாக ஈடுபட்டது. ஜப்பானியப் படைகள் விரைவில் தென்கிழக்காசியாவின் பல பகுதிகளைக் கைப்பற்றி இந்தியாவின் கிழக்கெல்லை வரை முன்னேறி விட்டன. 1942ஆம் ஆண்டு வரை அச்சு நாடுகளுக்கு சாதகாமாக இருந்த போர் நிலவரம் அவ்வாண்டு நேரெதிரானது. ஐரோப்பாவின் கிழக்கு முனையில் அச்சு நாட்டு முன்னேற்றம் சோவியத் படைகளால் தடுத்து நிறுத்தப்பட்டது.

வடக்கு ஆபிரிக்காவிலும் அச்சுப் படைகள் முறியடிக்கப்பட்டு பின்வாங்கின. பசிபிக் பெருங்கடல் பகுதியில் அமெரிக்கப் படைகள் நேச நாட்டு படைகள் இழந்த பகுதிகளை ஒன்றன் பின் ஒன்றாகக் கைப்பற்றத் தொடங்கின. சீனத்தின் பெரும் பகுதிகளைக் கைப்பற்றிய ஜப்பான் அங்கு இமாலய மனித வேட்டையை நடத்தயது. அந்தக் காலங்களில் ஜப்பான் மேற்கொண்ட வதைகள் ஒன்றல்ல இரண்டல்ல அதுவொரு நீண்ட பட்டியல். இதன் காரணமாக ஜப்பானின் ஹிரோஷிமா மற்றும் நாகசாகி நகரங்கள் மீது அமெரிக்கா அணு குண்டுகளை வீசவேண்டிய தேவை இருந்தது. 1945ஆம் ஆண்டு ஒகஸ்ட் 6ஆம் நாளன்று அணுகுண்டு வீசப்பட்டது. அடுத்த மூன்று தினங்களில் அதாவது ஒகஸ்ட் 9ஆம் திகதி நாகசாகியிலும் அணுகுண்டு வீசப்பட்டது. உலகப்போர் முடிவுக்குக்கு வருவதற்கு இந்த இரு அணுகுண்டுகளும் முக்கிய காரணம். முழுமையான காரணமும்கூட.

### ஹிரோசிமா நாகசாகி நகரங்கள் ஏன் இலக்கு

ஹிரோஷிமா ஜப்பானில் உள்ள ஒரு பெருநகரம். இது ஹோன்ஷூ தீவில் உள்ளது. அதுபோல் நாகசாகியும் பெரியதொரு நகரம்தான். இந்த இரண்டு நகரங்களும்தான் அந்தக் காலத்தில் உலக வர்த்தகத்தில் கொடிகட்டிப் பறந்தவை. மேற்கு நாடுகளை வியக்க வைத்தவை. எனவே ஜப்பானை அடிபணிய வைக்க வேண்டுமாயின் இந்த இரண்டு நகர்களும் தாக்கப்படுவது மிகவும் அவசியம். அதையே அமெரிக்கா செய்தது. அதாவது அமெரிக்கா ஜப்பானின் அத்திபாரத்தைக் குலைத்தது.



### உலக அரங்கில் ஏற்பட்ட மாற்றம்

இந்தப் போரின் விளைவாக உலக அரசியலில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டன. ஐரோப்பிய காலனிய பேரரசுகள் தங்கள் வல்லமையை இழந்தன. ஆபிரிக்கா மற்றும் ஆசியாவில் காலனிமயமழித்தல் தொடங்கியது. அமெரிக்காவும், சோவியத் ஒன்றியமும் உலகின் புதிய வல்லரசுகளாகின. அவற்றுக்கு இடையேயும் பனிப்போர் துவங்கியது. உலக அமைதிக்காக செயல்பட ஐக்கிய நாடுகள் சபை உருவாக்கப்பட்டது. மனிதகுலம் கண்டிராத அந்த அழிவுக்குப் பின்னர், 23 ஆண்டுகாலம் கழித்து, 1968 ஜூலை முதலாம் திகதி அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தம் கையெழுத்துக்காக முன்வைக்கப்பட்டது. 1970 மார்ச் ஆம் திகதி அது நடைமுறைக்கு வந்தது. ஆனால், அணு ஆயுதங்கள் விடயத்தில் ஆதிக்கம் செலுத்தும் அமெரிக்கா, ரஷ்யா உள்ளிட்ட ஐந்து நாடுகளின் செயல்பாடுகள், இந்த ஒப்பந்தத்தின் நோக்கம் நிறைவேறவிடாமல் செய்கின்றன என்பதுதான் கவனிக்க வேண்டிய விடயம்!

### வல்லரசுகளின் விளையாட்டு

இந்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்தபோது ஆச்சரியத்தக்க வகையில் 191 நாடுகள் இதில் கையெழுத்திட்டிருந்தன. அணு ஆயுத ஒழிப்பில் மும்முரமாக இருந்த, இருக்கின்ற இந்தியா இதில் கையெழுத்திடவில்லை. ஐநா பாதுகாப்பு சபையில் நிரந்தர உறுப்பு நாடுகளான அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன், பிரான்ஸ், சீனா தவிர இந்தியா, பாகிஸ்தான், இஸ்ரேல் ஆகிய நாடுகளும் தற்போது அணு ஆயுதம் வைத்திருப்பதாகக் கருதப்படுகிறது. 2003ஆம் ஆண்டில் அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்திலிருந்து வெளியேறிய வடகொரியாவிடம் அணு ஆயுதங்கள் இருப்பது வெளிப்படையாகத் தெரிந்த விடயம். முழுமையான அணு ஆயுத ஒழிப்பு இன்று சாத்தியமில்லை என்பது மலையில் ஏற்றி வைத்த தீபம் போன்று வெளிப்படையானதே.

ஏனெனில் அதிக எண்ணிக்கையில் அணு ஆயுதங்களைக் கொண்டிருக்கும் அமெரிக்கா, ரஷ்யா, சீனா, பிரிட்டன், பிரான்ஸ் நாடுகள்தான் இதனை முதலில் ஒழிக்க வேண்டும். ஆனால், அந்நாடுகள் அதற்குத் தயாராக இல்லை. சொல்லப்போனால், இந்த ஐந்து நாடுகள்தான் பிற நாடுகளுக்குப் பெரிய அளவில் ஆயுத உற்பத்தியும் ஏற்றுமதியும் செய்கின்றன.

ஆயுத ஏற்றுமதிக்காக உலகையே பதற்றத்தில் வைத்திருக்கும் வகையில் போட்டி போட்டுக்கொண்டு ஆயுத விற்பனை செய்வதால், பல நாடுகள் தங்கள் அண்டை நாடுகளுக்கு இணையாக ஆயுதங்களுக்குச் செலவு செய்ய வேண்டிய கட்டாயம் வேறு. பாதுகாப்பு விடயத்தில் அதிக நிதியை ஒதுக்குவதால், வளர்ச்சித் திட்டங்களுக்குப் போதிய நிதி ஒதுக்க முடியாமல் அந்நாடுகள் திணறுகின்றன. எனின், பிள்ளையையும் கிள்ளிவிட்டுத் தொட்டிலையும் ஆட்டிக்கொண்டிருக்கும் கதைதானே இது. இவ்வாறிருக்கையில் எவ்வாறுவரும் உலக அமைதி.

## ஆசிரியருக்கான கடிதம்

# அறிவித்தல் பலகைகள் பராமரிக்கப்படுமா?



யாழ்ப்பாணத்தில் சில முக்கிய சந்திகளில் உள்ள அறிவித்தல் பலகைகளின் நிலமை கவலைக்கிடம்தான்.

சில அறிவித்தல் பலகைகளில் கம்பம் நிலையாய் நிற்க அதிலுள்ள பதாகை நிலத்தில் கிடக்கும், சில இடங்களில் கம்பமும் அறிவித்தல் பதாகையும் சரிந்து கிடக்கும். சில இடங்களில் இரண்டும் கிடப்பில் கிடக்கும். வீதிகளில் அதிலும் தலைமை வீதிகளில் இவ்வாறான அலங்கோல நிலைகளைக் கவனிக்க முடிகிறது.

யாழ்ப்பாணத்தில் உள்ள மிக முக்கிய சந்திகளில் ஒன்றான யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிச் சந்தியில் வைக்கப்பட்டிருந்த நிறுத்தல் பலகையின் நிலமைதான் படத்தில் காட்டப்பட்டுள்ளது. சனத்தொகை கூடிய பாடசாலை அமைவுபெற்றிருக்கும் வீதியில் அமைக்கப்பட்டிருந்த பாதைகைக்கு இந்த நிலமை என்பது கவலை தருகின்ற விடயம்தானே.

இந்தப் பாதாகை தேவையற்றது என்றால் ஏன் அவ்விடத்தில் அமைக்கப்பட்டது?. அதற்குரிய செலவுக்கு எவர் பொறுப்பு?. தேவையற்றதெனில் ஏன் அவ்விடத்தில் இருந்து அப்புறப்படுத்தவில்லை? இது போன்று விழுந்தும், வளைந்தும், சரிந்தும் போயுள்ள பதாகைகள் எப்போது சீரமைக்கப்படும்? என்பனதான் தற்போது எஞ்சியுள்ள கேள்விகள். உரிய அதிகாரிகள் இது விடயத்தில் கவனத்தில் கொள்வார்களா...?

*பிரகாஷ்*



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** குடும்பத்தினர் ஆலோசனையை ஏற்று முன்னேறுவர். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். வெளியூர் பயணத்தில் திடீர் மாறுதல் செய்வீர்கள்.

**இடபம்:** மதிநுட்பத்துடன் செயல்பட்டு சோதனைகளை வெல்வீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் இலாபம் பெருகும். மக்கள் மத்தியில் அந்தஸ்து உயரும்.

**மிதுனம்:** திட்டமிட்டபடி செயல்கள் நிறைவேறும். தொழில், வியாபார வளர்ச்சியால் இலாபம் அதிரிக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர்.

**கடகம்:** அடுத்தவர் விடயத்தில் கருத்து சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில் வருகிற இடையூறுகளை சரிசெய்வது நல்லது.

**சிங்கம்:** உங்களின் நற்செயலை மற்றவர் பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில் இலாபம் மிதமாக இருக்கும். பெண்களுக்கு உறவினர் வருகையால் செலவு அதிகரிக்கும்.

**கன்னி:** கடந்த கால நற்செயலுக்கான நற்பலன் தேடிவரும். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் பன்மடங்கு அதிகரிக்கும். பணக்கடனில் பெரும்பகுதி அடைபடும்.

**துலாம்:** மற்றவர் விமர்சனம் மனதில் வருத்தம் தரலாம். தொழில் வியாபாரத்தில் இருக்கிற நன்மையைப் பாதுகாப்பது நல்லது. இலாபம் சுமாராக இருக்கும்.

**விருச்சிகம்:** சிரமம் குறுக்கிட்டாலும் முயற்சிக்கான பலன் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் கூடுதல் போட்டியை எதிர்கொள்வீர்கள். இலாபம் சுமாராக இருக்கும்.

**தனுசு:** யாருக்கும் தேவையற்ற வாக்குறுதி தர வேண்டாம். தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணியிடத்தில் விழிப்புடன் இருப்பது நல்லது.

**மகரம்:** சமயோசிதமாகச் செயற்பட்டு வருவீர்கள். குடும்பத்தில் நிம்மதியும், மகிழ்ச்சியும் உண்டாகும். தொழில், வியாபாரத்தில் வருமானம் திருப்தியளிக்கும்.

**கும்பம்:** குடும்பத் தேவை குறைவின்றி நிறைவேறும். தொழில், வியாபார வளர்ச்சி கண்டு மற்றவர் வியப்படைவர். பெண்கள் பிள்ளைகளின் நலனில் அக்கறை செலுத்துவர்.

**மீனம்:** பெருந்தன்மையுடன் நடந்து சுய மதிப்பைப் பாதுகாப்பீர்கள். தொழில், வியாபாரம் செழிக்க புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். வருமானம் சீராக இருக்கும்.


# சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | | | | 7 | | 6 | | |
| | | | | | 3 | | 8 | |
| 6 | 8 | | 4 | | | | | 1 |
| | 7 | | | 8 | | | 5 | 3 |
| | | | | | | | | |
| 3 | 5 | | | 9 | | | 4 | |
| 8 | | | | | 1 | | 9 | 7 |
| | 1 | | 9 | | | | | |
| | | 6 | | 5 | | | | 4 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 1 | 4 | 2 | 9 | 5 | 7 | 6 | 3 |
| 6 | 3 | 7 | 1 | 8 | 4 | 2 | 9 | 5 |
| 9 | 5 | 2 | 7 | 6 | 3 | 4 | 1 | 8 |
| 7 | 8 | 3 | 9 | 2 | 6 | 1 | 5 | 4 |
| 4 | 2 | 5 | 8 | 3 | 1 | 9 | 7 | 6 |
| 1 | 6 | 9 | 4 | 5 | 7 | 8 | 3 | 2 |
| 5 | 9 | 8 | 3 | 7 | 2 | 6 | 4 | 1 |
| 3 | 7 | 1 | 6 | 4 | 8 | 5 | 2 | 9 |
| 2 | 4 | 6 | 5 | 1 | 9 | 3 | 8 | 7 |

நேற்றைய விடை



# கதாநாயகனாகும் இயக்குநர் கவுதம்மேனன்

இயக்குநர் கவுதம் மேனன் தனது படங்களில் ஒரு சில காட்சிகளில் தலையைக் காட்டிவிட்டு செல்வது வழக்கமாகவைத்துள்ளார். அண்மையில்கோலிசோடாபடத்தில் பொலிஸ் அதிகாரியாக நடித்தார். இந்த நிலையில், தற்போது ஹீரோவாக நடிக்கவுள்ளார். 'ஜெய்' என்கிற புதுமுக இயக்குநர் இயக்கும் படத்தில் கவுதம்தான் நாயகன். ஓகஸ்ட் 15ஆம் திகதி முதல் படப்பிடிப்பு தொடங்குகிறது.

# twitter

**முகிலன்™@MJ_twets**

எதிர் காலத்தையே கணக்கிடாதீர்கள், நிகழ் காலம் இறந்து கொண்டிருக்கிறது.!

**கோழியின் கிறுக்கல்!!**

இங்கு பலரின் 'அருமையாக இருக்கிறேன்' என்பதற்கு பின்னால், 'எருமையாக உழைக்கிறேன்' என்பது ஒளிந்திருக்கிறது!!!

**தர்ஷிகா@THARZIKA**

அன்பு கடன் மாதிரி துரோகம் வட்டி மாதிரி முழுசா நம்மள அழித்து விடும் .

கடைசி ரிங்வரை விடாமல் கோல் செய்யும் நம் நண்பர்களுக்கு



முதல் ரிங் லையே சைலண்ட் ல போடுறதுதான் மிகப் பெரிய துரோகம்

இறந்த உடலைக் கண்டு பயம் கொள்ளாதீர்கள்...




அவை உயிரோடு உள்ளவற்றை விட மோசமாக இருக்காது....



கருணாநிதியை சந்தித்து உடல் நலம் விசாரிக்கிறார் ராகுல் காந்தி

**கருணாநிதி :** என்ன தம்பி இந்தப் பக்கம்?

**ராகுல் :** உங்களுக்கு உடம்பு சரியில்லன்னு சொன்னாங்கா பார்த்துட்டு போலாம்னு வந்தேன்

**கருணாநிதி :** இது வைரம் பாய்ந்த கட்ட. தம்பி உங்க உடம்ப பார்த்துக்கோங்க.

# 'பிரைவசி' என்றால் என்ன?



'பிரைவசி' என்றால் நிறைய பேர் நினைப்பது என்னவோ , அது கெட்ட வார்த்தையென்று தான்.
அது தனக்கே தனக்கான நேரம் . அது ஆரோக்கியமான, ஆரோக்கியமற்ற எல்லாவற்றுக்கும் அதுவே காரணம் .
மனதை ஒரு முகப்படுத்தல், கிரகித்தல் , எண்ணங்களைக் குவித்தல், படிக்க, இளைப்பாற, பாட்டு கேட்க, யோகா செய்ய , தியானம் செய்ய, என்று எல்லோருக்கும் ஏதோ ஒரு விதத்தில், சிலநேரம் தேவைப்படுகிறது, பலநேரம் என்பதே உண்மை.
பிடித்த பாடலைக் கேட்க, ஆட , எதுக்குமே . ஏன் பகிர கூட முடியாத எத்தனையோ விடயங்கள், ஏன், சிலநேரம் யாரிடம் பகிர்வது என்று முடிவு செய்வது கூட 'பிரைவசி' தான் . யாரை நம்புவது என்று தெரியாமல், சொல்லி பேச முடியாமல் தனக்குள் தன்னையே ஒடுக்கிக்கொள்வதும் பிரைவசி தான்.
ஒருவரின் 'பிரைவசி'குள் யாரும் நுழைய முடியாது,
ஒருவரின் சுதந்திரம் மூக்கு நுனிவரை தான். எல்லை மீறல், அத்துமீறி நுழைதல், துளைத்து துளைத்து விசாரித்தல் . தூண்டில் போட்டு மீன் பிடித்தல் எல்லாமே ஒரு அத்துமீறல் தான்.
அது ஒரு பாதுகாப்பு . ஏன் ரகசியம், அந்தரங்கம் எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம். அது அந்த நபரின் 'பிரைவசி'. எல்லோர் உள்ளேயும் சொல்லப்படாத ஒரு பக்கம் இருக்கும். நிலவின் மறுபக்கம் யார் அறிவார் ?
எந்த ஒரு 'பிரைவசி'யும் தானாக கிடைக்காது. கிடைத்தால் மகிழ்ச்சி. இல்லை அதை நாமாக ஏற்படுத்தி கொள்ளல் பரம மகிழ்ச்சி. அதுவே தான் 'பிரைவசி' அதாவது தனியுரிமை.

# பெறுகை அறிவித்தல்

## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்

## சபை நிதி வேலைத்திட்டம் 2018

01. தலைவர், உள்ளூராட்சி மன்றப் பெறுகைக்குழு, வலி தென்மேற்கு பிரதேச சபையினால் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டுமானம் / வழங்கல் வேலைகளிற்கு தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.
02. கட்டுமான வேலைக்கு கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப்பட்டியலில் சேர்த்துக்கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் சீடா (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.
03. தேசிய போட்டி கேள்விகோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் பொதுநிதிச் சுற்றறிக்கை இல 04/2016(1) இற்கமைவாக இவ் விலைமனுக்கோரலானது தகுந்த வியாபார அல்லது கம்பனிப் பதிவுகளை வடக்கு மாகாணத்திற்குள் கொண்டுள்ள கேள்வியாளருக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
04. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule ) பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் வலிகாமம் தென்மேற்குப் பிரதேசசபை, மானிப்பாய் (தொலைபேசி இல - 021-2255381) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
06. ஆங்கில மொழியிலான பூரணமான கேள்வி ஆவணமொன்றை தவிசாளர், உள்ளூராட்சி மன்றப் பெறுகைக்குழு, வலி தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய் எனும் இடத்தில் 07 ஆகஸ்ட் 2018ம் திகதியிலிருந்து 23 ஆகஸ்ட் 2018 வரை காலை 09.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் பார்வையிடமுடியும். அத்துடன் கட்டுமான வேலைக்கான கேள்வி ஆவணமொன்றை மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 2000/- மற்றும் வரி செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும். வழங்கல் வேலைக்கான கேள்வி ஆவணமொன்றை மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 1000/- மற்றும் வரி செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும்
07. கேள்வி இரு பிரதிகளில் சமர்ப்பிக்கப்படவேண்டும். தவிசாளர், உள்ளூராட்சி மன்றப் பெறுகைக்குழு, வலி தென் மேற்கு பிரதேச சபை, மானிப்பாய் எனும் முகவரிக்கு 24 ஆகஸ்ட் 2018ம் திகதி பி.ப 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படவேண்டும். பிந்தியகேள்விகள் நிராகரிக்கப்படும்.
08. கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்தவுடன் வருகைதரும் கேள்விதாரர் / அவரது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
09. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.
10. கேள்வியாளர்களுக்கான முன் கலந்துரையாடல் 16 ஆகஸ்ட் 2018ம் திகதி பி.ப. 14.30 மணிக்கு வலி தென்மேற்கு பிரதேசசபை மண்டபத்தில் நடைபெறும்.
11. கேள்வியானது 63 நாட்கள் செல்லுபடியானதாகும் (26 ஒக்ரோபர் 2018)

| இல | விபரம் | மதிப்பீட்டு தொகை (மில்லியன்) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு(ரூபா) | செல்லுபடியாகும் காலம் |
| கட்டுமான வேலை | | | | | | |
| 01 | சாவற்கட்டு 100 வீட்டுத்திட்ட வீதி புனரமைத்தல் | 1.34 | 03 | C9 | 13,500.00 | 23 நவம்பர் 2018 வரை |
| 02 | சுதுமலை வேலுச்சாமி கோவில் வீதி புனரமைத்தல் | 0.98 | 03 | C9 | 10,000.00 | 23 நவம்பர் 2018 வரை |
| வழங்கல் வேலை | | | | | | |
| 03 | மரக்கன்றுகள் வழங்கல் | 0.30 | - | - | 3000.00 | 23 நவம்பர் 2018 வரை |
| 04 | மாநாட்டு மண்டப ஒலியமைப்பு சாதனங்கள் வழங்கிப் பொருத்துதல் | 1.00 | - | - | 7000.00 | 23 நவம்பர் 2018 வரை |

**தவிசாளர், உள்ளூராட்சிமன்றப் பெறுகைக்குழு,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்.**

**06.08.2018**

# வீடு வாடகைக்கு

மந்திகை மில் ஒழுங்கையில் வீடு வாடகைக்கு உண்டு. **-077 9810961**

# நாகபூஷணி திருமணசேவை

மிகப் பொருத்தமான மணமக்கள்
ஜாதகங்கள் உடன் தெரிவு
செய்து தரப்படும்.

**257, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**
**021 222 9306, 077 138 7596**

(CS 18781/15/17)

# சட்டக்கல்லூரி அனுமதிப்பரீட்சை - 2018

சட்டக்கல்லூரி அனுமதிப் பரீட்சைக்குத்
தோற்றும் மாணவர்களுக்கான
விசேட வழிகாட்டல்.
**(சட்டம் சார் நிபுணர்களின் வழிகாட்டல்)**
**11.08.2018 சனிக்கிழமை - 8.30**

**076 201 0158**
**IDM Nations Campus**
**216, Navalar Road, Jaffna.**

# தேவை

01. கணக்கியல் பயின்ற கணினி அறிவுள்ளவர்கள் (பெண்கள்)
02. பொதியிடல் வேலைக்கு பெண்கள் தேவை
03. கொப்பறா, தேங்காய் கொள்வனவு செய்யப்படும்.

**076 822 7536, 076 822 7546**

# தேவை

01) உற்பத்தி நிறுவனம் ஒன்றிற்கு பொதி செய்ய பெண் ஊழியர் தேவை. அனுபவம் உள்ளவர் விரும்பத்தக்கது. நாள் ஒன்றிற்கு **500 /=** சம்பளம், மதிய உணவும் வழங்கப்படும்.
02) மேற்பார்வையாளர் பெண் தேவை.
கல்வித்தகைமை - க.பொ.த உயர் தரம்

**தொடர்பு - 075 9789 226,**
**075 9789 223**

# மரண அறிவித்தல்



**தோற்றம்**
**27**
**09**
**1936**

**மறைவு**
**06**
**08**
**2018**

## வல்லிபுரம் வள்ளிப்பிள்ளை

புன்னாலைக்கட்டுவனைப் பிறப்பிடமாகவும், முத்துகிருஸ்ணன் லேன் (தியேட்டர் ஒழுங்கை) சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் வள்ளிப்பிள்ளை நேற்று(06.08.2018)திங்கட்கிழமை இறைபதம்அடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.08.2018) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம்கொத்தியாவத்தை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS/18359)(11,17)

**077 260 5625**

# வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்

## ஆதனப் பெயர்மாற்றம் - 26, புளியடி வீதி, வட்டாரம் - 02

வலிகாமம் மேற்கு பிரதேசசபைக்குட்பட்ட வட்டாரம் 02, புளியடி வீதியிலுள்ள 26 ஆகிய ஆதனம் எமது ஆதன வரிப்பதிவேட்டின் பிரகாரம் **நாராயணப்பிள்ளை கதிரவேலு மாணிக்கம்** என்றும் பெயரில் காணப்படுகின்றது.

பெயர்மாற்றத்துக்குட்படும் ஆதனத்தின் ஒரு பகுதியானது **நாகலிங்கம் சிவசுப்பிரமணியமும் பெண் கனகம்மாவும்** ஆகியவர்கள் தமது சகோதரியும் மைத்துனருமான நாராயணப்பிள்ளை கதிரவேலுவுக்கும் பெண் மனோன்மணிக்கும் சொந்தமாகவிருந்து பின்னர் வாய்ச்சொல் மூலமாகத் தமக்கு குறித்த ஆதனத்தை நன்கொடையாக வழங்கியிருந்தார்கள் எனவும் குறித்த ஆதனம் 40 வருடங்களுக்கு மேலாகத் தங்களால் ஆட்சி செய்யப்பட்டு வந்தது எனவும் வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு மு.சபாநாதன் முகதாவில் 4548/14.06.1989 ஆம் இலக்கத்தில் வெளிப்படுத்தல் உறுதியொன்றை நிறைவேற்றியுள்ளார்கள்.

**சிவசுப்பிரமணியம் கணேஸ்வரன்** பிரசித்த நொத்தாரிசு து.பாக்கியநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 2700/27.03.2000 ஆம் இலக்க உறுதியால் குறித்த **நாகலிங்கம் சிவசுப்பிரமணியமும் பெண் கனகம்மாவும்** ஆகியவர்களிடமிருந்து குறித்த ஆதனத்தை நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்து முடையவரானார்.

**பொன்னம்பலம் செல்வராசாவும் பெண் விமலாவதியும்** ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு வே.த.மு. கதிர்காமநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 10499/02.08.2009 ஆம் இலக்க உறுதியால் குறித்த **சிவசுப்பிரமணியம் கணேஸ்வரனும் பெண் செல்வமதியும்** ஆகியவர்களிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

**சின்னத்துரை கிருஷ்ணமூர்த்தியும் பெண் தவமணிதேவியும்** பிரசித்த நொத்தாரிசு வே.த.மு.கதிர்காமநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 15459/ 23.11.2015 ஆம் இலக்க உறுதியால் குறித்த **பொன்னம்பலம் செல்வராசாவும் பெண் விமலாவதியும்** ஆகியவர்களிடமிருந்து குறித்த ஆதனத்தை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

**கிருஷ்ணமூர்த்தி சேந்தன்** பிரசித்த நொத்தாரிசு வே.த.மு.கதிர்காமநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 15460/23.11.2015 ஆம் இலக்க உறுதியால் குறித்த **சின்னத்துரை கிருஷ்ணமூர்த்தியும் பெண் தவமணி தேவியும்** ஆகியவர்களிடமிருந்து குறித்த ஆதனத்தை நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

பெயர்மாற்றத்துக்குட்படும் ஆதனத்தின் மறு பகுதியானது **முருகேசு கார்த்திகேசு** பிரசித்த நொத்தாரிசு வே.நாகலிங்கம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 8288/17.03.1952 இலக்க உறுதியால் **வேலுப்பிள்ளை கணபதிப்பிள்ளை கைம்பெண் நாகம்மா** ஆகியவரிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**அப்புத்துரை கைம்பெண் வள்ளியம்மை மறுபெயர் வள்ளியாச்சி** பிரசித்த நொத்தாரிசு மு.க.சுப்பிரமணியம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 8302/08.01.1970 இலக்க உறுதியால் குறித்த **முருகேசு கார்த்திகேசுவும் பெண் கற்பகமும்** ஆகியவர்களிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த ஆதனமானது **அப்புத்துரை கைம்பெண் வள்ளியம்மை மறுபெயர் வள்ளியாச்சி** இறக்க குறித்த ஆதனம் அவரின் பிள்ளைகளாகிய **செல்வராசா பெண் விமலாவதி, பரமானந்தசிவம் அருந்தவம்** ஆகியோரை முதுசமாக சென்றடைந்தது. குறித்த **பரமானந்தசிவம் பெண் அருந்தவம்** இறக்க அவரது முதுசபங்கு அவரின் பிள்ளைகளான **மதிவதனன் பெண் யசோதா, சந்திரவதனன் பெண் தேவகி** ஆகியோரையும் சென்றடைந்தது.

குறித்த **கிருஷ்ணமூர்த்தி சேந்தன்** பிரசித்த நொத்தாரிசு வே.த.மு.கதிர்காமநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 15512/08.01.2016 ஆம் இலக்க உறுதியால் குறித்த **பொன்னம்பலம் செல்வராசாவும் பெண் விமலாவதியும், சிவபாலன் மதிவதனனும் பெண் யசோதாவும், சந்திரராசா, சந்திரவதனனும் பெண் தேவகியும்** ஆகியவர்களிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

மேற்படி இருபகுதி ஆதனங்களையும் ஒருங்கிணைத்து ஒரே ஆதனமாக **முருகையா கேசவன்** பிரசித்த நொத்தாரிசு சாருஜா சிவநேசன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 569/11.06.2018 ஆம் இலக்க உறுதியால் குறித்த கிருஷ்ணமூர்த்தி சேந்தன் ஆகியவரிடமிருந்து நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த **கிருஷ்ணமூர்த்தி சேந்தனும் பெண் சுமதியும்** பிரசித்த நொத்தாரிசு சாருஜா சிவநேசன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 570/11.06.2018 ஆம் இலக்க உறுதியால் குறித்த **முருகையா கேசவன்** ஆகியவர்களிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

**கிருஷ்ணமூர்த்தி சேந்தனும் பெண் சுமதியும்** ஆகியவர்கள் ஆதனப் பெயர் மாற்றத்துக்கு விண்ணப்பித்துள்ளார்கள்.

இவ் ஆதனப் பெயர்மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் **உரிய ஆவணங்களுடன் 30 நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும்** அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **கிருஷ்ணமூர்த்தி சேந்தனும் பெண் சுமதியும்** ஆகியவர்களுக்குப் பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்புக்கும் வலிகாமம் மேற்கு பிரதேச சபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**தவிசாளர்,**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை.**

(CS/18865)(11,17)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது கல்வி நிலையத்தின்
ஆசிரியரான
Best Wishes **பரமநாதன் பபிராஜ்** Best Wishes



அவர்கள் (29.07.2018) அன்று யாழ். பல்கலைக்கழகத்தில் இடம் பெற்ற பட்டமளிப்பு விழாவில் (B.A) பட்டத்தினைப் பெற்றமைக்காக அவரை பாராட்டி வாழ்த்துவதோடு மேலும் பல பட்டங்களை பெற்று வாழ்வில் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் :
நிர்வாகி, ஆசிரியர்கள், மாணவர்கள்,
குமரன் கல்வி நிலையம், கைதடி.

## கண்ணீர் அஞ்சலி



எமது வைத்தியசாலையின் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றிய

**இமானுவேல் மேரிலூயிஸ் அன்ரனி**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அனைத்து உள்ளங்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மலர்வு : 18.06.1976
உதிர்வு : 06.08.2018

வைத்திய அத்தியட்சகர்,
உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்,
ஆதார வைத்தியசாலை,
பருத்தித்துறை.

## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக, கலைப்பீடத்தின் வரலாற்றுத்துறை சிரேஷ்ட விரிவுரையாளரும், எமது சங்கத்தின் அங்கத்தவருமாகிய


**திருமதி சோமேசசுந்தரி கிருஷ்ணகுமார்**

அவர்கள் (06.08.2018) அன்று இறைபதமடைந்தார். என்பதை மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கின்றோம். அன்னாரின் குடும்பத்திற்கு யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்.**

## மரண அறிவித்தல்

### திருமதி சின்னமணி முருகுப்பிள்ளை



தோற்றம் 15.08.1926
மறைவு 06.08.2018

மயிலியதனையைப் பிறப்பிடமாகவும், கொம்மாந்துறை, கெருடாவில் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னமணி முருகுப்பிள்ளை நேற்று (06.08.2018) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முருகுப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான மகேந்திரன், குணேஸ்வரி மற்றும் பரமேஸ்வரி, சரஸ்வதி, குவேந்திரராஜா, இராசேந்திரம், புவனேஸ்வரி, மகேந்திரராஜா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத்தாயாரும் காலஞ்சென்றவர்களான திருச்செல்வம், நடராஜா, சோதிலிங்கம் மற்றும் புவனேஸ்வரி, சிவமலர், இராசதுரை, ஜீவராணி ஆகியோரின் அன்புமாமியும் சரோஜினிதேவி (சுவிஸ்), கிருஸ்ணகுமார், பத்மாவதி, ஆனந்தசிறி (பிரான்ஸ்), பத்மசிறி, வாணி ஜெயராஜசிறி, செல்வச்சந்திரன், அமுதினி, அனுசா (பிரான்ஸ்), நந்தகோபன், அபிராமி (நோர்வே), செந்தூரன் (ஆஸ்திரேலியா), அஜந்தன், தனரூபன், லோகேஸ்வரி, லோகேஸ்வரன், அருட்செல்வம், மங்களரூபி, வித்தியா (பிரான்ஸ்), கபிலன் (பிரான்ஸ்), கல்பனா (பிரான்ஸ்) காலஞ்சென்றவர்களான சந்திரகுமார், சோதீஸ்வரி ஆகியோரின் அன்புப்பேர்த்தியும ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.08.2018) செவ்வாய்க்கிழமை அவரின் கெருடாவில் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 10 மணிக்கு மயிலியதனை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கெருடாவில் தெற்கு,
தொண்டமானாறு.

தகவல்:
குடும்பத்தினர்.


**ஜயோதா**
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1489 சீட்டிழுப்பு திகதி 06.08.2018
வெற்றி இலக்கங்கள் 33 37 57 58 I
அடுத்த வியாழக்கிழமை ஜக்பொட்
ரூ 32, 328, 460/=

**Galaxy Star**
வெற்றி வாரம் 263 திகதி 05.08.2018
வெற்றி இலக்கங்கள் 08 04 26 47 60
அடுத்த ஞாயிற்றுக்கிழமை சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 3,789,128/-

**நியத ஜய**
சீட்டிழுப்பு வாரம் : 690 வர்ணம் : நீலம்
திகதி : 2018.08.03
வெற்றி இலக்கங்கள் 08 33 54 64 H
அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 13,238,692/-

**சனிக்கிழமை அதிர்ஷ்டம்**
வெற்றி வாரம்: 3066 திகதி: 2018.08.06 திங்கட்கிழமை
நீலம்
17 33 42 60 Q 54
36,041,455/-

**அத கோடிபதி**
சீட்டிழுப்பு வாரம்: 334 இன்றைய ஜக்பொட் பரிசு
வர்ணம் : சிவப்பு ரூ. 57,375,780/-
சீட்டிழுப்பு திகதி: 2018.08.06
வெற்றி இலக்கங்கள் 03 16 24 37 N


## மரண அறிவித்தல்



பிறப்பு 23 . 05 . 1932
இறப்பு 06 . 08 . 2018

### திருமதி ஜெயலட்சுமி பெனடிக்ற் பத்மநாதன்

நவாலியைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெயலட்சுமி பெனடிக்ற் பத்மநாதன் நேற்று(06.08.2018) திங்கட்கிழமை இறைவனடிசேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மருதலிங்கம் - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற துரையப்பா தம்பதிகளின் அன்பு மருமகளும், பத்மகதிரினி (பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான பத்மஜெகன், பத்மகுமாரன் மற்றும் பத்மராஜினி, பத்மஜெயந்தி (லண்டன்), பத்மரஞ்சினி (ஜேர்மனி), பத்மலிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயும், அறந்தவநாதன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற மாலினி மற்றும் யோகேஸ்வரி, அற்புதலிங்கம், மைக்கல் கன்டி (லண்டன்), சதீஸ்குமார் (ஜேர்மனி), ஜானகி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும், அருட்செல்வி (பிரான்ஸ்), ரமேஸ்குமார் (கொழும்பு), கலைச்செல்வி (கொழும்பு) - சிவகுமார் (பாரிஸ்), கதிர்ச்செல்வி - ரஜீவ் (ஜேர்மனி), மனோஜ்குமார் - கர்சினி (கொழும்பு), மயூரன் - மதுஷா (கொழும்பு), ஷானி - சுதேஷ் (கொழும்பு), தீபன் - கோபி (லண்டன்), வினு - இலக்கியா (கனடா), வேணுகரன், ரம்மியா - பாபு (லண்டன்), யோகதமிழ்மாறன் - நளினி (ஜேர்மனி), அற்புதராஜா, தாரணி, றொஷான் (லண்டன்), டினேஷ் (ஜேர்மனி), காணுகா (ஜேர்மனி), சோபிகா (ஜேர்மனி), லக்ஷன் (ஜேர்மனி), தனுஷ் (ஜேர்மனி), நிரேஸ் (ஜேர்மனி), யூலியா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், லக்ஷிகா, சிறோயன் (பாரிஸ்), டிறோனி (கொழும்பு), விதுஷா (ஜேர்மனி), மதுமிதா (ஜேர்மனி), அபிநிஷா (ஜேர்மனி), சுமிர், டைஷிகன், விபூசன் (லண்டன்), ரிலக்ஷன் (கனடா), அஸ்வின் (லண்டன்), ஆதீஷ் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.08.2018) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கனகசபை வீதி, மானிப்பாய்
(செல்லமுத்து விளையாட்டு மைதானம் முன்பாக)

தகவல்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்

021 225 6308


**ES Printers**
அனைத்தும் தனித்துவமான கனினி வடிவமைப்புடன்




மக் பிரிண்ட் (MUG) 450/=



Books Binding




பனர் பிரிண்ட் (Banner), 35/=

Banners

தொடர்புகளுக்கு,
021 492 7471,
021 492 7472
esprintersjaffna@gmail.com
357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# நம்பிக்கை; அதானே எல்லாம்

வாழ்க்கையில் தங்கள் இலட்சியத்தை அடையப்போராடும்போது பலரும் நம்பிக்கை இழந்துவிடுகிறார்கள். ஆனால் கேப்ரியல் ஹெரிடியா, தன்னுடைய குறைபாட்டைப் பொருட்படுத்தாமல் இலட்சியத்தை அடைவதில் வெற்றி கண்டிருக்கிறார்!

ஆர்ஜென்ரீனாவைச் சேர்ந்த 20 வயது முடிதிருத்தும் கலைஞர், முழங்கைகளுக்கு மேல் இல்லாமல்தான் பிறந்தார். ஆனாலும் அதை ஒரு குறைபாடாக அவரை நினைக்க விடாமல், அவரது குடும்பம் அன்பாகப் பார்த்துக்கொண்டது. இதனால் மகிழ்ச்சியாகவும் சுதந்திரமாகவும் வளர்ந்தார். அக்கம்பக்கத்திலும் பள்ளியிலும் இவருக்கு நல்ல மனிதர்கள் நண்பர்களாக அமைந்தனர்.


ஒருநாள் கூட, குறைபாட்டைச் சுட்டிக் காட்டி, இவர் மனதை அவர்கள் நோகடித்ததில்லை. இவரது தன்னம்பிக்கைக்கும் மகிழ்ச்சிக்கும் காரணம், இவரது அம்மாதான். அவர் முடிதிருத்தும் கலைஞராக வேலைசெய்துவந்தார். 14 வயதில் கேப்ரியலுக்கு முடிதிருத்தும் கலையில் ஆர்வம் வந்தது. கொஞ்சம் கொஞ்சமாக அம்மாவிடம் நுட்பங்களைக் கற்றுக்கொண்டார். பொழுதுபோக்குக்காகக் கற்றுக்கொள்கிறார் என்று எல்லோரும் நினைத்தனர். பிறகு தன்னுடைய வேலையாக இதை மாற்றிக்கொண்டார்.

"முதலில் தண்ணீர் குவளையை எடுத்துக் குடிக்கப் பழகினேன். பிறகு ஒவ்வொரு வேலையையும் நானே செய்யக் கற்றுக்கொண்டேன். நன்றாகப் படித்தேன். வளர்ந்த பிறகு பைக் ஓட்டக் கற்றுக்கொண்டேன். பிறகு காரை ஓட்டினேன். விதவிதமாக முடிதிருத்த ஆரம்பித்த பிறகு, எனக்காக ஒரு கடையை வைத்துக் கொடுத்தனர்.




ஒன்றரை ஆண்டுகள் அதில் பணியாற்றினேன். பிறகு ஆர்ஜென்ரீனா முடிதிருத்தும் கழகத்தில் இருந்து என்னைத் தொடர்புகொண்டனர். வறுமையில் வாடும் முடிதிருத்தும் கலைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கச் சொன்னார்கள். எல்லா வயது மனிதர்களுக்கும் நான் பயிற்சி அளித்தேன். அவர்களுக்குநல்லவேலை வாய்ப்பையும் உருவாக்கிக் கொடுத்தேன். இந்தப் பணி எனக்கு மிகவும் மனநிறைவை அளித்தது. என்னிடத்தில் முடிவெட்டுவதற்காக மக்கள் நீண்ட வரிசையில் காத்திருக்கிறார்கள். பலரும் என்னுடைய குறைபாட்டையும் மீறி, நான் எப்படி இவ்வளவு பெரிய ஆளாக மாறினேன் என்றும் எப்படி எப்போதும் உற்சாகமாக இருக்கிறேன் என்றும் கேட்கிறார்கள்" என்கிறார் கேப்ரியல்.





# பென்குவின்

பென்குவின்கள் பறக்க இயலாப் பறவை இனம் என்பது நாம் அறிந்த விடயம். இவை களின் உலகத்தில் 17 விதமான வகைப்பாடுகள் உண்டு. இவை பெரும்பாலும் அந்தாட்டிக்காவின் பனிப் பிரதேசத்தில் கூட்டமாக வாழ்கின்றன. நீருக்கடியில் இதன் நீச்சல் வேகம் என்பது மணிக்கு 24 கிலோ மீற்றர்களாகக் காணப்படுகிறது. இவற்றின் துடுப்புப் போன்ற கால்களும் இறக்கையும் வேகமாக நீந்த உதவுகின்றன. ராஜ வகை பென்குவின் பெயருக்கு ஏற்றாற் போலவே அழகிய உடல் அமைப்பினைக் கொண்டது. பெரிய தலை மற்றும் நீளமான அலகு கொண்டது. 3.7 அடி உயரமும் 41 கிலோ நிறையும் கொண்டது. சிறிய வகையினத்தைச் சேர்ந்தவை 16 இன்ச் உயரமுடையவை. இதன் நிறை ஒரு கிலோ மட்டுமே. குடும்பமாக வாழும் விலங்குகளுக்கு சிறந்த உதாரணமாக பென்குவின்கள் விளங்குகின்றன. தாய்ப் பறவை ஒரே ஒரு முட்டையைத் தந்தைப் பறவையிடம் கொடுத்து விட்டு இரை தேட கடலுக்குள் சென்று விடும். முட்டையைக் குஞ்சு பொரிக்கும் வரையாக பத்திரமாகப் பாதுகாப்பதும் மற்றும் மிதமான சூட்டிற்கு தன்கால்களுக்கு இடையே வைத்து அடைகாத்துக்கொள்வதும் தந்தைப் பறவையே. தாய்ப் பறவை ஏதேனும் உணவு கொண்டு வரும் வரையிலும் பசித்தாலும் இவை பொறுமை காக்கின்றன. குஞ்சு பொரிக்க 60நாள்கள் தேவைப்படும். அதுவரை இவை காத்திருக்க வேண்டிய தேவை ஏற்படுகிறது.

இவற்றின் உணவு மீன்கள் மற்றும் ஸ்கிவிட் எனும் கடல் உயிரிகளாக விளங்குகின்றன. உணவை அழகாகத்தூக்கிப் போட்டு பிடித்துச் சாப்பிடும். அந்தாட்டிக்காவின் உறை பனியில் வாழ்வதற்கேற்ற விதமாக இதன் உடல் அமைப்பு திடமான அத்த கொழுப்பைக் கொண்டுள்ளது. மேலும் அடர்த்தியான மயிர்களும் இவற்றைக் கடும் குளிரில் இருந்து பாதுகாத்துக்கொள்கின்றது. வால் பகுதியில் உள்ள ஒரு சிறப்பு உறுப்பில் எண்ணெய் போன்ற திரவம் சுரக்கிறது. இவை பென்குவினின் உடலை நீரால் நனையாமல் பாதுகாத்துக்கொள்வதாகச் சொல்லப்படுகிறது.

# காகிதத்தில் கப்பல் செய்து...



அடை மழை பெய்து கொண்டிருக்கிறது. அம்மாவை வீட்டில் காணோம். அப்பா ஏதோ அவசர வேலையொன்றில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார். அப்பாடா பாடசாலையால் வந்த நான் உடுப்புக்கூட மாற்றவில்லை. மெதுவாக நழுவிசமையல்அறைப் பக்கத்து தாழ்வாரத்துள் ஒதுங்கி விட்டேன். வீசும் காற்றால் பாடசாலை உடை பாதியளவில் நனைந்து நீர் சொட்டிக் கொண்டிருந்தது. அது எனக்கு ஒரு பொருட்டாக இல்லை. எழுதி முடித்த பள்ளிக்கூடக் கொப்பியொன்றை மறைத்து எடுத்து வந்தநான். அதன் நடு ஒற்றைப்பக்கத்தை கிழித்து கப்பல் செய்து கொள்கிறேன். சமையல் அறைத் தாழ்வாரத்தில் பெருக்கெடுத்து ஓடும் நீரில் உடனடியாக கப்பல் விடவேண்டும். இதுதான் இப்போதைய என் ஆசை. குளிர், காற்று , பசி எதுவும் இப்போது எனக்கு நினைவில்லை.

இதோ கப்பல் செய்துவிட்டேன். இது சிறியது. அதனால் இது தோணி. இதைவிட கொஞ்சம் பெரியது கப்பல். இந்த வேறுபாட்டை அயல் வீட்டு நண்பன் எனக்கு கற்றுத்தந்தான். தாழ்வாரத்தில் வழிந்தோடும் நீரில் நான் கொப்பியின் ஒற்றைகளைக் கிழித்துக் கிழித்து சிறிதும் பெரிதுமாக செய்த தோணிகளை வரிசையாக விட்டுக் கொண்டிருந்தேன்.

வரிசை கட்டிச் செல்லும் தோணிகள் சில தத்தளிக்கின்றன. சில தடுமாறுகின்றன சிலது மட்டும் வேகம் கொண்டு ஓடுகின்றன. சில தாழ்வாரத்தில் இருந்து விழுந்த பெரிய நீர்த் துளிகள் பட்டுச் சரிகின்றன. அவற்றை நிமிர்த்தியும் விடுகிறேன். சில காற்றால் சரிந்து நீரில் நனைந்து கிழிந்தும் விடுகின்றன. இப்போது இன்னும் சில கப்பல்களை அவசர அவசரமாகச் செய்து விடுகிறேன். திடீரென அப்பாவின் குரல் சற்று அதட்டலுடன் கேட்டது. சத்தமில்லாமல் மறைந்து நின்ற என்னை அவருக்கு எப்படித் தெரிந்தது. ஓ... நான் விட்ட கப்பல்கள் கடல்பக்கம் போகாமல் முற்றப் பக்கம் போய்விட்டன.

அதோ அப்பா தடியோடு வந்து கொண்டிருக்கிறார். ஒரு கையில் நான்விட்ட கப்பல் ஒன்று விரிந்து கணித ஒற்றையாக பல் இழிக்கிறது.

ஐயோ அப்பா... என அலறுகிறேன். கையில் அவர் கொண்டு வந்ததடி என் முதுகைப் பதம் பார்க்கிறது. அம்மா ஓடி வருகிறார். என்ன இது கப்பல் விட்டதுக்கா இந்த அடி அடிக்கிறீங்கள்? தடியை அவரிடம் இருந்து பறித்து அம்மா என்னைக் காப்பாற்றி விட்டாள். நான் அழுதபடி அம்மாவைக் கட்டிக் கொள்கிறேன். என் கைகளில் இருந்த கொப்பியைப் பறித்தெடுத்த அப்பா இதோ பார் கப்பல் விட்டதுக்கு அடித்தேனா? இல்லை. இன்றைய கணக்குக் கொப்பியைக் கிழித்துத்தான் இவ்வளவு கப்பலும் விட்டுள்ளான். என உறுமியபடி உள்ளே போய்விட்டார் அப்பா. இப்போதுதான் நான் எழுதி முடித்த பழைய கொப்பி என நினைத்து தற்போதைய கணக்குக் கொப்பியைக் கிழித்திருந்த தவறு எனக்குப் புரிந்தது. இப்போது அடியால் என் உடல் வலிக்கவில்லை. மனம் மிகவும் வலிக்கிறது.

# போதனை



நோயுற்றுக் கிடந்த தன் குருவைக் காணச் சென்றான் இளந்தத்துவ ஞானி லோ ஒட்சே. தனக்குச் சொல்ல வேண்டிய உபதேசம் ஏதும் இருந்தால் சொல்லுமாறு குருவிடம் வேண்டிக் கொண்டார்.

குரு தனது பொக்கவாயை அகலத் திறந்து காட்டினார். பிறகு ஒட்சேயிடம் கேட்டார் "பற்கள் இருக்கின்றனவா?"

"இல்லை" என்றார் ஒட்சே

"நாக்கு மட்டும் இருக்கிறதா?" குரு கேட்டார்

"ஆமாம் இருக்கிறது" ஒட்சே

"காரணம் சொல்ல முடியுமா?" என்று கேட்டார் குரு

"நாக்கு மென்மையாக இருந்ததால் நிலை பெற முடிந்தது. பற்கள் கடினமாக இருந்தமையால் விழுந்துவிட்டன" ஒட்சே பதிலளித்தார்,

"உனக்கு உபதேசம் தேவையில்லை" என்றார் குரு


காரணம் புரிந்ததா? உங்களுக்கு அதாவது வலியதான பற்கள் முறிந்துவிட்டன மெலியதான நாக்கு வளைந்து கொடுத்ததால் நிலைத்து நிற்கிறது.



# பூக்களின் நிறங்களைக் கொண்டு தாவரங்களை இனம்காணல்

- வெள்ளை நிறப் பூக்கள் - மல்லிகை, கடுபுல், புடோல்
- இளஞ்சிவப்பு நிறப் பூக்கள் - ரோசா, பட்டிப்பூ, அந்தூரியம்
- சிவப்பு நிறப் பூக்கள் - செவ்வரத்தை, எக்சோரா
- மஞ்சள் நிறப்பூக்கள் - பூசணி, பூவரசு, சூரியகாந்தி
- செம்மஞ்சள் நிறப்பூக்கள் - மாதுளை, நெருப்புவாகை, கனகாம்பரம், எக்ரோசா
- ஊதா நிறப்பூக்கள் - ஆனை வணங்கி ஓரிதழ், தாமரை கடதாசிப்பூ ஓர்க்கிற் பூ.

# புள்ளிகளை இணைத்துப் படத்தை முழுமை செய்வோம்






# குழந்தைகளே கேளீர்

குடை பிடித்துச் செருப்புமிட்டு
புத்தகமும் கொண்டு
குடுகுடென நடந்து வரும்
குழந்தைகளே கேளீர்
மழைகாலம் வழி வழுக்கும்
மிகக் கவனம் மக்காள்
வழியருகே வெள்ளமுண்டு
விலகி வரவேண்டும்
வெள்ளத்திலே கல்லெறிந்து
விளையாட வேண்டாம்
வீண் சண்டையால் வழுக்கி
விழுந்தெழும்ப வேண்டாம்
கண்மணிகாள் நீர்ச்சிரங்கு
காலில் வரும் கவனம்
கண்ணுறக்கம் இல்லாமல்
விழித்திருக்க வேண்டும்
அம்மா சொல் தட்டாமல்
ஆசிரியற்கு அடங்கி
ஆசையுடன் பள்ளியிலே
படித்துவர வேண்டும்

## புதிய...

முன்னாள் அமைச்சருமான ஜி.எல்.பீரிஸ் கொழும்பில் பொதுஜன பெரமுன தலைமை அலுவலகத்தில் நேற்று நடத்திய ஊடகச் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்துள்ளதாவது:

இரகசியமாகத் தயாரிக்கப்படும் புதிய அரசமைப்பால் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும். அதனால் நாட்டுக்குப் பெரும் ஆபத்தே ஏற்படும். புதிய அரசமைப்புத் தொடர்பில் எனக்கு இரகசிய ஆவணம் ஒன்று கிடைத்துள்ளது - என்றார். (ற-21)

## வடக்கு...

முடிவெடுத்தது. இதையடுத்து நாளைய தினம் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

வடக்கு மாகாண மீன்பிடி மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்தவர் பா.டெனீஸ்வரன். வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவரைப் பதவி நீக்கம் செய்துவிட்டு புதிய அமைச்சரவை ஒன்றை நியமித்தார். இதையடுத்து தன்னை அமைச்சரவையில் இருந்து நீக்கியமை சட்டப்படி செல்லாது எனவும் தானே தொடர்ந்தும் சட்டப்படியான அமைச்சர் என உத்தரவிடக்கோரியும் மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்தார் டெனீஸ்வரன்.

இந்த வழக்கை விசாரித்த மேன்முறையீட்டு நீதிமன்ற அமர்வு வழக்காளி கோரியபடி அவர் தொடர்ந்தும் அமைச்சராகப் பதவி வகிக்கிறார் என்று இடைக்கால உத்தரவு பிறப்பித்தது. டெனீஸ்வரன் வகித்த அத்தனை அமைச்சுக்களுக்கும் டெனீஸ்வரனே தொடர்ந்தும் அமைச்சராவார் என மன்று கட்டளையிட்டது.

ஆனால் நீதிமன்றம் உத்தரவிட்ட பின்னரும்கூட டெனீஸ்வரன் தனது அமைச்சுப் பொறுப்புகளை ஏற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் எவையும் வடக்கு மாகாண சபையினால் எடுக்கப்படவில்லை. இந்த விடயத்தில் தனக்கு அமைச்சர்களை நியமிக்கவோ விலக்கவோ உரிமை இல்லை என்று நீதிமன்றம் தெரிவித்துவிட்டதால் தான் டெனீஸ்வரனை அமைச்சராக நியமிக்கவோ ஏற்கனவே உள்ள அமைச்சர்களில் ஒருவரை விலக்கவோ நடவடிக்கை எடுக்க முடியாது என்று முதலமைச்சர் தெரிவித்திருக்கிறார். அத்தோடு டெனீஸ்வரன் விடயத்தில் வடக்கு மாகாண ஆளுநரே தவறிழைத்தார் என்றும் அவரே இந்தப் பிரச்சினையைச் சரிசெய்யவேண்டும் என்றும் முதலமைச்சர் கூறி வருகின்றார்.

ஆளுநரோ, நீதிமன்ற உத்தரவுக்கு அமைய அமைச்சரவையை அறிவிப்பதற்கு ஏதுவாக அமைச்சர்களின் பெயர்களைப் பரிந்துரைக்குமாறு முதலமைச்சரிடம் கேட்டபோதும் அவர் அதனைச் செய்யாததன் காரணமாகவே இந்தப் பிரச்சினை தீர்க்கப்படவில்லை என்று கூறி வருகின்றார்.

இப்படி இரு தரப்பினரும் மாறி மாறிப் பந்தைத் தள்ளிவரும் நிலையில் நீதிமன்ற உத்தரவை அலட்சியப்படுத்தி அவமரியாதை செய்திருக்கிறார்கள் என்று தெரிவிக்கும் வழக்கை டெனீஸ்வரன் முதலமைச்சருக்கு எதிராகவும் தனது அமைச்சுப் பொறுப்புக்களைக் கைவசம் வைத்திருக்கும் இரு அமைச்சர்களுக்கு எதிராகவும் நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தாக்கல் செய்திருக்கிறார். வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், அமைச்சர்களான சிவநேசன், அனந்தி ஆகியோர் மீதே குறித்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. எனினும் டெனீஸ்வரனின் அமைச்சுப் பதிவி தொடர்பில் இடம்பெறும் வழக்கு நாளையதினம் மன்றில் எடுத்துக்கொள்ளப்படவுள்ளதால் அன்றைய தினமே நீதிமன்ற அவமதிப்பு வழக்கும் எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-21,105)

## நுண்நிதி...

கவோ தமது கிராமத்துக்குள் யாரும் நுழையக்கூடாது என்று தெரிவித்திருக்கின்றனர்.

நுண் நிதி நிறுவனம் ஒன்றால் வழங்கப்பட்ட கடனுக்கான தவணைக் கட்டணத்தைப் பெற்றுக்கொள்ள வந்த நிறுவன ஊழியர்கள் கிராம மக்களால் திருப்பிஅனுப்பப்பட்டனர்.

இதனால் நுண்நிதி நிறுவன ஊழியர்களுக்கும், ஊர்ப் பெண்களுக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டது.

கடனை அறவிட வந்த ஊழியர்களை கிராமத்துக்குள் வர வேண்டாம் என்று கூறியபெண்கள் வழமையாகக் கடன் அறவிடும் வீட்டினுள்ளும் அனுமதிக்கவில்லை. "கிராமத்துக்குள் வந்து இனிமேல் கடன்வழங்க வேண்டாம். கடனை அறவிடுவதாயின் கடன்பெற்றவர்களை நிறுவனங்களுக்கு அழைத்து அறவிட்டுக்கொள்ளுங்கள்" என்று கிராம மக்கள் திட்டவட்டமாகத் தெரிவித்தனர். பொலிஸாருக்கும் இது குறித்துத் தகவல் வழங்கினார்.

"நுண்நிதிக் கடன்களால் பல பிரச்சினைகள் எமது கிராமத்தில் ஏற்பட்டுள்ளன. ஒருவர் 5க்கும் மேற்பட்ட நிறுவனங்களிடம் கடன்களைப் பெற்றுள்ளார். கடனைச் செலுத்துவதற்காகவே சிலர் கடன்களைப் பெறுகின்றனர். வருமானம் வருகின்ற வழிமுறையைப் பார்க்காமல் கடன்வழங்கப்பட்டுள்ளது. நுண்நிதி நிறுவனத்தின் ஊழியர்கள் மாலை நேரம் வரை ஊருக்குள்ளேயே நிற்கின்றார்கள். இதனால் பல பிரச்சினைகள் பெண்களுக்கு ஏற்படுகின்றன. இதனால் பாரதூரமான விளைவுகள் ஏற்படாமல் முன்கூட்டியே தவிர்க்கும் விதமாக எமது கிராமத்துக்குள் இனிமேல் எந்த நிறுவனமும் கடன்களை வழங்கும் நோக்குடனோ அல்லது வழங்கிய கடனுக்கான கட்டணத்தை அறவிடும் நோக்குடனோ வருகைதரக்கூடாது. கடன்களை அறவிடுவதென்றால் நிறுவனங்கள் உரியவர்களைத் தமது அலுவலகத்துக்கு அழைத்து பெற்றுகொள்ள முடியும் - என்றனர். (உ-21,110)

## அரசை...

டான் பிரதேசத்துக்கு உட்பட்ட கரிப்பட்டமுறிப்பு புதியநகர் பகுதியில் நேற்று இடம்பெற்ற நூலகத் திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எல்லோரிடமும் ஒரு கேள்வி இருக்கின்றது இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ன செய்தது என்று. இது எம்மக்களிடம் விதைக்கப்படும் நஞ்சுவிதை. எமது மக்கள் ஒதுக்கப்பட்டு செட்டிகுளம் முகாம்களில் இலையான்களுக்குள் அடைக்கப்பட்டார்கள். என் கண்முன்னே எத்தனையோ பேர் உயிரிழந்துள்ளார்கள் அவர்களை வெளியில் மீட்டெடுக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வந்தது. விடுதலைப்புலிகளின் காலத்தில் இந்த மண் அவர்களின் கைகளில் இருந்த பொழுது எந்த வசதியும் இல்லாது கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டும் மக்கள் பணம் இன்றி இருக்கவில்லை. எப்படி இருந்தாலும் வாழமுடியும் என்பதை வாழ்ந்து காட்டியவர்கள் விடுதலைப்புலிகள். அந்த மண்ணில் வாழ்ந்தவர்கள் நாங்கள். விடுதலைப்புலிகளின் முடிவுக்குப் பின்னர் மக்கள் பிரச்சினையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தாங்கள் கையில் எடுத்தது.

இந்தியாவுடன் சண்டைபிடித்து கலந்துரையாடி வடக்கு கிழக்கு மக்களுக்காக ஐம்பதாயிரம் வீட்டுத்திட்டங்கள் கொண்டுவந்ததும் கூட்டமைப்பே. இதனை நான் ஏன் சொல்கின்றேன் என்றால் கேள்வி கேட்பவர்களுக்கு நாங்கள் சொல்லவேண்டிய விடயமிது. வெள்ளை வான் கடத்தல்கள் ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் கண்டபடி இடம்பெற்றது. பிடித்துச் சுட்டார்கள், விசாரணை இன்றிச் சித்திரவதை செய்தார்கள். புலனாய்வாளர்கள் என்ற போர்வையில் சிங்கள இளைஞர்களை இறக்கிவிட்டு ஆட்சி செய்தவர்கள். அவர்களின் அராயக ஆட்சியை ஒழித்தது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. நாம் ஒன்றிணைந்தோம் அவர்களைத் தூக்கி எறிந்தோம். ஒட்டு மொத்த தமிழ்மக்கள் போட்ட வாக்குகளும் நாங்கள் நினைத்த ஒருவருக்கு வீழ்ந்தது. அதற்காக அவர்கள் சிறந்தவர்கள் என்று சொல்லவில்லை ஒரு பிசாசை அடித்துக் கலைப்பதற்காக ஒரு பேயை ஆதரித்தோம் அவ்வளவுதான்.

இன்று தமிழ் மக்களுக்கான உரிமைகளை நிலைநாட்டி இருக்கின்றோம் இப்போது எவரையும் கைதுசெய்ய முடியாது கைதுசெய்வதாக இருந்தால் அதன் ஆணை வழங்கப்படவேண்டும். குடும்பத்துக்கு தெரியப்படுத்த வேண்டும். எதற்காகக் கைது. எங்கு கொண்டுசெல்லப்படுகிறோம் என்று எழுத்துமூலம் தந்த பின்னர்தான் இந்த அரசு யாரையும் கைதுசெய்ய முடியும்.

இந்த அரசைக் கொண்டுவந்தது அவர்களிடம் பிச்சை எடுப்பதற்கு அல்ல எங்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கு. உரிமைகளை வென்றெடுக்கப் பல வழிகள் உண்டு ஆனால் மக்களின் பாதுகாப்புக்காக இந்த அரசை மாற்றி இருக்கின்றோம் - என்றார். (21,ரி3)

## சட்டம்...

கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

இன, மத சகவாழ்வின் ஊடாக நிலையான நாடு என்ற தொனிப்பொருளின் கீழ் சிறப்பு மாநாடொன்று நேற்றுக் காலை கண்டியில் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது

நாட்டில் வாழும் அனைத்து இனத்தவர்களின் அபிலாஷைகளை நாம் உறுதிப்படுத்த வேண்டும். அவ்வாறு உறுதிப்படுத்தும் போதே சீரான நாட்டை எம்மால் உருவாக்க முடியும். அதற்காக நாம் முயற்சிகளைச் செய்ய வேண்டும். ஆகவே அனைத்து இனத்தவர்களின் அபிலாஷைகளை மதிக்கும் நாடாக இலங்கையை மாற்றியமைக்க வேண்டும். இலங்கையைப் போன்று நாம் முன்னேற வேண்டும் என்ற நோக்கத்துடன் சிங்கப்பூர் செயற்பட்டு தற்போது பன்னாட்டு அளவில் முன்னேற்றம் கண்டுள்ளது.

ஆனால் இலங்கையின் நிலைமை தற்போது கவலைக்கிடமாக மாறியுள்ளது. இந்த நிலைமையை நாம் மாற்ற வேண்டும். இலங்கையின் அடையாளத்தை நாம் பன்னாடுகள் வரை கொண்டு செல்ல வேண்டும். இதன்படி அனைத்து இனத்தவர்களும் ஒற்றுமையாக இலங்கையராக வாழ்ந்தால் இலங்கையை முன்னேற்ற முடியும். இதனூடாக பன்னாடுகள் சவால்களை எம்மால் வெற்றிக்கொள்ள முடியும் - என்றார். (ற-21)

**அலுவலக உதவியாளர் தேவை**

திருநெல்வேலியில் இயங்கும் கல்வி நிறுவனம் ஒன்றிற்கு கணினி அறிவுள்ள அலுவலக உதவியாளர் (பெண்) தேவை.- 0773867458

**கண்ணீர் அஞ்சலி**



மலர்வு 17.01.1956 உதிர்வு 06.08.2018

மாரியம்மன் வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகக் கொண்ட

(சிரேஷ்ட பொதுஅறைத் தலைவி)

**சோமேசசுந்தரி கிருஸ்ணகுமார்**

(சிரேஷ்ட விரிவுரையாளர், வரலாற்றுத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

அவர்கள் நேற்று (06.08.2018) திங்கட்கிழமை இறைபதம் அடைந்துள்ளார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவைப் பகிரும் :

**சிரேஷ்ட பொதுஅறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

**மரண அறிவித்தல்**



**ஸ்ரீதரன் ஸ்ரீரஞ்சன்**

(உரிமையாளர் - ரஞ்சன் ஜுவல்லரி - City Lodge - சாவகச்சேரி)

சங்கத்தானை சாவகச்சேரியை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட ஸ்ரீதரன் ஸ்ரீரஞ்சன் நேற்று (06.08.2018) திங்கட்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் ஸ்ரீதரன் - சிவபாக்கியலட்சுமி தம்பதியினரின் அன்பு மகனும் ஜிஜேக்ஷயாவின் பாசமிகு தந்தையும் ஸ்ரீரஞ்சினி, ஜெயலதா, ரவீந்திரன், சந்திரசேகர் ஆகியோரின் அன்புச்சகோதரரும் இராகவன், இராஜேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (07.08.2018) செவ்வாய்க்கிழமை பி.ப. 2.00 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல் :

சங்கத்தானை, சாவகச்சேரி. குடும்பத்தினர்.

**மாபெரும் இசைநிகழ்ச்சி**



அர்ச்சனா | ரமணி அம்மா | வர்ஷா | ஜஸ்கரன் சிங்

ஆகஸ்ட் 11 மாலை 4.00 மணிக்கு குஞ்சர்கடை கொலின்ஸ் விளையாட்டுக்கழக மைதானம், நெல்லியடி.

ஆகஸ்ட் 12 மாலை 4.00 மணிக்கு வெலிங்டன் தியேட்டர் சதுக்கம் [லிங்கம் கூல்பார் முன்பாக] யாழ்ப்பாணம்.

Rs 300/= Rs. 500/= Rs. 1000/= மற்றும் VIP டிக்கெட்ஸ்

K.T.Prasath - 078 612 5929, 071 381 5114

Event Management - Ceylon Art Creation ( K.T.பிரசாத்)


# திறனறி

## வாழ்வியல் முறையில் உணர்வுகளின் மதிப்பீடு

செ.கயல்

'உணர் திறனறிவு' என்பது நாம் எவ்வாறு எங்களுடையதான உணர்வுகளையும், மற்றவர்களின் உணர்வுகளையும் புரிந்து கொண்டு இறுதிவரை அவர்களுடனான உறவுகளைப் பேணுவது என்பதனை குறிக்கிறது. 'டானியல் கோல்மேன்' என்ற அமெரிக்க உளவியல் நிபுணர் இதனை 5 கூறுகளாக பிரித்துள்ளார். அவற்றை பின் வருமாறு சொல்லிவிட முடியும்

தன்னையறிதல்
சுயகட்டுப்பாடு
ஊக்கமுடமை
சமூக அறிவு
பச்சாதாபம்



**தன்னையறிதல்**

தன்னையறிதல் என்பது ஓர் சிறந்த கலை. பிறரை அறிந்தவன் புத்திசாலி, தன்னை அறிந்தவன் ஞானி என்பது சீனத்து ஞானி ஒருவரின் வாக்காக சொல்லப்படுகி றது. நான் என்னை அறிந்து கொள்கிறேன் என்று சொல்லிவிட்டு அதனைக் கூறியபடியே புத்தரைப் போல போதி மரத்தடியை தேடிச் செல்ல வேண்டிய தில்லை.

தன்னையறிதல் என்பது நாம் எங்களுடையதான உணர்வுகள், விரு ப்பங்கள், வெறுப்புகள், வாழ்வியல் முறைமை, ஆளுமைத் திறன், பலம், பலவீனம் போன்ற வற்றை தெரிந்து கொண்டும் புரிந்து கொண்டும் வைத்திருப்பதே. சில வழிமுறைகள் மூலமாக இதனை புரிந்து கொள்ளலாம் என்கின்றனர் அறிவியலாளர்கள்.

நாம் எம்மிடமும், பிறரிடமும் நேர்மையாக இருக்க வேண்டும். நேர்மையாக இருத்தல் என்பது தன்னை அறிந்து கொள்ள நாம் எடுக்கும் முதல் செயல்.

பிறர் எம்மைப் பற்றி ஏன் இப்படி நினைக்கிறார்கள் என்பதை அவர்கள் இடத்தில் இருந்து கொண்டு தெரிந்து கொள்ளுதல். ஒருவேளை அவர்கள் சொல்வது சரியென்றால் எம்மை மாற்றிக் கொள்ள வேண்டும், தவறு என்றால் புரிய வைக்க வேண்டும்.

> இன்றைய இயந்திரத்தனமான வாழ்க்கைச் சுற்றோட்டத்தின் இடையே அலுவலகத்தையும், இல்லத்தையும், நண்பர்களையும் நிர்வகிக்க உணர் திறனறிவு' மிகவும் தேவையான ஒன்றாக காணப்படுகிறது. சித்திரமும் கைப் பழக்கம் என்பது போல நிறைவான பயிற்சியின் ஊடே இதனை வளர்த்துக் கொள்ளலாம்.

கடந்த கால நிகழ்வுகளின் மூலம் நாம் செய்த தவறுகளை அறிந்து கொண்டும் புரிந்து கொண்டும் வருங்காலத்தில் அதே தவறை செய்யாமல் தடுக்க வேண்டும்.

எந்த நிகழ்வில் எப்படி நடந்து கொண்டோம், ஏன் அது போல நடந்தது என்பன தொடர்பில் குறிப்பு எடுத்துக் கொள்வதன் மூலம், எம்மைப் பற்றி தெரிந்து கொள்ளாலாம்.

**சுயகட்டுப்பாடு**

சுயகட்டுப்பாடு என்பது நாம் எவ்வாறு எம்மிடத்தான உணர்வுகளை சரியான முறையில் வழிநடத்துதல் என்பதிலும் அவை தாண்டி சரியான மற்றும் ஏற்றுக் கொள்ளத்தக்க முறையில் வெளிப்படுத்துவதும் ஆகும். உதாரணமாக எங்களுள் ஒருவர் மேலாளராக அல்லது தலைமை அதிகாரியாக இருக்கும் வங்கியில் மிகவும் திறைமையான ஊழியர் ஒருவர் நெடுநாள்களாக வேலை செய்கிறார். ஒரு நாள் ஓர் கலந்துரையாடல் இடம்பெறுகிறது. அவர் தெரியாமல் செய்த சிறு பிழைக்காக பொது இடம் என்ற உணர்வின்றி திட்டி விடுகிறோம். அவரும், இதை மிகப்பெரிய அவமானமாக கருதிய அந்த நபர் வேலையை விட்டு செல்கின்றார்.

உண்மையிலே அவரைப்போலவே இன்னொருவர் கிடைக்க பல வருடங்கள் தேவைப்படலாம். ஆக, இந்தச் செயல்நிலைகள் உங்களுக்கும் இழப்பு அவருக்கும் இழப்பாக அமைந்துவிடுகிறது. இதனையே நாம் அவரை தனிமையில் அழைத்து தவறுகளைச் சுட்டிக்காட்டி இருந்தால் அவரும் வேலையில் நீடித்திருப்பார். எங்களுக்கும் இழப்பு ஏற்பட்டிருக்காது. எனவே உணர்வுகளை சரியான முறையில் வெளிப்படுத்துவது மிகவும் அவசியம். உணர்வுகளை கட்டுப்படுத்தி, அதனை சரியான முறையில் வெளிப்படுத்த வேண்டும். சுயக்கட்டுப்பாட்டு தொடர்பிலான வழிமுறைகள் சிலவற்றை நாம் பின்பற்றலாம்.

- அறியாமையோடு வேண்டுமென்றே சிலவற்றைச் செய்தல். குறிப்பாக மருத்துவர் தினமும் நடக்கச் சொல்லியிருக்கிறார். சோம்பேறிதனத்தின் காரணமாக நடக்க விருப்பமே இல்லை. ஆனாலும் நடந்தே ஆக வேண்டும். இப்படிப்பட்ட நிலையிலே கடைக்குச் செல்லும் போது வேண்டும் என்றே வண்டிச்சாவியை வீட்டிலேயே வைத்துவிட்டு வரவேண்டும். இவ்வாறு திட்டமிட்டுச் செய்வதன் மூலம் எங்களைக் கட்டுப்படுத்தலாம்.
- நீங்கள் எந்த நேரங்களில் அல்லது இடங்களில் உங்களையே அறியாமல் நடந்து கொள்கிறீர்கள் என்பதை தெரிந்து கொண்டு அத்னை தவிர்த்தல்.
- எப்போதெல்லம் உணர்ச்சிகளை கட்டுப்படுத்த முடியாமல் போகிறது என்பதை குறிப்பெடுத்துக் கொள்ளுதல் வேண்டும். மறுமுறை அதே போலவே நடந்தால் முன்பு செய்த தவறை எப்படி திருத்திக் கொள்வது என்பதை திட்டமிடுதல்.
- எம்மைக் கட்டுப்படுத்த முடியாத நேரங்களில், ஆழ்மூச்சுப் பயிற்சி, பத்திலிருந்து கீழாக எண்ணுதல், தியானம், ஓர் நிமிட மௌனம், பிடித்தமான பாடலை அசைபோடுதல் போன்றவற்றைச் செய்வதன் ஊடே எம்மைக் கட்டுப் படுத்திக் கொள்ள முடியும்.

**ஊக்கம்**

ஊக்கமிருந்தால் ஊக்கு விற்பவன் கூட தேக்கு விற்பான் என்பது எம்மிடையே இருந்துவருகின்ற பழமொழி. அடுத்தவர்கள் எம்மை ஊக்குவிக்காவிட்டாலும் எம்மை நாமே ஊக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். இல்லையெனில் எம்மிடம் எதிர்மறையான எண்ணங்கள்வலுப்பெற்றுவிடும். தூக்கமின்மை, உடல்மற்றும்மனச்சோர்வு, உணவை அறவே வெறுத்தல், மன அழுத்தம், மன உளைச்சல், சிந்தனைக் குறைபாடு என்பன எதிர்மறை எண்ணங்களால் தோற்றம் பெறுகின்ற விளைவுகள். இந்தத் திறனை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

- இயல்பு நிலையை விட்டு விலகி நாம் வெளியே வரவேண்டும். புதியனவற்றை செய்ய வேண்டும். விளைவுகளைப் பற்றி கவலை கொள்ளாமல் இருக்க வேண்டும்.
- தவறு செய்யாமல் எவராலும் இருக்க முடியாது. அதே போன்று செய்த தவறை நினைத்து மனம் ஒடிந்து போய் விடக்கூடாது. மாறாக அந்தத் தவறு எதனால் நடந்தது. அதை எவ்வாறு சரி செய்வது, வருங்காலத்தில் எவ்வாறு தவிர்ப்பது என்பது குறித்து திட்டமிடுதல்.
- பிரச்சினைகள் இல்லதா மனிதர்களே இல்லை எனலாம். அந்தவகையிலே மனம் கலங்காமல் துவண்டு போகாமல் எதையும் எதிர்கொள்ளும் மன உறுதியையும், நேர்மறை என்ணங்களையும் வளர்த்துக் கொள்ள வேண்டும்.
- தொடங்கிய செயலை முடிக்க வேண்டும், எந்தச் சூழலிலும் அதனை இடைநடுவே நிறுத்திவிடக் கூடாது.
- எங்களுடைய அறிவையும், திறன்களையும் வளர்த்துக் கொள்ள வேண்டும்.
- எங்களுடைய குறிக்கோள்களை சித்திரங்களாகவும், படமாகவும், வரைந்தும், எழுதியும் வைத்துக் கொள்ளுதல் சிந்தனையைத் தூண்டும். எங்களுடைய அறையின் சுவற்றில் வைத்திருப்பது என்பது குறிக்கோளை நோக்கியதாக சிந்தனைவெளிகளை உந்தித் தள்ளும்.
- தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ளுதல்.

**சமூக அறிவு**

மனிதன் என்பவன் ஓர் சமூக விலங்கு. அவனால் தனியாக எதுவும் செய்துவிட முடியாது. எப்போதும் அவன் சமூகத்தைச் சார்ந்துதான் இருந்தாக வேண்டும். ஆகவே, எமக்கான சமூக அறிவு என்பது மிகவும் தேவையான ஒன்றாக காணப்படுகிறது.

உண்மையிலேயே சமூக அறிவு என்பது நாம் எவ்வாறு பிறரின் உணர்வுகளை நிர்வாகம் செய்கிறோம் என்பதாகும். சமூக அறிவை வளர்த்துக்கொள்ள சில வழிமுறைகளை நாம் பின்பற்றிக்கொள்ளலாம்.

- பிறர் சொல்வதை கவனத்துடன் கேட்டல். கேட்பதைப் போல நடித்தலன்றி உண்மையான விருப்பத்துடன் கேட்டல்..
- நீங்கள் எப்படி நடத்தப்பட வேண்டும் என எண்ணுகிறீர்களோ அதுபோல பிறரையும் நடத்துங்கள். நடத்தப் பழகிக் கொள்ளுங்கள்.
- எந்தச் சூழலிலும் நேர்மறையான எண்ணங்களோடு இருத்தல்.
- நகைச்சுவை உணர்வை வளர்த்துக் கொள்ளுதல்.
- புதியவர்களை நண்பர்களாக்கிக் கொள்ளுதல்.


**பச்சாதாபம்**

பச்சாதாபம் என்பது நாம் எவ்வாறு மற்றவர்களின் உணர்வுகளை புரிந்து கொள்வதும் எம்முடைய செயல்கள் எவ்வாறு ஏனையவர்களை பாதிக்கும் என்பதை அறிந்து கொள்வது மாகும்.

பிறருடன் மனம் விட்டு பேசுதல். அவர்கள் சொல்வதை முழுமையாகவும், முழு விருப்பத்துடனும் கேட்டல்.

- ஒருவர் பேசுவதற்கு முன்பாக குறுக்கே பேசக்கூடாது. ஏதேனும் கேள்விகள் இருப்பின், அவர் பேசியபின் கேட்கலாம்.
- எங்களுடைய உணர்வுகளை புரிந்து கொள்ளுதல்.
- பிறரின் நிலையையும் அவர்கள் இடத்திலிருந்தே புரிந்து கொள்ளுதல்.
- வாசிப்புப் பழக்கத்தினை வளர்த்துக் கொள்ளுதல்.
- கேட்டால் மட்டுமே அறிவுரை வழங்குதல்.

ஆக, இன்றைய இயந்திரத்தனமான வாழ்க்கைச் சுற்றோட்டத்தின் இடையே அலுவலகத்தையும், இல்லத்தையும், நண்பர்களையும் நிர்வகிக்க உணர் திறனறிவு மிகவும் தேவையான ஒன்றாக காணப்படுகிறது. சித்திரமும் கைப்பழக்கம் என்பது போல நிறைவான பயிற்சியின் ஊடே இதனை வளர்த்துக் கொள்ளலாம்.



# நோய்க்கிருமிகளை விரட்டும் தக்காளி



பழுத்த தக்காளி பழத்தில் விற்றமின் 'சி' அதிகமாய் இருக்கிறது. சிறுநீர் எரிச்சல், மேக நோய், உடலில் வீக்கம், உடல் பருமன், நீரிழிவு, குடல் கோளாறுகள், கல்லீரல் கோளாறுகள் முதலிய நோய் உள்ளவர்கள் 5, 6 பழங்களைச் சிறிது தண்ணீர் விட்டு சாறாக்கி அருந்தினால் நோய் குணமாகும். நாக்கு வறட்சியும் அகலும் உடலும் மினுமினுப்பாய் மாறும். உடல் பருமன் குறையும்!

பழத்தில் கல்சியம், பொஸ்பரஸ், விற்றமின் 'சி', விற்றமின் 'ஏ' முதலியவை அதிக அளவில் உள்ளன. இதனால் உடலுக்குச் சத்துணவு கிடைக்கும். 100 கிராம் தக்காளிப் பழத்தில் கிடைக்கும் கலோரி 20 என்பதால் எவ்வளவு சாப்பிட்டாலும் உடல் பருமன் அதிகரிக்காது.

உடல் பருமனைக் குறைக்க விரும்புகிறவர்கள் தொடர்ந்து ஓரிரு மாதங்கள் காலைப் பலகாரமாய் பழுத்த இரு தக்காளிப் பழங்களைச் சாப்பிட்டால் கொழுத்த சரீரம் கட்டுப்படும். எடை கூடாது. காரணம், அதில் மாவுச்சத்து குறைவாய் இருப்பதுதான். அத்துடன் உடலுக்கு மேற்கண்ட தாது உப்புகளும், விற்றமின்களும் கிடைத்துவிடுகின்றன.

தக்காளி உடலில் உள்ள நோய்க்கிருமிகளை முற்றிலும் அடித்து விரட்டுகிறது. அதனால்தான் உலகம் முழுவதும் விரும்பிப் பருகப்படும் பானங்களுள் தக்காளிச் சாறும் ஒன்றாய் இருக்கிறது.

தக்காளிச்சாறு நீரிழிவுக்காரர்களின் சிறுநீரில் சர்க்கரையின் அளவைக் கட்டுபடுத்துகிறது. இரவு நேரத்தில் பார்வை சரியாகத் தெரியாதவர்கள் தக்காளிச்சாறு சாப்பிடவேண்டும். பறித்த தக்காளிச் செடியின் இலைகளை 15 நிமிடங்கள் சுடுதண்ணீரில் வைக்கவும். பிறகு, வடிகட்டி தண்ணீரில் ஒரு தேக்கரண்டி மட்டும் சாப்பிடவும். செடியின் தண்டை அரைத்து, அதில் வினிகரையும் கலந்து மார்புகளின்மீது வைத்துக் கட்ட வேண்டும். இதனால் தாய்ப்பால் நன்கு சுரக்கும்.

காலையில் எழுந்ததும் ஏற்படும் காய்ச்சல், பித்த வாந்தி, கல்லீரல் ஆகியன தொடர்பாக ஏற்படும் மஞ்சள் காமாலை, மலச்சிக்கல், உணவு செரியாமை, வாயுத்தொந்தரவு, நெஞ்செரிச்சல் முதலியவை குணமாக ஒரு குவளை தக்காளிச் சாறு போதும். காலையில் வெறும் வயிற்றில் தலா ஒரு சிட்டிகை உப்பு, மிளகுத்தூள் சேர்த்து இந்தச் சாற்றை அருந்த வேண்டும்:காச நோய், நுரையீரல் நோய், ஆஸ்துமா போன்ற மூச்சுக் குழல் நோய்களும் இந்தச் சாறால் குணமாகின்றன.

பூண்டு, இஞ்சி, சீரகம், மிளகு, உப்பு ஆகியவற்றைச் சேர்த்து நல்லெண்ணெயில் தக்காளி சூப்பாகவும் அருந்தலாம். இந்த முறையும் உடலுக்கு நல்லதே. நோயின் போது ஏற்படும் நாக்கு வறட்சிக்கு இப்படித் தக்காளி சூப் மிகவும் நல்லது. தக்காளியில் உள்ள இரும்புச்சத்து எளிதில் ஜீரணமாகிறது. அத்துடன் முழுமையாக உடலில் கலந்துவிடுகிறது. இதனால் குருதிச் சோகை நோயாளிகள் விரைந்து குணமாகிறார்கள்.





பெண்களுக்கான சாறிவகைகள் சில சந்தைக்கு அறிமுகமாகியுள்ளன. இவை ஆயிரத்து 900 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.



# சுவாச உறுப்புகளுக்கு பலம் தரும் தனுராசனம்

**பெயர் விளக்கம்**

'தனுர்' என்றால் வில் என்று பொருள் இந்த ஆசனத்தில் உடலை வில் போல் வளைப்பதால் தனுராசனம் என்று அழைக்கப்படுகிறது.

**செய்முறை**

முதலில் தரை விரிப்பின் மேல் குப்புறப்படுக்கவும். தலையை மேலே தூக்கி தாடையை தரைவிரிப்பின் மேல் வைக்கவும். இருகால்களையும் மடக்கி வலது கைவிரல்களால் வலது கணுக்காலையும், இடது கை விரல்களால் இடது கணுக்காலையும் பிடித்துக் கொள்ளவும். இந்த நிலையில் 23 முறை மூச்சை ஆழமாகவும் நிதானமாகவும் இழுத்துவிடவும். மூச்சை வெளியேவிட்டு மடக்கிய கால்களை அப்படியே மேலே தூக்கவும். அப்படி தூக்கும்போது தலையிலிருந்து மார்புவரை உள்ள உடல் பகுதியையும் மேலே தூக்க வேண்டும். வயிற்றுப் பகுதி மட்டும் தரை விரிப்பின் மேல் பதிந்திருக்க வேண்டும். கண்களால் மேல் நோக்கி பார்க்கவும். இந்த ஆசன நிலையில் நிதானமாக ஆழமான மூச்சுடன் 30 முதல் 60 வினாடி நிலைத்திருக்கவும். பிறகு மூச்சை வெளியே விட்டு வந்து அதிலிருந்து ஓய்வு நிலைக்கு செல்லவும். இந்த ஆசனத்தை 23 முறை பயிற்சி செய்யலாம்.

**கவனம் செலுத்த வேண்டிய இடம்**

அடி வயிறு, தொடைகள், முதுகுத்தசை மற்றும் மூச்சின் மீதும் விசுத்தி, அனாஹதம் அல்லது மணிபூர சக்கரத்தின் மீதும் கவனம் செலுத்தவும்.

**பயிற்சிக் குறிப்பு**

பொதுவாக பருமனானவர்களும், பெருந்தொந்தி உள்ளவர்களும் கால்களை மடக்கி கணுக்கால் பகுதியை கைவிரல்களால் பிடிப்பதற்கு இயலாது. அத்தகையவர்கள் மற்றொருவரின் துணை கொண்டு எட்டாத காலை மெதுவாக பிடித்துக் கொடுக்கச் சொல்லி சில நாள்கள் பயிலலாம். அல்லது ஒரு காலை மட்டும் மாற்றி மாற்றி பிடித்து சில நாள்கள் பயிற்சி செய்யலாம். சிலருக்கு கால்களை கை விரல்களால் பிடித்துக் கொள்ள வரும். ஆனால் உடலை மேலே தூக்கும் போது தொடைகள் மேலே எழும்பாது. அத்தகையவர்கள் மார்பைக் கீழ் நோக்கியும் தொடைகளை மேல் நோக்கியும் கொண்டு வந்து உடனே தொடைகளை கீழே இறக்கி மார்பை மேலே தூக்குவதுமாக சிலமுறை உடலை மேலும் கீழுமாக ஆட்டி செய்து வந்தால் சில நாட்களில் தனுராசனம் சரியாக செய்ய வந்து விடும்.

**தடைகுறிப்பு**

உயர் குருதி அழுத்தம், குடல் பிதுக்கம், வயிறு, குடல் புண், இருதய பலவீனம், குடல் வீக்கம், விரை வாதம் உள்ளவர்கள் இந்த ஆசனத்தை செய்யக்கூடாது.

**பயன்கள்**

முதுகெலும்பைச் சார்ந்த எல்லா நாடி நரம்புகளுக்கும் சுத்தமான குருதி பரவி நரம்பு மண்டலம் முழுவதும் உறுதி அடைகிறது. முதுகெலும்பின் நடுப்பாகம் நன்கு வளைக்கப்படுவதால் எந்த வயதிலும் இளமையோடு சுறுசுறுப்பாக இருக்க முடிகிறது. சுவாச உறுப்புகள் பலம் பெறும். சுவாசக் கோளாறுகளுக்குப் பயனுள்ளது.

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்



| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 1000 | 1000 | 1200 | 1000 |
| நண்டு | 600 | 500 | 700 | 600 |
| கணவாய் | 800 | 900 | 1000 | 1000 |
| பாரை | 700 | 900 | 800 | 1100 |
| சுறா | 900 | 900 | 1200 | 1200 |
| சீலா | 500 | 500 | 700 | 400 |
| விளை | 600 | 500 | 700 | 700 |
| முரல் | 400 | 400 | 600 | 500 |
| கும்பிளா | 400 | 350 | 500 | 300 |
| கிளாக்கன் | 800 | 400 | 600 | 600 |
| ஒரா | 400 | 500 | 600 | 500 |
| திரளி | 250 | 300 | 300 | 250 |
| நகரை | 250 | 300 | 500 | 250 |
| சூடை | 180 | 150 | 300 | 150 |
| ஒட்டி | 300 | 300 | 400 | 400 |
| திருக்கை | 350 | 300 | 500 | 400 |
| மதனம் | 250 | 300 | 300 | 300 |
| கொய் | 200 | 100 | 100 | 100 |
| பாலை | 250 | 300 | 700 | 300 |
| வாளை | 200 | 300 | 500 | 200 |

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | கன்னாகம் | மருதனார்மடம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|
| கத்தரி | 120 | 90 | 100 | 100 |
| முள்ளங்கி | 80 | 80 | 120 | 120 |
| மரவள்ளி | 40 | 40 | 40 | 40 |
| பயிற்றை | 120 | 80 | 40 | 100 |
| பாகல் | 280 | 160 | 180 | 240 |
| க.கிழங்கு | 100 | 100 | 220 | 120 |
| பெ.வெங்காயம் | 100 | 105 | 140 | 110 |
| சி.வெங்காயம் | 120 | 120 | 140 | 140 |
| பூசணி | 40 | 80 | 100 | 60 |
| தக்காளி | 180 | 160 | 100 | 160 |
| வாழைக்காய் | 70 | 80 | 80 | 80 |
| கீரை | 20 | 20 | 10 | 20 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 40 | 40 |
| ப.மிளகாய் | 400 | 400 | 300 | 500 |
| புடோல் | 110 | 70 | 100 | 100 |
| கோவா | 150 | 180 | 180 | 160 |
| வெண்டி | 100 | 50 | 100 | 100 |
| போஞ்சி | 300 | 250 | 260 | 280 |
| லீக்ஸ் | 240 | 150 | 140 | 180 |
| தேங்காய் | 70 | 50 | 60 | 70 |
| உ.கிழங்கு | 100 | 100 | 100 | 100 |
| தேசிக்காய் | 80 | 50 | 40 | 50 |
| வல்லாரை | 20 | 40 | 15 | 20 |
| கறிமிளகாய் | 280 | 200 | 300 | 300 |
| கரட் | 280 | 300 | 320 | 180 |
| முருங்கைக்காய் | 200 | 120 | 60 | 180 |




# சென்றலைட்ஸ் மகுடம் சூடியது

யாழ்ப்பாணம், ஓக. 7
யாழ்ப்பாண மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்திய பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான கூடைப்பந்தாட்டத் தொடரில் ஆண்கள் ஏ பிரிவில் யாழ்ப்பாணம் சென்றலைட்ஸ் அணி கிண்ணம் வென்றது.



யாழ்ப்பாணம் பழைய பூங்காவில் அமைந்துள்ள கூடைப்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணியைஎதிர்த்துஜொலிஸ்ரார்விளையாட்டுக் கழக அணி மோதியது.
நான்கு கால்பாதிகளைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது கால்பாதியில் 18:16 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முன்னிலை வகித்தது ஜொலிஸ்ரார். இரண்டாவது கால்பாதி 12:06 என்ற புள்ளிகளின் அடிப்படையில் சென்றலைட்ஸிடம் சென்றது. முதல் பாதியின் முடிவில் 28:24 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முன்னிலை வகித்தது சென்றலைட்ஸ்.
மூன்றாவது கால்பாதியில் 22:20 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முன்னிலை வகித்தது ஜொலிஸ்ரார்.
நான்காம் கால்பாதி ஆட்டத்தில் சென்றலைட்ஸ்விளையாட்டுக்கழக அணி 22:17 என்ற புள்ளி அடிப்படையில் முன்னிலை வைகித்தது. முடிவில் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணி 70:63 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது. (ம-23)

# வென்றது பற்றிக்ஸ்

யாழ்ப்பாணம், ஓக. 7
இலங்கை பாடசாலைகள் கால்பந்தாட்டச் சம்மேளனத்தினால் நடத்தப்படும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி வெற்றிபெற்றது.
யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து கொழும்பு அல் ஹமிடியா கல்லூரி அணி மோதியது. இதில் 2:1 என்ற கோல் கணக்கில் சென். பற்றிக்ஸ் கல்லூரி வெற்றி பெற்றது. (ம-23)

# நவஜீவன்ஸ் அபாரம்

யாழ்ப்பாணம், ஓக. 7
பொலிகை பாரதி விளையாட்டுக் கழகம் நடத்திய கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் நவஜீவன்ஸ் அணி வெற்றிபெற்றது.
பொலிகை பாரதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழக அணி மோதியது. 2:0 என்ற கோல் கணக்கில் நவஜீவன்ஸ் அணி வெற்றிபெற்றது. (ம-23)



# நேதாஜி அணி வென்றது

யாழ்ப்பாணம், ஓக. 7
றெயின்போ விளையாட்டுக் கழகம் நடத்திய அணிக்கு 9 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத்தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதி ஆட்டத்தில் நேதாஜி அணி வெற்றிபெற்றது.
றெயின்போ விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் நேதாஜி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து றெயின்போ விளையாட்டுக் கழக அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களில் இரண்டு அணியினரும் ஏதுவித கோல்களையும் பதிவுசெய்யாதவிடத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 4:1 என்ற கோல் கணக்கில் நேதாஜி அணி வெற்றிபெற்று கிண்ணம் வென்றது.
ஆட்ட நாயகனாக றெயின்போ அணியின் பிரகாஷ், தொடராட்ட நாயகனாக நேதாஜி அணியின் தர்சன் சிறந்த கோல் காப்பாளராக நேதாஜி விளையாட்டுக் கழகத்தின் கோல் காப்பாளர் ஜிவிந்தன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (ம-23)

# பமிலியன்ஸ் அணி கிண்ணம் வென்றது






யாழ்ப்பாணம், ஓக. 7
யாழ்ப்பாண மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்திய தொடரில் பெண்கள் ஏ பிரிவில் பமிலியன்ஸ் அணி கிண்ணம் வென்றது.
யாழ்ப்பாணம் பழைய பூங்காவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் பமிலியன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஜமகா விளையாட்டுக் கழக அணி மோதியது. நான்கு கால்பாதிகளைக் கொண்டதாக இறுதியாட்டம் அமைந்தது. முதலாவது கால்பாதியில் 18:16 என்ற புள்ளிகளின் அடிப்பமையில் முன்னிலை வகித்தது பமிலியன்ஸ் அணி. இரண்டாவது பாதியும் 20:16 என்ற புள்ளிகளின் அடிப்படையில் பமிலியன்ஸ் அணியிடம் சென்றது. முதல் பாதியின் முடிவில் 38:32 என்ற புள்ளிகளின் அடிப்படையில் பமிலியன்ஸ் அணி முன்னிலை வகித்தது.
மூன்றாவது கால்பாதியை 18:14 என்ற புள்ளிகளின் அடிப்படையில் தனதாக்கியது ஜமகா விளையாட்டுக் கழக அணி. நான்காவது கால்பாதி 16:15 என்ற புள்ளிகளின் அடிப்படையில் பமிலியன்ஸிடம் சென்றது. முடிவில் 68:65 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்று கிண்ணம் வென்றது பமிலியன்ஸ். (ம-23)

## போராடித் தோற்றதால் பெருமையே

*கோக்லி தெரிவிப்பு*



இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் இந்திய அணி தோல்வியடைந்த போதிலும் அந்த அணி சிறந்த போராட்டத்தை வெளிப்படுத்தியமை தொடர்பில் திருப்தி தெரிவித்தார் இந்திய அணியின் தலைவர் விராட் கோக்லி.

"இந்த டெஸ்ட் மிகவும் சிறப்பானது. இந்த ஆட்டத்தில் நாங்கள் பலமுறை திறமையை வெளிப்படுத்தினோம். ஆனால் இங்கிலாந்து வீரர்கள் எங்களைவிட சிறப்பாக செயல்பட்டனர். நாங்கள் இன்னும் கொஞ்சம் கவனம் செலுத்தி விளையாடி இருக்கலாம். இந்த டெஸ்டில் நாங்கள் போராடி தோற்றது பெருமை அளிக்கிறது. இந்த போராட்டம் பிடித்திருக்கிறது. நாங்கள் இந்த டெஸ்டில் சாதகமான அம்சங்களை எடுத்துக்கொள்வோம். மிகப்பெரிய தொடரில் இது போன்ற தொடக்கம் பெருமையானது. பின்வரிசையில் விளையாடும் வீரர்கள் நிறைய கற்றுக்கொள்ள வேண்டும்" என்று கோக்லி மேலும் தெரிவித்தார். (ம)

## வரலாற்று வெற்றி

*ரூட் பெருமிதம்*



"இந்தியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் கிடைத்த வெற்றி வரலாற்றுச் சிறப்பான வெற்றி" என்று தெரிவித்தார் ஜோ ரூட்.

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் ஆட்டம் இங்கிலாந்தின் ஆயிரமாவது டெஸ்ட் ஆட்டம். இதனால் இந்த ஆட்டத்தில் வெற்றிபெற வேண்டும் என்ற கௌரவச் சிக்கல் இங்கிலாந்துக்கு இருந்தது. ஒரு கட்டத்தில் இந்தியா வெற்றிபெறும் என்கிற நிலை இருந்தது. எனினும் இறுதிக் கட்டத்தில் ஒருவாறு வெற்றிபெற்றது இங்கிலாந்து. இதையடுத்துக் கருத்துத் தெரிவிக்கையிலேயே ரூட் இவ்வாறு தெரிவித்தார்.

"இந்த ஆட்டம் எமக்கு முக்கிய ஆட்டம். வரலாற்றில் மறக்க முடியாத ஆட்டம். அந்த ஆட்டத்தில் வெற்றிபெற்றமை மிகவும் பெருமை. மறக்க முடியாத ஆட்டமாக இது அமைந்தது" என்று ரூட் மேலும் தெரிவித்தார். (ம)



# மே.இ.தீவுகளை வீழ்த்தி பங்களாதேஷ் சம்பியன்

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான மூன்றாவது ரி20 ஆட்டத்தில் வெற்றிபெற்று 2:1 என்ற அடிப்படையில் கிண்ணம் வென்றது பங்களாதேஷ் அணி.

பங்களாதேஷ் அணி மேற்கிந்தியத் தீவுகளுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்தது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையில் மூன்று ஆட்டங்களைக் கொண்ட ரி20 தொடர் நடைபெற்றது. முதலாவது ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகளும், இரண்டாவது ஆட்டத்தில் பங்களா தேஷும் வெற்றிபெற்று 1:1 என்ற நிலையில் இருந்தன. மூன்றாவது ஆட்டம் நேற்று நடைபெற்றது. இந்த ஆட்டத்தில் வெற்றிபெறும் அணியே சம்பியன் என்ற காரணத்தால் இந்த ஆட்டம் பெரிதும் எதிர்பார்க்கப்பட்டது.



நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணி 5 இலக்குகள் இழப்புக்கு 184 ஓட்டங்களைப் பெற்றது. டாஸ் 61 ஓட்டங்களை யும், மகமதுல்லா ஆட்டமிழக்காமல் 32 ஓட்டங்களையும், சகிப் அல் ஹசன் 24 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பிரீத்வைட், பவல் இருவரும் தலா 2 இலக்குகளையும், வில்லியம்ஸ் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 17.1 பந்துப்பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 135 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் மழை குறுக்கிட்டது. இதையடுத்து டக்வோர்த் லூயிஸ் முறைப்படி 19 ஓட்டங்களால் வென்றது பங்களாதேஷ். (ம)



## ஸ்ரோக்ஸிடம் கற்றுக்கொள்ள பாண்டியாவுக்கு சப்பல் அறிவுரை

"பாண்டியா ஸ்ரோக்ஸிடம் இருந்து அதிகம் கற்றுக்கொள்ள வேண்டும்" என்று தெரிவித்தார் முன்னாள் வீரர் இயன் சப்பல்.

"இந்திய அணி வேகப்பந்து வீச்சு சகலதுறை வீரரைத் தேடும் பணியை இன்றும் செய்துகொண்டேதான் உள்ளது. பாண்டியா இன்று வரையில் இந்த இடத்தை முழுமையாக நிவர்த்தி செய்யவில்லை. கோக்லியுடன் இணைந்து இரண்டாவது இன்னிங்சில் பாண்டியா சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். பாண்டியாவை ஆறாவது இடத்தில் களம் இறக்கினால், அவருக்கு துடுப்பாட்டத்தில் நம்பிக்கை அதிகரிக்கும். இங்கிலாந்துக்கு எதிரான தொடரை பாண்டியா நன்கு பயன்படுத்த வேண்டும்" என்று சப்பல் மேலும் தெரிவித்தார். (ம)

# இரண்டாவது ஆட்டத்தில் இல்லை ஸ்ரோக்ஸ்

இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்துக்கான இங்கிலாந்து அணியில் இருந்து விடுவிக்கப்பட்டார் ஸ்ரோக்ஸ்.

இந்திய அணி இங்கிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான முதலாவது ஆட்டத்தில் இங்கிலாந்து அணி வெற்றிபெற ஸ்ரோக்ஸ் முக்கிய பங்காற்றினார். பந்துவீச்சில் மிகச் சிறந்த பெறுதியை வெளிப்படுத்தினார். குறிப்பாக இரண்டாவது இன்னிங்ஸில் கோக்லியை வீழ்த்தியமையால் இங்கிலாந்தின் வெற்றிக்கு முக்கிய காரணமாக மிளிர்ந்தார் ஸ்ரோக்ஸ். இந்த நிலையில் இரண்டாவது ஆட்டத்தில் இருந்து ஸ்ரோக்ஸ் விடு விக்கப்பட்டதால் இங்கிலாந்து அணி தடுமாறும் என்றே கருதப்படுகிறது.

களியாட்ட விடுதியொன்றில் நபரொருவருடன் கைகலப்பில் ஈடுபட்ட குற்றத்துக்கான வழக்கின் விசாரணைக்காக நீதிமன்றுக்குச் செல்ல வேண்டிய தேவையுள்ளதாலேயே ஸ்ரோக்ஸ் விடுவிக்கப்பட்டார். ஸ்ரோக்ஸுக்குப் பதில் வீரராக வோக்ஸ் களமிறங்குவார் என்று அறிவிக்கப்பட்டது. (ம)



# கோக்லியை வீழ்த்தும் திட்டத்தை வெளிப்படையாக்கினார் பெய்லிஸ்

## சக வீரர்களிடம் இருந்து அழுத்தத்தை ஏற்படுத்தத் திட்டம்

இங்கிலாந்து அணியின் தலைமைப் பயிற்சியாளர் பெய்லிஸ், இந்திய அணியின் தலைவர் கோக்லியை ஆட்டமிழக்கச் செய்யும் திட்டத்தை வெளிப்படையாகவே அறிவித்தார்.



இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான முதலாவது ஆட்டத்தில் இங்கிலாந்து அணிக்கு மிகப்பெரும் அச்சுறுத்தலைக் காட்டினார் கோக்லி. தோல்வி பயத்தைக் கண்டு மீண்டது இங்கிலாந்து. முதல் இன்னிங்ஸில் 149 ஓட்டங்கள், இரண்டாவது இன்னிங்ஸில் 51 ஓட்டங்கள் என்று ஒட்டு மொத்தமாக 200 ஓட்டங்களைக் குவித்தார் கோக்லி. இதனால் இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் கோக்லியைக் கட்டுப்படுத்த வியூகம் வகுக்கிறது இங்கிலாந்து. இந்த நிலையில் பெய்லிஸ் சிலபல கருத்துக்களை வெளிப் படுத்தியுள்ளார்.



"உலக கிரிக்கெட்டில் விராட் கோக்லி மட்டும் சிறந்த வீரராக இல்லாமல் இருந்திருந்தால், அவரை எப்போதோ எங்கள் வீரர்கள் ஆட்டமிழக்கச் செய்திருப்பார்கள். முதல் டெஸ்ட் ஆட்டத்தில் இரு இன்னிங்ஸிலும் விராட் கோக்லியின் துடுப்பாட்டம் மிக அற்புதமாக இருந்தது. அதை வர்ணிக்க முடியாது. ஆதலால், அடுத்துவரும் ஆட்டங்களில் எங்கள் உத்தியை மாற்றிக்கொள்ள இருக்கிறோம். விராட் கோக்லிக்கு கொடுக்கும் நெருக்கடியை, அணியில் உள்ள மற்ற வீரர்களுக்கு நாங்கள் கொடுக்கப் போகிறோம். அவர் களுக்குப் பந்துவீச்சில் நாங்கள் கொடுக்கும் நெருக்கடியால், அவர்கள் இலக்கை இலகுவாக இழப்பார்கள். அந்த அழுத்தம் முழுவதையும் கோக்லி மீது சுமத்துவார்கள். இதனால், கோக்லிக்கு தானகவே அழுத்தம் அதிகரிக்கும். இலக்கை இழப்பார். இதுதான் எங்கள் யுத்தியாகும். மற்ற வீரர்களுக்கு மட்டுமே எங்களால் நெருக் கடி இருக்கும். விராட் கோக்லிக்கு மற்ற வீரர்களால் அழுத்தம் ஏற்படும்.

இந்திய அணி சிறந்த வீரர்களைக் கொண்டுள்ளது. ஆனால், அவர்கள் தேவையில்லாமல் ஆட்டமிழந்தார்கள். அதுபோன்ற தவறைத் திருத்திக்கொண்டு விளையாடுவார்கள் என நம்புகிறேன். எங்கள் அணியினரும் சுழற்பந்துவீச்சைக் கண்டு அஞ்சுகிறார்கள். ஆதலால், சுழற்பந்து வீச்சை எதிர்கொள்வது குறித்து தீவிரமான பயிற்சி எடுத்து வருகிறோம். அஸ்வினின் வலது கை சுழற்பந்து வீச்சை சமாளிக்கத் திறமையான வலதுகை வீரர் தேவை. என்பதால்தான் டேவிட் மலானை நீக்கிவிட்டு ஆலிவர் போப்பை இரண்டாவது ஆட்டத்தில் சேர்க்கத் திட்ட மிட்டுள்ளோம்" என்று பெய்லிஸ் மேலும் தெரிவித்தார்.

(ம)

**விற்பனைக்கு**

XTXXXX என்ற இலக்கமுடைய **Honda CD 200** மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு.
வேலைகளும் பூர்த்தியாகிய நிலையில் விற்பனைக்குண்டு.
சிவமணி மோட்டோர்ஸ்
077 471 6660

**முகாமையாளர் தேவை**

No.235/7, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தியில் அமைந்துள்ள **" சௌபாக்கியா விலா"** இற்கு **இரவு நேர முகாமையாளர்** தேவை.
வயது 45 இற்கு மேல்.
விடுதி அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
077 019 9118

**விரைவு பொதிகள் சேவை**

விசேட விலை குறைப்பு
UK- 550 /-Kg
கனடா-900 /-Kg
ஜேர்மனி-700 /-Kg
நெதர்லாந்து-700 /-Kg
0768226240
V2 TRAVELS




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.08.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.